பக்கங்கள் 24

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 357 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 2, செவ்வாய் 18.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

காலநிலை

நாட்டின் பெரும்பாலான கடலோரப் பகுதிகளில் இடி மற்றும் காற்றுடன் கூடிய மழை காணப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு கரையோரமாகவும் மழைபெய்யலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. வடமேற்கு கரையோரமாக மழைக்கான சாத்தியம் நிலவுவதாகவும் காற்றின் வேகம் மணிக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

### மன்னார் போராளி கொலை விவகாரம்

# தீவிர விசாரணை வளையத்தினுள் பிரதேச செயலர், கிராம அலுவலர்

## சுட்டவரையும் மடக்கியதாக பொலிஸ் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 16
முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் கொலை தொடர்பில் பிரதேச செயலர் ஒருவர் மற்றும் கிராம அலுவலர் உட்பட மேலும் மூன்று பேரிடம் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நான்கு பேருக்கு மேலதிகமாக இந்த மூவரிடமும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.
மன்னார் வெள்ளாங்குளம் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலரான சிவனேசன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். கிராம அலுவலரான தனது கணவர் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பதை அவரது மனைவி 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.
இந்தக் கொலை வழக்கில் பிரதேச செயலர் ஒருவரும் தீவிர விசாரணை வளையத்திற்குள் உள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழருக்கு மதிப்புமிக்க விருது



*கொழும்பு, நவ. 18*
*அமெரிக்க இராணுவத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானியாகப் பணியாற்றும், இலங்கைத் தமிழரான கலாநிதி பரஞ்சோதி ஜெயக்குமார் பொறியியல்துறையில் மதிப்புமிக்க உலகளாவிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*
*க்லாநிதி ஜெயக்குமார் அமெரிக்க இராணுவத்தின் டாங்கிகள் வடிவமைப்பு ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பொறியியல் நிலையத்தில், விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார். இவர்*

❖22 ஆம் பக்கம் பார்க்க

# பொது எதிரணியை ஆதரிக்காது மு.கா.

## நாடாளுமன்றத் தேர்தலின்போதே தீர்க்கமான முடிவாம்

கொழும்பு, நவ.18
ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணிக்கு ஆதரவு வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனைகள் சிலவற்றை முன்வைத்துவிட்டு ஆதரவு வழங்குவது என்ற முடிவை எடுத்துள்ளது என்று நம்பகரமாக அறிய முடிகின்றது.
இந்த அறிவிப்பை தற்போதே விடுத்தால், அரசியல் ரீதியாக நெருக்கடிகள் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டே இது விடயத்தில் அக்கட்சி மௌனம் காத்து வருகின்றது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதனால் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு யாருக்கு என்பது தொடர்பில் கடும் போட்டி

❖22 ஆம் பக்கம் பார்க்க

### சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில்

# நேரில் பார்த்த குழு விரைவில் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 18
சுன்னாகம் பிரதேசத்தில் கழிவு ஒயில் பாதித்த கிணறுகளைப் பார்வையிட்ட கொழும்பிலிருந்து வருகை தந்த குழுவினர், அது தொடர்பிலான அறிக்கை விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

❖22 ஆம் பக்கம் பார்க்க

# மின் நிலையத்தை ஏன் மூடக் கூடாது?

## காரணம் கேட்கின்றது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், நவ 18
சுன்னாகத்தின் மின் உற்பத்தி நிலையத்தில் வெளியாகும் கழிவு ஒயில் பிரச்சினை தொடர்பான வழக்கில், நீருடன் ஒயில் கலப்பதனை நிவர்த்திசெய்யுமாறு விடுத்த சில கோரிக்கைகளை மின்சார சபையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
அதேவேளை, அது தொடர்பான மற்றைய வழக்கில் குறித்த மின் உற்பத்தி நிலையங்களை ஏன் மூடக்கூடாது என்பதற்குக் காரணம் கூறுமாறு நீதிமன்று பணித்துள்ளது.
சுன்னாகம், ஏழாலை, மல்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## தரம் 5 வெட்டுப்புள்ளி குறைப்பு

யாழ்ப்பாணம், நவ. 18
இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு 150 புள்ளிகளாகவும், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு 149 புள்ளிகளாகவும்

❖22 ஆம் பக்கம் பார்க்க



## எச்சரிக்கை மணி அடித்தார் ரத்ன தேரர்

பக்கம் 21

# வடக்கு புறக்கணிப்பு

## உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துவதற்கான நிதி கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 18
வடக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துவதற்கென வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் கொழும்பு அரசு புறக்கணித்துள்ளது என்று குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு அரசால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் நிதி கடந்த ஜனவரி மாதம் முதல் ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்

❖19 ஆம் பக்கம் பார்க்க



# புலிகளுடன் பேசுமாறு மஹிந்தவே கூறினார்

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு எரிக் சொல்ஹெய்ம் பதிலடி

யாழ்ப்பாணம், நவ. 18
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு பலமுறை என்னைக் கேட்டுக் கொண்டார் என்று தெரிவித்துள்ள நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளுக்கு நோர்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. குழுவின் விசாரணையில் இலங்கை அரசு அதிருப்தி

கொழும்பு, நவ.18
இலங்கை குறித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொழில் நேர்த்திக்கு உட்பட்ட வகையில் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் இலங்கை அரசு, அது குறித்த தமது அதிருப்தியை வெளியிடுவதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நாவின் வதிவிட இணைப்

❖19 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.தே.கட்சியிலிருந்து விலகுவதற்குத் தயார்

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகவுள்ளேன் என்று கூறியுள்ள ஐ.தே.க தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜெயசூரிய, தான் இடைக்கால ஜனாதிபதியாக 6 மாதங்கள் மாத்திரமே பதவி வகிப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.
ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும்,

❖17 ஆம் பக்கம் பார்க்க

## பிசுபிசுத்த முதலீட்டு முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 18
பொதுநலவாய மாநாட்டின் மூலம், முதலீடுகளை ஈர்ப்பதற்கு இலங்கை எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. இலங்கையால் சமர்ப்பிக்கப்பட்ட 50 திட்டங்களில் இதுவரையில் இரண்டு

❖22 ஆம் பக்கம் பார்க்க

'மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச்செய்யும் ஒன்றாகும்'
-ஜ.ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க எழுத்தாளர்)

# ஊடகங்கள் இலங்கையில் கட்டுப்படுத்தப்படவில்லை

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா

கொழும்பு, நவ.18
இலங்கையில் ஊடகங்களை கட்டுப்படுத்தவோ அல்லது செய்திகளை தணிக்கை செய்வதற்கோ எந்தவிதமான நிறுவனங்களும் இயங்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நாட்டில் இன்று ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குகின்றன என்றும் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவு திட்டம் மீதான தகவல் ஊடகத்துறை அமைச்சின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,
நாட்டில் இன்று இலத்திரனியல் ஊடகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வானொலி, தொலைக்காட்சி, சேவைகள் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இவற்றில் அரசுக்கு எதிரான கடுமையான விமர்சனங்கள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.
இணையத்தளங்கள் இயங்குகின்றன. பல இணையத்தளங்கள் அரசுக்கு சேறு பூசுகின்றன. ஆனால், அரசு இவற்றை தடை செய்யவில்லை. அனைத்து ஊடகங்களும் சுதந்திரமாக இயங்குகின்றன.
ஜனநாயக முறைமையில் ஊடகங்களுக்கு வரையறை கிடையாது. ஐ.தே. கட்சி ஆட்சிக் காலத்தில்தான் ஊடகங்கள் தடை செய்யப்பட்டன. தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இலங்கையில் ஊடகங்களை கட்டுப்படுத்தவோ அல்லது செய்திகளை தணிக்கை செய்வதற்கு அதிகாரிகளோ நிறுவனங்களோ கிடையாது. அனைத்து ஊடகங்களும் சுதந்திரமாக இயங்குகின்றன. ஒவ்வொரு ஊடகவியலாளருக்கும் தனிப்பட்ட கருத்துக்கள் அரசியல் இருக்கும். ஆனால், ஊடகவியலாளர் இதற்கு அப்பாற்பட்டு உண்மைத் தன்மையுடனான செய்திகளை வெளியிட வேண்டும்- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தள்ளி வைக்கப்பட்டுள்ளது

## மாதுலுவாவே சோபிததேரரின் வருகைக்காக

கொழும்பு, நவ.18
அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது, இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது நாளை 19ஆம் திகதிவரை தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சமாதானத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் வண. மாதுலுவாவே சோபிததேரர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதை அடுத்தே, நேற்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்படவிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நாளை 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
வண. மாதுலுவாவே சோபித தேரருடன் இணைந்து பணியாற்றத் தீர்மானித்துள்ள அரசியல் கட்சிகளும் குழுக்களும், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன. (ற)

# ரணிலின் வாயை கிழித்து விடுவேன்

## பகிரங்கமாக எச்சரித்தார் அமைச்சர் ரோஹித

கொழும்பு, நவ.18
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை காயப்படுத்தப் போகின்றேன் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.
நேற்றுமுன்தினம் களுத்துறையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் அபேகுண வர்த்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்றார் என்று ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியிருந்தார். ஜனாதிபதியைத் துரோகி என்று வர்ணித்துள்ள ரணில் விக்கிரமசிங்க என் கையில் கிடைத்தால் இனி அவர் பேசவே முடியாதபடி வாயின் இரண்டு பக்கமும் கத்தியால் கிழித்து ஊனப்படுத்தி விடுவேன். இல்லாவிட்டால் அவரது முகத்தை மண்ணில் ஊன்றித் தேய்த்து சிதைத்து விடுவேன்.
ஜனாதிபதிக்கு நாங்கள் மனப்பூர்வமாக அன்பு செலுத்துகின்றோம். அவரை திட்டுபவர்கள் யாராக இருந்தாலும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தல் திணைக்கள பணியாளரின் விடுமுறை ரத்து



கொழும்பு, நவ.18
தேர்தல் திணைக்களத்தின் சகல சேவையாளர்களுக்கும் மறு அறிவித்தல் வரையில் விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.
தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.
தேர்தலுக்கான ஏற்பாடுகளின் பொருட்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)



இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களையும் சித்தரிக்கும் புதிய 10 ரூபா நாணயக்குற்றிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மத்திய வங்கி தலைமையகத்தில் நடைபெற்றது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் புதிய நாணயக்குற்றிகளை ஜனாதிபதியிடம் கையளித்தார். இலங்கையிலுள்ள ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் தனித்துவம் வாய்ந்த பண்புகளையும் முக்கியத்துவம் மிக்க அடையாளங்களையும் சிறப்புப் பண்புகளை அங்கீகரித்து அவற்றை விவரணப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி 10 ரூபா நாணயக்குற்றிகளைக் கொண்ட புதிய தொடரொன்றை வெளியிட்டுள்ளது. (ற)

# ஓட்டோ மீது சூடு: இருவர் காயம்

கொழும்பு, நவ.18
கொழும்பை அண்மித்த ஹோகந்தரை பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது.
சட்டவிரோதப் பொருள்களைக் கடத்திய ஓட்டோவை மறித்து நிறுத்த முயன்றபோது, கட்டளையை மீறி வேகமாகத் தப்பிச் செல்ல முயற்சித்த நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# ஜனாதிபதி தேர்தலில் யாருக்கும் ஆதரவில்லை



கொழும்பு, நவ.18
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது அமைப்பு எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை என்று பொதுபல சேனா அமைப்பு அறிவித்துள்ளது.
அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறும் போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக பொதுபல சேனா இன்னும் தீர்மானிக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.
ஆயினும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தீர்மானமிக்க சக்தியாக திகழப்போகின்றோம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ற)

# விபத்துகள்

## பஸ் சில்லுக்குள் சிக்கி சிதைந்தது கை

பஸ்ஸிலிருந்து இறங்கும் போது தவறி வீழ்ந்து பஸ் சில்லுக்குள் கை அகப்பட்டு சிதைவடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவிலில் இடம்பெற்றது. அச்சுவேலியைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெயரத்தினம் (வயது - 60) என்பவரே பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குஅனுப்பி வைக்கப்பட்டார். (ற-9)



## மோ.சைக்கிள் மோதி சிறுமி காயம்

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமி வீதியால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிக் காயங்களுக்குள்ளாகியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை கே.கே.எஸ். வீதியில் காசிப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தனது வீட்டிலிருந்து சிறியதாயார் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட தயாளன் விக்னேஸ்வரி (வயது-9) என்ற சிறுமியே காயங்களுக்குள்ளாகி, தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-36)

# புலிகள் இருந்திருந்தால் விக்னேஸ்வரன் முதலமைச்சராக ஆகியிருக்க முடியாது

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறுகின்றார்



கொழும்பு, நவ.18
போர் நிறைவடைந்த பின்னர் இலங்கை பெற்றுக்கொண்ட மேம்பாடுகள் மிகவும் முக்கியமானது என தெரிவித்துள்ள பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் க.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சர் ஆகியிருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
தமிழீழ விடுதலைப்புலிகள் முறியடிக்கப்பட்ட பின்னர் வடக்கில் செயற்பட்ட ஏனைய ஆயுதக் குழுக்களையும் நிராயுத பாணிகளாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அவ்வாறு செயற்படாத பட்சத்தில் க.வி.விக்னேஸ்வரனுக்கு முதலமைச்சராகும் வாய்ப்பு கிடைத்திருக்காது.
தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்பெறச் செய்வதற்கு முன்னர் புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, போன்ற பல அமைப்புக்கள் இருந்தன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அந்த அமைப்புக்களின் தலைவர்களை கொலை செய்த பின்னரே சர்வாதிகாரத் தன்மையை ஏற்படுத்தினார்.
இந்த அமைப்புக்கள் ஒரு காலத்தில் ஆயுத குழுக்களாக செயற்பட்டன. அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்தார். எனினும், அந்த விடயம் மிகவும் சவாலாக அமைந்தது- என்று தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள் இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 02 செவ்வாய் (18.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 357

# அரசின் அராஜகங்கள் தொடர்பில் அமெ. அதிகாரிகளுக்கு விளக்கம்

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேரில் தெரிவிப்பு

நியூயோர்க், நவம்பர் 18

**வடக்கு, கிழக்கில் அரசும் அதன் படைக ளும் முன்னெடுத்துவரும் அராஜக செயற்பாடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அதிகாரிகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளது.**

இலங்கையின் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் அமெரிக்காவில் புலம்பெயர் தமிழர்கள், இராஜதந்திரிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய சந்திப்பு நடத்தி வருகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து அமெரிக்கா சென்றனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையக் காணிகள் மக்கள் விரும்பியே அளவீடு

### யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 18

மக்களின் விருப்பத்துக்கு அமையவே, நலன்புரி நிலையக் காணிகளை அளவீடுசெய்து அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

சுன்னாகம்சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கண்ணகி நலன்புரி நிலையம், மடத்தடி நலன்புரி நிலையம் என்பவற்றை அளவீடு செய்து அதில் தங்கியுள்ள, வலி.வடக்கு மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களில் ஒரு தொகுதியினர், வளலாயில் அமைக்கப்படவுள்ள மாதிரிக் கிராமத்தில் குடியேறுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இன்னொரு தொகுதியினர் தாம் தற்போதுள்ள நலன்புரி நிலையக் காணியையே தருமாறு கோரியிருந்தனர்.

அதற்கமைய குறித்த காணியை அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் காணி தனியார் காணி

(22ஆம் பக்கம் பார்க்க)

## அந்தோனியார் சொரூபத்தில் மீனவர் தொடர்ந்து வழிபாடு நடத்த அனுமதி

யாழ்ப்பாணம், நவ.18

மீனவர்களின் வழிபாட்டுக்காகப் பாரம்பரியமாக அமைக்கப்பட்டிருந்த அந்தோனியார் சொரூபத்தை அகற்றுவதற்கு தொடரப்பட்ட வழக்கில் 13 வருடங்களின் பின்னர் மீனவர்களுக்கு சார்பாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தொடர்ந்து அதே இடத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் பனங்கொட்டுத் துறைமுகத்துக்கு அருகாமையில் பாரம்பரியமாக அமைக்கப்பட்டிருந்த அந்தோனியார் சொரூபம் தமக்குரிய காணியில் இருப்பதால் மன்னார் ...ந்தை உப்புக் கூட்டுத்தா...த்தினர் கடந்த 2011 ஆம் ஆண்டு அதனை அகற்றுவதற்கு முயற்சித்தனர். எனினும் மன்னார் மாவட்ட மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்லும்போது வழிபாடுகளை மேற்கொள்ளக் குறித்த சொரூபத்தைப் பயன்படுத்தி வந்தனர். உப்புக் கூட்டுத்தாபனத்தின் முயற்சிக்கு மன்னார் மீனவர் எதிர்ப்புத் தெரிவித்தபோதும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் கடற்படைக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை தோல்வி

### எழுத்து மூலம் தனது மறுப்பை சமர்ப்பித்தார் காணி உரிமையாளர்

யாழ்ப்பாணம், நவ. 18

மாதகலில் கடற்படையினரின் தேவைக்காக, காணி சுவீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை நேற்றைய தினம் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் காணியை கடற்படையினருக்கு வழங்கச் சம்மதமில்லை என்று உரிமையாளர் எழுத்து மூல ஆவணத்தை நில அளவையாளர்களிடம் நேற்றுக் கையளித்துள்ளார்.

மாதகல் பிரதான துறைமுகத்தை அண்மித்த பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணியை நேற்றுக் காலை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த காணியைக் கடற்படையினர் தமது முகாம் அமைப்பதற்குக் கோரியிருந்தனர். அதற்கமைய அதனை நில அளவை செய்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## புனிதமான கார்த்திகை மாதத்தில் ஒரு புல்லுருவியும் பிறந்துள்ளது

### திக்கத்தில் தெரிவித்தார் சரவணபவன் எம்.பி

யாழ்ப்பாணம், நவ. 18

கார்த்திகை மாதம் என்பது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் ஒரு புனிதமான மாதமாகும். இதன் புனிதத் தன்மையை சீர்குலைக்கும் வகையில் இம் மாதத்தில் ஒரு புல்லுருவியும் பிறந்துள்ளது என்பதனை அண்மையில் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளேன் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆடைத் தொழிற்சாலை வருகிறது குடாநாட்டுக்கு

யாழ்ப்பாணம்.நவ.18

யாழ். மாவட்டத்தில் ஆடைகள் தைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இந்த முயற்சி எடுக்கப்படுவதாக அதிகாரிகள் கூறினர்.

இலங்கை முதலீட்டுச் சபையின் வடமாகாணக் காரியாலயம் இந்த ஆடைத் தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்ற ஆர்வம் உள்ள இளைஞர், யுவதிகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. கல்வித் தகைமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்களது பிரதேச செயலகங்களில் அல்லது இலங்கை முதலீட்டுச்சபை காரி

(22ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் விடுவிப்பு குறித்து டில்லியில் முக்கிய பேச்சு

இராமேஸ்வரம், நவ.18

இலங்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரியும், இலங்கையில் உள்ள படகுகளை மீட்டுத் தரக் கோரியும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சரை இன்று டில்லியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இராமேஸ்வரத்தை சேர்ந்த 5 இந்திய மீனவர்களுக்கு இலங்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் சாதகமாக அமையாத காரணத்தால் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை நேரடியா

(22ஆம் பக்கம் பார்க்க)

## 'கவனம் தாலிக்கொடி'




வலி.தென்மேற்கு, நவ.18

திருடர்களின் தொல்லைகளில் இருந்து பெண்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் நோக்குடன் முன்னெச்சரிக்கையாகத் திருட்டுக்கள் இடம்பெறும் இடத்தில் சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மேற்படி வீதியால் செல்லும் பெண்கள் மிக அவதானத்துடன் பயணம் செய்ய

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஏழைகளுக்கான உதவிகளில் அரசியல் கட்சியின் தலையீடு

### வறுமையில் வாடும் குடும்பங்கள் பல பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 18

வாழ்வின் எழுச்சி, திவிநெகும போன்ற திட்டங்களினூடாக வழங்கப்படும் உதவிகள் அரசின் பங்காளிக் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாக உதவிகள் கிடைக்காத ஆனால் அது தேவைப்படும் ஏனைய மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த அரசியல் கட்சி கிராமங்களில் உள்ள தமது ஆதரவாளர்கள், விசுவாசிகளுக்கு மாத்திரமே அதிகாரிகள் உதவிகளை வழங்க நிர்ப்பந்திக்கின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் கிராமங்கள் பலவற்றில் வாழ்வின்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு முல்லைத்தீவிலும் ஒன்றியம்

யாழ்ப்பாணம், நவ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்காக புதிய ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலும் நிர்வாகத் தெரிவும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் கலந்துகொண்டதுடன் ஒன்றியத்துக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவும் இடம்பெற்றது.

ஒன்றியத்தின் தலைவராகக் கனகசுந்தரசுவாமி ஜனமேஜெயந்தும், செயலாளராக பாலசுப்பிரமணியம் திருக்குமாரும், பொருளாளராக சிவ

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாசிப்பு மாத நிகழ்வுகளின் பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்வார்.

தேசிய வாசிப்பு மாத்தை முன்னிட்டு முன்பள்ளிகள், பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கே பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

(வ-9)

---

## நீங்கா நினைவலைகள்

(புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்)

**4ஆம் ஆண்டு**



பிறப்பு
21 . 03 . 1966

இறப்பு
18.11.2010

**செல்வி துரைராசசிங்கம் உத்தரகுமாரி**
(ஆசிரியை:B.A Tamil Hons, Dip.in.Education, M.Ed.)

**14ஆம் ஆண்டு**



பிறப்பு
17 . 02 . 1917

இறப்பு
12.02.2000

**சின்னத்தம்பி துரைராசசிங்கம்**

**47ஆம் ஆண்டு**



பிறப்பு
12 . 05 . 1935

இறப்பு
06.02.1967

**திருமதி மங்கையர்க்கரசி துரைராசசிங்கம்**

அப்பா, அம்மா, சகோதரியே!
எத்தனை ஆண்டுகள் போனாலும்
எங்கள் உயிர் உள்ளவரைக்கும்
உங்கள் நினைவாகவே இருப்போம்
எங்கள் உள்ளக்குமுறலை ஆற்றிட முடியவில்லையே

49/4, கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

(54287)(10.6.3)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் சேதுகாவலர் ஆறுமுகம்**

(இளைப்பாறிய மாவட்ட விற்பனை அதிகாரி விற்பனைத்திணைக்களம்)



மண் மகிழ
03.12.1935

விண் தழுவ
19.10.2014

கடந்த 19.10.2014 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சேதுகாவலர் ஆறுமுகம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மரணச் செய்தியை அறிந்து நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறி இரங்கல் உரையாற்றியவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் பங்கு பற்றியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

நாளும் நாம் நலிந்துருக, 45ஆம் நாள் ஆனதுவோ...?



அமரர்
**குமாரசாமி திவாகரன்**

மண் மகிழ
12.01.1988

கண் நெகிழ
05.10.2014



இடி விழுந்ததோ? இதயம் சிதைந்ததோ?
இனிய உறவினை இழக்க நேர்ந்ததோ?
அடி மனங்களில் அன்பை விளைத்தவன்
ஆடிப் பாடியெம் அருகில் அணைந்தவன்
துடிதுடித்தொரு கணத்திற் போயினன்
துயர வெள்ளமே சூழ்ந்து போனது
மடி தவழ்ந்தநன் மழலை மயங்கிட
மனையவள் மலர்த் தாய் தவித்திட
படிதலம் வரம் பாசச் சோதரர்
பந்த மாய்வரும் சொந்தம் அழுதிட
முடிந்ததோ திவாகரனுன் வாழும்நாள்
முன்னை வினையிதோ? நினைவு வாழுமே!

எம் இனிய செல்வனின் ஆத்மா இறைவன் பாதங்களில் சாந்தியுற அஞ்சலிக்கின்றோம்.

அம்மன் கோயில் வீதி,
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

பிரிவுத்துயர் சுமக்கும்:
குடும்பத்தினர்.

---

## ஆண்டுகள் பதினான்கு ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவு



மண்ணில்
17.09.1921

விண்ணில்
22.11.2000

**அமரர் அருணாசலம் ஆறுமுகம்**

(முன்னாள் உப அதிபர் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சமாதான நீதிவான்)

திதி: ஏகாதசி

ஆண்டுகள் பதினான்கு ஆனபோதும் ஐயா!
உங்களது நினைவுகள் என்றென்றும் நீங்காது
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் நீங்கள் இருந்து
எமக்காய் என்றும் ஒளி வீசினீர்கள்
பாசத்தின் உறைவிடமாய் ஊர்போற்றும் உத்தமராய் வாழ்ந்து
எங்களது உயர்வுகளுக்கு எல்லாம்
உங்கள் ஆசீர்வாதம் என்றென்றும் இருக்கும் ஐயா!

ஜெயபதி குடும்பத்தினர்
"ஜெயபதி"
தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 03 . 1956



மறைவு
05 . 12 . 2007

**அமரர் காசிநாதர் குலசிங்கம்**

(செந்தா பஸ் உரிமையாளர்)

திதி: ஏகாதசி

அன்பு தந்து அரவணைத்து ஆளாக்கிய அப்பாவே!
ஆண்டவன் அடி அழைத்து ஆண்டுகள் ஏழு ஆனதுவே!
இம்மையில் உமை - இழந்தோம்
மறுமையில் உமைக் காண்போம் என காத்திருக்கிறோம்.

அரசகேசரி பிள்ளையார்
கோயில் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**யாழ்ப்பாணத்தில் IELTS கற்பதற்கு உன்னதமான கல்வி நிறுவனம்**

**CAPS**



*(Canadian Academy of Professional Studies)*

52,Palaly Road,Thirunelvely Jaffna. (Near Sampath Bank)

**IELTS தேர்வு**

- ★ 03 மாதங்கள் - 80 மணித்தியாலங்கள்
- ★ பொருத்தமான கற்பித்தலும், பயிற்சியும்
- ★ சிறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது
- ★ சட்ட கற்கைநெறிகளுக்கான வகுப்புக்கள் நடைபெறும்

**NURSING**

- ★ பயிற்சிக் காலங்களில் பயிற்சியாளர்களுக்கு தனியார் வைத்திய சாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும்.
- ★ தகுதியானவர்களுக்கு அவ் வைத்தியசாலைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**TEACHER TRAINING IN ENGLISH**

- ★ ஆங்கிலம் கற்பிப்பதற்கான பயிற்சி நெறி பயிற்சி வார நாள்கள் அடங்கலாக 10 மாதம் வழங்கப்படும்.
- ★ தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
- ★ சிறந்த தகுதிவாய்ந்த வளவாளர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

**Basic Qualification : G.C.E.A/L**
**: G.C.E.O/L English**

**விண்ணப்ப கடைசித் திகதி : 25.11.2014**

**வகுப்புக்கள் ஆரம்பம் : 01.12.2014**

**Note :** மேற்படி கற்கைநெறிகளில் சித்தி பெறுவோருக்கு UK, USA, Australia, NewZeland, Canada ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற ஆலோசனையும் தொழில் விசா, மாணவர் விசா என்பவற்றுக்கான சட்ட உதவியும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**Srilanka : 077 386 7458 | Canada : 416 986 9554**

## மாதர் கிராம சங்க உறுப்பினர்கள் 12 பேருக்கு கடனுதவி

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 12 பேருக்கு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையால் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்க நிதியிலிருந்து 13 அங்கத்தவர்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா வீதம் சேமக் கடன் வழங்கப்பட்டது.

கடன் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்ட பத்தில் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சங்க அங்கத்த வர்கள் 39 பேருக்கு வங்கி தலா ஒரு லட்சம் ரூபா வீதம் கடன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மரம் நடுகை

தென்மராட்சி, நவ.18

இலங்கை வங்கியின் சாவ கச்சேரி கிளையின் மரம் நடுகைத் திட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும். இதற்கென 600 மரக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கிளையின் விரிவாக்கல் கிளைகளான பூநகரி, பளை, கைதடி ஆகிய இடங்களிலும் அன்றைய தினம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. இந்த நிகழ்வில் வங்கி உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பளையில் குடியமர்ந்த 95 குடும்பங்களுக்கு காணி உறுதிகள்

பளைப் பிரதேசத்தின் தம்பகாமம் பகுதியில் அரச காணிகளில் குடியமர்ந்துள்ள 95 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் காணி உறுதிப் பத்திரங் கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி.ப. ஜெயராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோர் காணி உறுதிப் பத்திரங்களை அந்தக் குடும்பங்களுக்கு வழங்கினர். (வ-9)

## ஒளி பெற்றன இரு கிராமங்கள்

தென்மராட்சி, நவ.18

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த வேம்பொடு கேணி, இத்தாவில் ஆகிய இரு கிராமங்களுக்கான மின்விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வேம்பொடுகேணி சந்தியில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றியின் பெயர்ப் பலகையை பளைப் பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி திரை நீக்கம் செய்ய, அந்தப் பகுதியைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் மின் ஆளிகளை அழுத்தி மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர் மு.சந்திரகுமார் மின் ஆளியை அழுத்தி வேம்பொடு கேணி சி.சி.த.க.பாடசாலைக்கு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். (வ-9)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றி இடமாற்றல் பெற்றுச் சென்ற சு.ரவிகரனுக்கு பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினர் நடத்தும் பிரிவுபசார விழா நாளை மறுதினம் வியாழக் கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சமாச உப தலைவர் ச.தங்க ராசா தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக் களப் பணிப்பாளர் ஜே.சீ.சீ. பெலிஸியன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்து கொள்வர். (வ-9)

## மாணவியை தாக்கிய கருங்குளவிகள்

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மாணவியொருவர் கருங்குளவிகளால் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மீசாலை வடக்கில் இடம் பெற்றது.

அதேஇடத்தைச் சேர்ந்த தயாபரன் கௌசிகா (வயது-16) என்பவரே குளவித் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

**அதிமேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின்**
**பிறந்ததின, பதவியேற்ற நாளை முன்னிட்டு**
**அவர்களின் வாழ்வு சுபீட்சம் பெறவும்**
**பணிகள் சிறக்கவும்**
**வாழ்த்துகின்றோம்.**



மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் இன்று 14 ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஒவ்வொரு பிரதேசங்களிற்கும் விஜயம் செய்து மக்களுடன் ஜனாதிபதியின் பிறந்தநாளைக் கொண்டாடுவார்.

1. செல்வச் சந்நிதி முருகன் கோவில்
2. கச்சாய் அம்மன் கோவில் (சாவகச்சேரி)
3. மூளாய் பிள்ளையார் கோவில்
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
5. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில்
6. தம்பாட்டி அம்மன் கோவில் (நாரந்தனை)
7. கைலாசபிள்ளையார் கோவில் (யாழ்ப்பாணம்)
8. கோண்டாவில் பேருந்து நிலையம்
9. துன்னாலை கலிகை முருகன் கோவில்
10. கீரிமலை சிவன் கோவில்
11. யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்
12. வேவில் பிள்ளையார் கோவில் (வல்வெட்டித்துறை)
13. நாகவிகாரை நயினாதீவு
14. கிளிநகர் சித்திவிநாயகர் ஆலயம்



**அங்கஜன் இராமநாதன்**
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்
அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள்

(54317)

## ஸ்ரீ ஐயப்பன் மகரஜோதி பெருவிழா

யாழ்ப்பாணம் கோண்டாவில் சபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தின் மகர ஜோதி மண்டல விரதப் பெருவிழா நேற்றைய தினம் வெகு சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது. சாமிமார்களுக்கு புனித விரத மாலை அணிவிக்கப் பட்டு, மண்டல விரதப் பூசை களும் நடைபெற்றன. கேரளத்து சபரி மலையில் கோயில் கொண்டருளும் பூரணை, புட்கலை ஆகிய இரு தேவிய ரைக் கொண்ட வருமான ஸ்ரீஹரிஹர புத்திர ஐயப்ப சுவாமி கோண்டாவில் பதி யுறைந்து ஈழத்து ஐயப்ப அடியாளர்களுக்கு அருள் புரிந்து வருகிறார். 29 நாள்கள் நடைபெறவுள்ள ஐயப்பசுவாமியின் இந்த மகர ஜோதி மண்டலப் பெருவிழா எதிர்வரும் 15.12.2014 ஆம் திகதி வரை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. (ஓ)

## குடும்பஸ்தருக்கு வாள் வெட்டு

வவுனியா புளியங்குளம் பகுதியில் ஏற்பட்ட குடும்பச் சண்டையால் 3 பிள்ளைகளின் தந்தை கழுத்தில் வாளால் வெட்டப்பட்ட நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் புளியங்குளப் பொலிஸார் தெரிவித்தனர்.
புளியங்குளத்தில் உள்ள வீடொன்றில் குடும்பத் தகராறில் மூன்று பிள்ளைகளின் தந்தையான க.செல்வராசாவை சிலர் கழுத்தில் வாளால் வெட்டியுள்ளனர். அயலவர் உதவியுடன் உடனே அவர் வவுனியா பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (த-402)

## கல்வி மாநாட்டு தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 18
இந்த வருட ஆரம்பத்தில் நடத்தப்பட்ட வட மாகாண கல்வி முறைமை மீளாய்வு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை படிப்படியாக நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு வடமாகாண கல்வி அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். வட மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
நடைபெற்ற கூட்டத்தில் வட மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டம் மாலை 4.30 வரை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## ஒட்டுசுட்டானில் மரம் நாட்டு விழா

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் வெகு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் வி.முகுந்தன் தலைமையில் தேசியமரம்நாட்டுவைவம் ஒட்டுசுட்டான்வித்தியாபுர கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.
இதில் பயன் தரும் மரக் கன்றுகளைதேசிய மரம் நாட்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் கிராம சேவையாளர்கள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் கலந்து நட்டு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-435)


## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராணி பாலசிங்கம்

கொல்லங்கலட்டி, சடச்சப்பையைப் பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி பாலசிங்கம் 14.11.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு- பாக்கியம் தம்பதியரின் மகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு-பத்மினி தம்பதியரின் மருமகளும், பகீரதன்(பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பத் வங்கி), புஸ்பலீலா, ஆதீபன்(கட்டார்), விதூஷா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராணி, தேவராஜா(லண்டன்), சிவராஜா(சுவிஸ்), தர்மராணி(இத்தாலி), கங்காதேவி (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரூபராசாவின் (அஞ்சல் அலுவலகம் கே.கே.எஸ்) அன்பு மாமியும், மகாலிங்கத்தின்(சுவிஸ்) மருமகளும் சோதிப்பிள்ளையின் (சுவிஸ்) பெறாமகளுமாவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2014) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
நகுலேஸ்வரா வீதி,
இளவாலை. (54349)(6.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத் திற்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக விருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றென்றும் உம்மில் நிலைத் திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.
ஆமென் -அடியாள்
(உங்கள் தேவை எவ்வளவு கடினமாயிருப்பினும் இச் செபத்தை 3 நாள்கள் தேவையை கேளாமல் தொடர்ந்து சொல்லிவர தேவை நிறைவேறும் இதை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்) (54322) (4.6.3)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர் பொன்னம்பலம் சுந்தரலிங்கம்
(குஞ்சையா - முன்னாள் மரக்கறி வியாபாரி)
பூனகரி, நெடுங்குளம், பள்ளிக்குடாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னம்பலம் சுந்தரலிங்கம் அவர்களது 31ஆம் நாள் நினைவை ஆழ்ந்த துயருடன் நினைவு கூருகின்றோம். அன்னாருடன் வாழ்ந்த காலங்கள் என்றுமே மறக்க முடியாதவை.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நெடுங்குளம், பூன்கரி.
தோற்றம் 28.08.1951 மறைவு 19.10.2014

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் 17.08.1952
இறைவன் அடியில் 22.10.2014

### அமரர் திருமதி செல்வமணி கைலைநாதன்
(இடைக்காடு, அச்சுவேலி)

கொத்தவளவு இடைக்காடு, அச்சுவேலியினை பிறப்பிடமாகவும், செல்வநாயகபுரம் திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி செல்வமணி கைலைநாதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் (20.11.2014) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
து.கைலைநாதன் - கணவர்
(ஓய்வுபெற்ற கணக்காளர், அம்பிகா களஞ்சியம், யாழ்ப்பாணம்) (சி17735)(12.3.6)

குடும்பத்தினர்.
கொத்தவளவு, இடைக்காடு, அச்சுவேலி.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
### சுப்பையா திருநாவுக்கரசு
(ஓய்வுநிலை C.T.B சாரதி)



தோற்றம்: 09.09.1925
மறைவு: 19.10.2014

அப்பா எங்களை அரவணைத்துப் பக்குவமாய்
வளர்த்த காலத்திலும் பார்க்க இறுதியாக
எங்களுடன் பரிமாறிய அன்பான அறிவுரைகளும்,
நீங்கள் முருகா, முருகா என்று கூப்பிட்ட ஒலியும்
இன்றும் எங்கள் மனதிலே ஒலித்துக் கொண்டே இருக்கிறது
எப்படியும் வாழலாம் என்று நினையாது
இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டிய
தெய்வம் அப்பா நீங்கள். உங்கள் ஆசைகள் யாவையும்
நிறைவேற்றிவிட்டோம் அப்பா
உங்கள் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல
முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். 18.11.2014 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு-திருமதி வி.எஸ்.முதலி
(ஓய்வுநிலை முகாமையாளர், மக்கள் வங்கி)
திரு-திருமதி எஸ்.சிவலிங்கம்
திரு-திருமதி ஏ.சற்குணராஜா

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

## அரச பணியாளருக்காக விசேட ரயில் சேவை

### யாழ்ப்பாணம் - பளை இடையே

யாழ்ப்பாணம், நவ.18
யாழ்ப்பாணத்துக்கும் பளைக்கும் இடையில் மேலும் ஒரு ரயில் சேவையைத் தினசரி நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் தேவையுடையோரின் போக்குவரத்து வசதி கருதி இந்த விசேட ரயில் சேவை நடத்தப்படவுள்ளது. இந்த விசேட ரயில் சேவையை ஆரம்பிக்கும் வகையில் நான்கு பெட்டிகளுடன் ரயில் ஒன்று யாழ். மத்திய ரயில் நிலையத்தில் தயாராக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ரயில் யாழ். ரயில் நிலையத்தில் இருந்து காலையில் பளை நோக்கிப் புறப்பட்டுப் பின்னர் பிற்பகலில் மீண்டும் யாழ். நோக்கி வருகை தரும்.

இந்த ரயில் சேவை பெரும்பாலும் இந்த வார இறுதியில் ஆரம்பிக்கப்படலாம் என்றும் ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

## அமெரிக்க உருளைக்கிழங்கை யாழில் விளைவிக்கத் திட்டம்

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட உருளைக் கிழங்கு விதையை குடா நாட்டில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக உருளைக்கிழங்கை உற்பத்தி செய்யும் நிலங்களில் விவசாயிகள் குரக்கனை உற்பத்தி செய்தனர். குரக்கன் உற்பத்திக்கான அறுவடை முடிந்துள்ளதால் காலபோகத்துக்கான உருளைக்கிழங்கு உற்பத்தி நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

குடாநாட்டில் உருளைக் கிழங்குச் செய்கைக்குப் பொருத்தமுடைய 4 பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த வருடமும் உருளைக்கிழங்கு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையில் இந்த வருடமும் கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளைச் சமாசத்தில் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொண்டதுக்கு இணங்க 350 விவசாயிகள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதற்கான முற் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். விவசாயிகளின் ஆர்வத்துக்கு ஏற்ப விதை கிழங்கை வெளிநாட்டில் இருந்து இறக்கு மதி செய்வதற்கான நடவடிக்கையை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டமைக்கு இணங்க அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு விதை உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தருவிக்கப்பட்ட 75 ஆயிரம் கிலோ உருளைக்கிழங்கு விதையில் 35 ஆயிரம் கிலோ உருளைக்கிழங்கு விதை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ உருளைக் கிழங்கு விதை 11 ஆயிரத்து 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இந்த வருடம் 100 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்ட போதும் 80 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலேயே அது உற்பத்தி செய்யப்படவுள்ளது. கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கைச் சந்தைப் படுத்துவதில் விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்த தருணத்தில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் சதொச நிறுவனத்திடம் விற்பனைக்கான வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த வருடமும் விவசாயத் திணைக்களம் ஊடாக சந்தை வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன் விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாகப் பயிர்ச்செய்கைப் பராமரிப்பு மற்றும் உற்பத்திக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# சகல வசதிகளையும் கொண்ட நவீன சந்தை சாவகச்சேரியில்

## நேற்று அடிக்கல் நடப்பட்டது

தென்மராட்சி, நவ.18
சகலவசதிகளும் கொண்ட நவீன சந்தை விற்பனைப் பிரிவு ஒன்று சாவகச்சேரி சந்தையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.



"பாதுகாப்பு நகர விரிவாக்கல் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் திட்டத்துக்கமைவான சகல வசதிகளும் கொண்ட 70 சந்தை விற்பனைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. இதில் 20 வேலைத் திட்டங்கள் இவ்வருடம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்ட போதிலும் சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சந்தைக்கு முன்னுரிமை கொடுத்து முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு, வல்வெட்டித்துறை ஆகிய மூன்று இடங்களில் பொதுச் சந்தை விற்பனைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன."

இவ்வாறு சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன வடிவிலான சந்தை விற்பனைப் பிரிவுக்கான நிர்மாணப் பணியை ஆரம்பித்து வைத்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் வை.ஏ.ஜீ.கே. குணதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சாவகச்சேரி பிரதேசத்தில் அதிகளவு விவசாயிகள் இந்தச் சந்தையில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்கின்றனர். சந்தைக்குப் பெருமளவு நுகர்வோர் வருவதனால் நகர்ப் பகுதியில் உள்ள வணிகர்களும் பயன்பெறுகின்றனர். சந்தையைச் சுற்றி நிறைய வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளதால் பொருள்கள் கொண்டுவரும் வாகனங்கள் இலகுவில் வந்து செல்வதற்கேற்ற வகையில் விற்பனைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் சந்தையில் சேரும் கழிவுகள் அப்புறப்படுத்துவதற்கும் வாகனங்கள் உள்ளே வந்து செல்வதற்கு வசதியாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் சந்தையைச் சுற்றி வீதி அமைக்கப்படவுள்ளது-என்றார்.

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 6 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள சந்தை விற்பனைத் தொகுதிக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுச் சந்தை வளாகத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் வை.ஏ.ஜீ.கே.குணதிலக ஆகிய இருவரும் கூட்டாக திட்டத்தைத் திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் சிவஸ்ரீ கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள், அருட்தந்தை ஏ.கே.செல்வநாயகம் அடிகள், மௌலவி நசீர், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா, திட்டத்துக்குப் பொறுப்பான படைத்தளபதி ஏ.ஐ.மாரசிங்க, யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் உட்பட வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-9)



சுவிஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 2 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மாடிக் கட்டடத் திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், சுவிஸ் நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் மாட்டின் கியூட்டர் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு ஜெயரஞ்சன் அடிகளார், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.ஆனந்தசிவம், கல்லூரி அதிபர் எஸ்.கபிரியல்பிள்ளை ஆகியோர் கல்லூரி வாசலில் இருந்து மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றனர். (த-115)

## சிப்பாய் காயம்

தென்மராட்சி, நவ.18
படைச் சிப்பாயொருவரின் கை மீது தகரம் வீழ்ந்ததால் பலத்த காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மிருசுவிலில் இடம்பெற்றது.

இரத்மலானையைச் சேர்ந்த சாமர அசங்க (வயது-26) என்னும் சிப்பாய் கையில் காயம் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (த-9)

## சந்தைகளுக்கு அருகிலிருக்கும் இறைச்சிக் கடைகளை தடை செய்க

### பிரதேச சபை வருமானத்தை அதிகரிக்க அதுவே வழி

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கவேண்டுமானால் சபையின் நிர்வாக எல்லைக்குள் இயங்கும் பொதுச் சந்தைகளில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு கோழி இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று ஆலோசனை தெரிவித்துள்ள எதிர்க் கட்சி உறுப்பினர் அன்ரன் ஜோண்சன், சந்தைகளை விட வீடுகளிலும், பண்ணைகளிலும் குறைந்த விலையில் கோழி இறைச்சி விற்கப்படுவதால் மக்கள் சந்தைகளை நாடுவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் பதில் தவிசாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பிரதேசத்திலுள்ள 9 சந்தைகளையும் அங்குள்ள இறைச்சிக்கடைகளையும் குத்தகைக்குவிடுவதற்கான கேள்வி கோருவது பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரிப்பது சம்பந்தமாக செயலாளரினால் யோசனை தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர் அன்ரன் ஜோண்சன் கருத்துத் தெரிவிக்கும்போது,

பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமானால் சந்தைகளில் உள்ள கோழி இறைச்சிக் கடைகளின் வியாபாரத்தை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் கூடிய குத்தகைக்குச் சந்தையை வழங்க முடியும். இந்த நிலையில் சந்தையிலிருந்து 500 மீற்றருக்குள் கோழி இறைச்சிக் கடைகள் இயங்குவதால் மக்கள் சந்தையை நாடுவதற்குப் பின்னடிக்கிறார்கள். அத்துடன் சந்தைகளிலுள்ள கோழி இறைச்சிக் கடைகளை விட கோழிப் பண்ணைகளில் குறைந்த விலையில் கோழி இறைச்சி விற்கப்படுவதால் மக்கள் அங்கு படை எடுக்கிறார்கள். தினசரி அங்கு பெருமளவில் வியாபாரம் நடைபெறுகிறது. எனவே சந்தையின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமானால் மக்கள் அனைவரும் சந்தையை நாடக்கூடிய வகையில் வியாபாரத்தை மாற்றியமைக்க வேண்டும் - என்றார். (த-115)

## டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் நீடிப்பு

தென்மராட்சி, நவ.18
சாவகச்சேரி நகரசபையினால் நடத்தப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு வார செயற்பாடுகள் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாக நகரசபை தலைவர் வி.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் இந்தத் திட்டத்தின் கீழ் மூன்று தினங்கள் உக்காத பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபட்ட போதிலும் அனைத்து வட்டாரங்களிலும் பணியை மேற்கொள்ள முடியவில்லை.

இதனைக் கருத்தில் கொண்டு இன்று நகரசபையின் நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் வட்டாரங்களில் உக்காத பொருள்கள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுமெனவும், ஏனைய வட்டாரங்களில் சுழற்சி முறையில் வீதிகளில் வைக்கப்படும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படவுள்ளதாகவும் வீதியில் வைக்கப்பட்ட கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த வேண்டாமெனவும் அவர் வரியிறுப் பாளர்களை கேட்டுள்ளார். (த-9)

## கடையின் முன் நிறுத்தப்பட்ட மோ. சைக்கிள் திடீர் மாயம்

வலி.வடக்கு, நவ 18
றொட்டிக் கடையின் முன்னால் தனது மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு உள்ளே சென்று றொட்டி சாப்பிட்டவர் பின்னர் வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனமை தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சுன்னாகம் நகரப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் உள்ள றொட்டிக் கடையின் முன்னால் விடப்பட்ட சுமார் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய பல்சர் இன மோட்டார் சைக்கிளே திருட்டுப் போயுள்ளது.

இது தொடர்பாகச் சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (த-86)

# திறக்கப்பட்டது அக்கராயன்குளம்



கிளிநொச்சி, நவ. 18
அக்கராயன்குளத்தில் மிகக் குறைந்த நீர்மட்டமே உள்ள போதிலும் தற்போது காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் தேவைகளுக்காகக் குளம் தற்போது திறந்துவிடப்பட்டுள்ளது.

9 அடி வரையிலான நீர் மட்டம் தற்போது அங்கு காணப்படுகின்றது. அக்கராயன்குளம் 10 அடிக்கு மேல் நீர் மட்டம் உயர்ந்த நிலையில் காணப்பட்டாலே நீர் திறந்துவிடப்படுவது வழமை. ஆனால் மழை வீழ்ச்சி குறைந்து அக்கராயன்குளத்துக்கான நீர்வரவு குறைவாகக் காணப்படுவதால் குளத்தின் நீர் மட்டம் 10 அடி கூட உயராதநிலையில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாயிகளின் நெற்செய்கைக்காக தற்போது குளத்தைத் திறந்துவிட்டுள்ளது. (த-18)

# ஆசிரியர்கள் பற்றாக்குறை ஜனவரியில் அதிகரிக்கும்

## *கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் அதிர்ச்சித் தகவல்*

பளை, நவ.18
கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அனைவரும்அக்கறைகொண்டுள்ள நிலையில் மாவட்டத்தில் அடுத்த வருடம் ஜனவரியில் ஆசிரியர்களின் பற்றாக்குறை 585 ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் ஏற்கனவே 277 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்பட்டது. இந்த நிலையில் அடுத்த ஜனவரியில் இருந்து மேலும் 308 ஆசிரியர்கள் இட மாற்றல் பெற்றுச் செல்லவுள்ளனர்.

இடமாற்றல் பெற்றவர்களுக்கான பதிலீடு பற்றிய விவரங்கள் இதுவரை கிடைக்காததால் அடுத்த வருடம் ஆசிரியர்கள் பற்றாக்குறை 585 ஆக அதிகரிக்குமென அவர் தெரிவித்தார்.

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி வகுப்பறை கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் கூட கிளாலியில் 26 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் பௌதீக வளங்கள் அதிகரிக்கப்பட்டு வரும் நிலையில் ஆசிரியர் வளம் பற்றாக்குறையாகக் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

ஆசிரிய வளப் பற்றாக்குறையுடன் மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்து வருவது பாராட்டத்தக்கது.

கிராமத்துக்கான மின்விநியோகத் திட்டமும், பாடசாலைக்கான புதிய கட்டடத் தொகுதியும் அமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. இந்தப் பாடசாலை மாணவர்கள் அடுத்துவரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்-என்றார்.

பளைப் பிரதேசத்தின் கச்சாய் வெளி கிராமத்துக்கான மின் விநியோகம் முதன்முறையாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கச்சாய்வெளி - செல்வபுரம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியின் பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோர் கூட்டாகத் திரை நீக்கம் செய்து வைத்தனர். மூன்று சிறுமிகள் மூன்று மின் ஆழிகளை அழுத்தி கிராமத்துக்கான மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பளை பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி, வடக்கின் வசந்தம் மின் விநியோகத் திட்ட முகாமையாளர் குணசீலன், பொறியியலாளர் விஜயசிறி, தென்மராட்சிப் பிரதேச மின் அத்தியட்சகர் எஸ்.ரமணிதரன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். முதன் முறையாக கச்சாய் வெளிப் பிள்ளையார் ஆலயத்துக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டது. 17 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கிராமத்துக் கான மின்விநியோகம் மேற் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(த-9)

# திருடப்பட்ட சோலரை மீட்டனர் பொலிஸார்

## *சந்தேகத்தில் சிறுவர்கள் கைது*



துணுக்காய், நவ. 18
துணுக்காய் யோகபுரம் மத்தியில் களவாடப்பட்ட சோலரை மல்லாவிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் இந்தத் திருட்டில் ஈடுபட்ட 14 மற்றும் 9 வயதுடைய சிறுவர்களையும் மல்லாவிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறும்தியுடைய சோலர் அண்மையில் களவு போயிருந்தது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் களவாடப்பட்ட சோலரை மீட்டதுடன் களவில் ஈடுபட்ட இரு சிறுவர்களையும் கைதுசெய்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். (த-18)

# இராணுவத்தினரையே ஏமாற்றி சைக்கிள்கள் திருடிய ஆசாமிகள்

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் பெண்களுக்குரிய 2 சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐயன்கன்குளம்- பழையமுருகண்டி ஆகிய கிராமங்களில் இருந்து பயணித்த இரு பெண்கள் கொக்காவில் இராணுவமுகாமுக்கு முன்னாலுள்ள மரநிழலில் சைக்கிள்களை நிறுத்திப் பூட்டிவிட்டு மாங்குளம் நோக்கி பஸ்ஸில் பயணித்துள்ளனர்.

சைக்கிள்க்ள் நிறுத்தப்பட்டுள்ள இடத்துக்கு சென்ற இரு திருடர்கள், தங்களுடைய சைக்கிள்களின் திறப்புகள் தொலைந்துவிட்டதாக இராணுவத்தினரிடம் கூறியுள்ளனர்.

திருடர்களின் பேச்சை நம்பிய இராணுவத்தினர் இரும்புக்கம்பி ஒன்றை வழங்கி இரு சைக்கிள்களின் பூட்டையும் உடைத்து கொண்டு செல்லுமாறு கூறியுள்ளனர்.

பிற்பகல் 3.00 மணியளவில் சைக்கிள்களுக்குச் சொந்தக்காரர்களான இரு பெண்களும் அவை நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு வந்தபோது சைக்கிள்கள் காணாமற்போனமை தொடர்பில் இராணுவத்தினரிடம் கூறினர். முற்பகலில் இருவர் வந்து தங்களுடைய சைக்கிள்களின் திறப்புகள் தொலைந்தவிட்டதாகத் தெரிவித்ததன் காரணமாகப் பூட்டை உடைத்து சைக்கிள்களை கொண்டுசெல்லுமாறு கூறியதாக இராணுவத்தினர் பெண்களிடம் தெரிவித்தனர்.

இதன் பின்பே திருடர்கள் சைக்கிள்களை களவாடிச் சென்றமை தெரியவந்தது. ஐயன்கன்குளம் முன்பள்ளி ஆசிரியை ஒருவருடைய சைக்கிளும், மாங்குளம் பிரதேச மருத்துவமனையில் பணிபுரியும் பெண்ணொருவரின் சைக்கிளுமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக இரு பெண்களும்ஐயன்கன்குளம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (த-18)

# கிளிநொச்சி மூலவளத் திரட்டு தயாரிப்பு

'அச்செட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாவட்ட மட்டத்தில்மூலவளத்திரட்டு ஒன்றைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 13ஆம் திகதி காலை கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் ஒரேவிதமான மூலவளத்திரட்டைத் தயாரித்து தேவையான தகவல்களைத் தேவைப்படுபவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காகக் கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கு அரைநாள் பயிற்சியும் பிற்பகலில் பிரதேச செயலாளர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான பயிற்சியும்இடம்பெற்றது. (த-18)

# இனமத வேறுபாடுகளின்றி இறந்தவர்களின் நினைவு

## *வன்னி 'கியூடெக்' இயக்குநர் அழைப்பு*



கிளிநொச்சி, நவ. 18
இனமத வேறுபாடின்றி இறந்தவர்களை நினைவுகூருவோம் என வன்னி 'கியூடெக் கரித்தாஸ்' இயக்குநர் அருட்தந்தை எம்.எல்.தயாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி புனித திரேசாள் மறைக்கல்வி நடு நிலையத்தில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற இடர்களினால் இறந்த உறவுகளுக்கான சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது-
இன்றையநாள் நாங்கள் விரும்பிக்கொள்வது போன்று புனிதமான நாளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. உலகத்திலே இறந்துபோனவர்களுக்காக சர்வ மதங்களைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லோரும் இணைந்து நினைவு கூருகின்ற ஒரு அழகான நாளில் இங்கு கூடியிருக்கின்றோம். இந்நாளில் பதுளையில் நடந்த அந்த இடரினை ஞாபகப்படுத்திக் கொண்டாலும்நினைவுகூறுகின்றநாளுக்குள் அடக்கப்படுகின்றவர்கள் பலராக இருக்கப் போகின்றார்கள். மண் சரிவினால் இறந்துபோனவர்கள் மாத்திரமன்றி எங்களுடைய பிரதேசங்களிலிருந்து, குடும்பங்களிலிருந்து அதிக இறப்புக்களைக் கடந்த காலத்தில் சந்தித்திருக்கின்றோம்.

எமது மண்ணிலே இறந்தவர்கள், போரிலே இறந்தவர்கள், அகால மரணமடைந்தவர்கள், நோய்வாய்ப்பட்டு இறந்தவர்கள் எனப் பொதுவாக இறந்தபோன அனைவரையுமே நினைவு கூருகின்ற நாளாக இந்நாளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.

எமக்கு முன்னர் வாழ்ந்து சென்றவர்கள் புனிதமானவர்கள். அவர்களின் வாழ்க்கையிலிருந்து நாங்கள் பலவற்றைக் கற்றிருக்கின்றோம். இறந்தவர்களின் வாழ்வு எமக்குப் பலவற்றைக் கற்றுத் தந்திருக்கின்றது. எந்தவித மத இனபேதங்களுமின்றி இந்த மண்டபத்திலேசெய்து கொண்டிருக்கின்ற நினைவு கூரல் வரவேற்கத்தக்கது.

ஒரு சமூகத்திலே நடந்துவிட்டுப் போகின்ற ஒரு சாதாரண நிகழ்வு அல்ல இது. எங்களுடைய சொந்த இறப்புக்கள் வரை மனங்களிலே இருத்தி இறந்தவர்களின் வழியில் பயணிக்கின்ற எங்களுடைய போராட்டங்களுக்காக, விடுதலையினுடைய தியாகங்களுக்காகச் செவிசாய்க்கின்ற நாளாக, எல்லாவற்றையும் நினைக்கின்ற நாளாக இந்நாள் அமைகின்றது-என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் மாவட்ட சர்வமத குழுத் தலைவருமாகிய ச.மோகனபவன் மற்றும் மாவட்ட சர்வ மதத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (த-18)

# வவுனியாவில் இன்று நூல் வெளியீடு

வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் பயிலரங்க கவிதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா பிரதேசசெயலாளர் பிரிவில் அடங்கும் 13 பாடசாலை மாணவர்களின் கவிதைகள் உள்ளடங்கியதாக இந்த நூல் வெளியீடு செய்யப்படுவதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தெரிவித்தார். (த-421)


## வாகன விபத்துக்களால் 1,972 பேர் சாவு



கொழும்பு, நவ.18
வாகன விபத்துக்களால் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 972 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
பஸ், ஓட்டோ, மோட்டார் சைக்கள் மற்றும் லொறி விபத்துக்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.
சாரதிகளின் கவனவீனம் மற்றும் வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வகையில் வாகனங்கள் செலுத்தப்படுகின்றமையோ அனேகமான விபத்துக்களுக்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# இனவாதம், மதவாதம் அரசின் ஆயுதங்கள்

### குற்றஞ்சாட்டுகின்றார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, நவ.18
அரசு தனது தோல்வியைத் தவிர்த்துக் கொள்ள இனவாதம் மற்றும் மதவாதத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலுடன் அரசின் தோல்வி ஆரம்பமாகி விட்டது. எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டணி மூலம் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிப்பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை தடுக்கவும், அரசின் தோல்வியைத் தடுத்துக் கொள்ளவும் இனவாதம், மதவாதம் என்பவற்றை அரசு கையில் எடுத்துக் கொண்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியை விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்தியாகவும் சித்திரிக்க முயன்று வருகின்றது. எனினும் இது போன்ற பரப்புரைகளால் எமது கட்சியின் வெற்றியை அரசால் இனித் தடுத்து நிறுத்த முடியாது- என்று தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கையில் அதிகரிக்கிறது எயிட்ஸ் தாக்கம்



கொழும்பு, நவ.18
இலங்கையில் எயிட்ஸ் நோய்த் தொற்று துரித கதியில் அதிகரித்து வருகின்றது என்று சுகாதார அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
கடந்த மூன்று மாதங்களுக்குள் மட்டும் புதிதாக எயிட்ஸ் நோய் தொற்றிய நோயாளிகள் 59 பேர் இனம் காணப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவர்களில் பெரும்பாலானவர்கள் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்கள் என்றும்- வேறு சிலர் வெளிநாடுகளிலிருந்து விடுமுறைக்கு வந்து செல்பவர்களுடன் நட்புக் கொண்டிருந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.
கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வரை இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டவில்லை. ஆனால் போர் நிறைவின் பின்னர் சுற்றுலாத்துறை வ்ளர்ச்சிக்கு சமாந்தரமாக எயிட்ஸ் நோயின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 12 . 1942



மறைவு 20 . 10 . 2014

கடந்த (20.10.2014) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் சிதம்பரி கந்தசாமி

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 17.11.2014 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (19.11.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு"

எமது குடும்பத்தின் குலவிளக்காய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதம் அடைந்த அமரர் சிதம்பரி கந்தசாமி அவர்களின் சாவடைந்த செய்திகேட்டவுடன் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், ஆறுதல் கூறியும், உற்றார், உறவினர், நண்பர்களாய் இருந்து ஈடில்லா உதவிகள் பல செய்தும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் குறிப்பாக நோய்வாய்ப்புற்றிருந்தவேளை அவரைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து சிகிச்சை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை 30 ஆம் விடுதி வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

33, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

(45.3.6)


## கருவைத் தோற்கடிக்க நான் மட்டுமே போதும்

### இப்படிக் கூறுகின்றார் உபேக்ஷா சுவர்ணமாலி

கொழும்பு, நவ.18
எதிர்க்கட்சிகளின் சார்பில் கரு ஜயசூரிய பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டால் அவரைத் தோற்கடிக்க தான் மட்டுமே போதும் என்று கூறியுள்ளார் உபேக்ஷா சுவர்ணமாலி.
ஐ.தே.கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்குத் தாவியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி இது தொடர்பாக ஊடகங்களுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியுள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கரு ஜயசூரியவை அறுபதினாயிரம் வாக்குகளையும் நான் எண்பத்தோராயிரம் வாக்குகளையும் பெற்றிருந்தோம். அந்த வகையில் கம்பஹா மாவட்டத்தி லேயே நான் அவரைவிட அதி களவு வாக்குகளை பெற்றுள் ளேன். அதுவும் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டபோது எனக்கு இந்த அளவு வாக்குகள் கிடைத்துள்ளன.
இப்படிப்பட்ட ஒருவரை பொது வேட்பாளராகக் களமிறக்கினால் அவரை எதிர்த்துப் போட்டியிட நான் தயார். நாடு முழுவதும் அவரை விடக் கூடுதலான வாக்குகளை என்னால் பெற முடியும். அப்படியிருக்க இவர்கள் எப்படி ஜனாதிபதிக்கு எதிராக வெற்றிபெற முடியும் - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## ஊடகவியலாளர் கசூரி காலமானார்

கொழும்பு, நவ.18
பிரபல ஊடகவியலாளர் கருணாதாஸ சூரியாராச்சி சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் காலமானார் என்று அரசுத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கசூரி என அறியப்பட்ட இவர், நாவலாசியருக்கான விருது பெற்றவராவார். (ற)

## பொது வேட்பாளர் தெரிவானால் எதிர்க்கட்சி கூட்டணி சிதறிவிடும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்



கொழும்பு, நவ.18
ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படவுள்ள எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தீர்மானிக்கப்பட்டவுடன், எதிர்க்கட்சிக் கூட்டணி சிதறிவிடும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.
அம்பாந்தோட்டை மாவட்டம், மித்தெனிய நகரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இன்று நாட்டில் வாழும் அனைத்து இன, மத மற்றும் பல்வேறு தொழில்துறைகளைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைக்கும் ஒரே பொது வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த மாத்திரமே. ஆளுங்கட்சியின் பொது வேட்பாளரும் அவர் தான். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது. அவரது வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுவிட்டது.
இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த எதிர்க்கட்சிகளின் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பொது வேட்பாளர் யார்? என்பது தெரிந்தவுடன் அந்தக் கூட்டணி சிதறிவிடும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தோல்வியில் இருந்து பாதுகாத்து, அவரது கட்சித் தலைமைத்துவத்தை பாதுகாக்கவே இந்த பொது வேட்பாளர் நாடகம் முன்னெடுக்கப்படுகின்றது- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# சூரிய சந்திரன் தாங்கலே, முக்கால அச்சத்தை போக்கி...
# நாட்டின் செழிப்பான எதிர்காலத்திற்கான ஜனாதிபதி தாங்கலே...

## வணக்கம் !



இன்று எமது நாட்டில் பிரச்சனையாக தலைத்தூக்கும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் பாவனைக்கான உபகரணத்தை அடிப்படை தேவையாக இணங்கண்ட எமது சங்கம் அதற்கு தேவையான இரத்தம் பாய்ச்சும் உபகரண ஆய்வுக்கூட வசதியுடனான கம்பஹா மாவட்டத்தில் கம்பஹா.ராகமை.நீர்கொழும்பு வைத்தியசாலைகளுக்கும்.வட, கிழக்கில் வவுனியா.மன்னார்.முல்லைத்தீவு.கிளிநொச்சி.யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலைகளுக்கும் வழங்க தீர்மானித்துள்ளது. இதன் மூலம் கம்பஹா.நீர்கொழும்பு.ராகமை. போன்று வட கிழக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நன்மை பயக்கும். இதற்காக செலவாகும் முழுத்தொகை 137 மில்லியனாகும்.இவ் சிறுநீரக நோய் தொடர்பான நிபுணத்துவ வைத்தியர் டீ.டி.டீ.ஜே.அபேசேகர அவர்களின் முழுமையான கண்காணிப்பு திட்டத்தின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது. கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உருப்பினர் மாவட்ட தலைவர் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அவர்களின் முழுமையான அனுசரணை மற்றும் பங்களிப்பு இதற்கு கிடைத்தமையையும் போற்றுகின்றோம்.

மஹிந்த சிந்தனை தொலைநோக்கிற்கு அமைவாக வினைத்திறனான சுகாதார சேவைக்கான அரச வேலைத்திட்டத்திற்கு மற்றும் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இவ்வாறான மகத்துவமமிக்க செயற்றிட்டத்திற்கு பங்களிப்பு வழங்க கிடைத்தமை எமது சங்கம் பெற்ற பெறும் பாக்கியமாகும்.

**ரஞ்சித் தனபால அபேசேகர**
தலைவர் - வைத்தியசாலை நலன்புரி சங்கம்

---

வடக்கில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த 30,000க்கும் அதிகமான குடும்பங்களுக்கும் யுத்தம் காரணமாக விதவைகளான பெண்களுக்கும் கௌரவமான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு கால்நடை, கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஆதரவை பெற்றுக் கொள்வது பற்றி அமைச்சுடன் நான் பேச்சு வார்த்தைகளை நடத்தினேன்.

அதன் பயனாக இந்தக் குடும்பங்களும் விதவைகளும் அவர்களுக்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் வசதியாக வாழ்வதற்கான வாழ்வாதாரத்தை தேடிக் கொடுக்க முடியும். ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் 1,000 ஒரு நாள் கோழிக் குஞ்சுகளுடனும் அவற்றுக்கு 38,40 நாட்களுக்கு தேவையான உணவுகள், மருந்துகள், அவற்றை வளர்ப்பதற்கான அறிவுரைகள் ஆகியனவும் வழங்கப்படும். அவர்கள் வளர்க்கும் கோழிகளை அமைச்சே பின்னர் கொளவனவு செய்யவும் முன்வந்துள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் மாதம் ஒன்றுக்கு ரூபா 38,000/= திலிருந்து 40,000/= வரையிலான வருமானத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

அதிமேதகு ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையின் ஒரு பகுதியாக இத்திட்டம் அமுல்செய்யப்பட இருக்கிறது.

***ரஞ்சித் தனபால அபேசேகர***
***தலைவர் - வைத்தியசாலை நலன்புரி சங்கம்***

---

### கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களின் செய்தி



மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தற்துணிவான தலைமைத்துவத்தினால் 30 வருட பயங்கரவாதத்தை அழித்து அதன் பின்னர் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்துவதற்கு "மகிந்த சிந்தனை" குறிக்கோளின் படி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பஷில் ராஜபக்ஷ அவர்கள் அர்ப்பணிப்புடன் பலவிதமான அபிவிருத்தி திட்டங்களை இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றார். அதன்படி தற்போது பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் வடமாகாண மக்களின் நலன்களிற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது வட மாகாணத்தில், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்திய சிகிச்சைக்காக மாகாணத்திற்கு வெளியேயுள்ள வைத்தியசாலைகளிற்கு செல்ல வேண்டியுள்ளது.இதனால் பாதிக்கப்படும் பல ஏழை நோயாளிகளின் நன்மை கருதி வைத்தியசாலைக்கு ஆய்வுகூட வசதியுடன் இரத்தத்தை சுத்திகரிக்கும் உபகரணம் வடமாகாண வைத்தியசாலைகளுக்கு அதாவது வவுனியா வைத்திய சாலைக்கு ஐந்து, மன்னார் வைத்தியசாலைக்கு மூன்று, முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு நான்கு .கிளிநொச்சி வைத்திய சாலைக்கு நான்கு, யாழப்பாணம் வைத்தியசாலைக்கு மூன்று, பருத்தித்துறை வைத்தியசாலைக்கு நான்கு என ரஞ்சித்தனபால அபேசேகர வைத்தியச்சாலை நலன்புரிச் சங்கத்தினால் வழங்குவதற்கு தற்போது சகல ஏற்பாடுகளும் மேற கொள்ளப்பட்டு வருகின்றன.இது மிகப் பெரிய நன்கொடையென கருதுகின்றேன்.வடமாகாண மக்களின் நன்மைக்காக அவரால் வழங்கப்படும் இச்சேவைக்கு எனது மனமார்ந்த கௌரவத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

***ஜீ.ஏ.சந்திரசிறி***
***ஆளுநர், வடமாகாணம்***

---

### வட மாகாணத்திலுள்ள பிரதான வைத்தியசாலைகளில் குருதி கூழ்மப் பிரிப்பு (Haemodialysis) பிரிவுகளை நிறுவுதல்



வட மாகாணத்திலுள்ள நாற்பட்ட சிறுநீரக வியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளிற்கு சிறந்த தரமான மருத்துவ பராமரிப்புக்களை வழங்குவதற்காக தங்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் என்ற வகையில் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இதன் பயன்மிக்க முயற்சிகளுக்கு பங்களிப்பு நல்கிய நன்கொடையாளர்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வட மாகாணத்திலுள்ள நாற்பட்ட சிறுநீரக வியாதிகள் தொடர்பான சம்பவங்களின் அதிகரிக்கும் போக்கு ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட பொது வைத்தியசாலை வவுனியாவிற்கு 5 இயந்திரங்களுடனும் மாவட்ட பொது வைத்திய சாலைகள் மன்னார் முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை ஆகியவற்றிற்கு தலா 4 இயந்திரங்களுடன் மருத்துவ ஆய்வுகூடங்களை மேம்படுத்துவதற்காக பேராதேனியா பல்கலைக்கழகத்தின் சிறுநீரக வியாதிகள் தொடர்பான கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி நிலையம் வட மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து மேற்கொண்ட முயற்சிப்படிகள் நாற்பட்ட சிறுநீரக வியாதிகளினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிற்கு கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதமாகும்

நோயாளிகள் துார இடங்களிலுள்ள நிலையங்களுக்கு சென்று சிகிச்சைப் பெறுவதை விடுத்து தங்கள் சொந்த பிரதேசங்களிலேயே சிறந்த மருத்துவ பராமரிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வடக்கு சுகாதாரத்துறையின் சேவை வழங்கலினை மேம்படுத்துவதற்காக வடமாகாண சுகாதார அமைச்சு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இது நிச்சயமாக நாற்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு அரச வைத்திய நிறுவனங்களில் சிகிச்சையினை நாடுவோரிற்கு தன்னம்பிக்கையளிக்க வழிவகுக்கும் .

"மகிந்த சிந்தனை" யின் நோக்குதல்களை நிறைவேற்றுவதில் இவ்வாறான செயற்பாடுகள் பங்களிப்பினை மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இ.ரவீந்திரன்
செயலாளர்,சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,வட மாகாணம்

---



வடமாகாணத்தில் தொற்று நோயாக பரவி வரும் சிறுநீரக நோயினால் இன்று பாரிய உயிரிழப்புக்கள் இடம்பெறுகின்றன.அவ் நோயாளர்கள் நோய் பரிசோதனைக்கு துார பிரதேசங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

இந்நோயாளர்களின் இரத்த வடிக்கட்டி இயந்திரம் வட மாகாணத்தில் இல்லாமையினால் தேச பந்து லங்கா டீ.அபேசேகர அவர்கள் அவ் இயந்திரத்தை வழங்க முன்வந்துள்ளார். அவ் கொடை வழங்கள் தொடர்பாக எனது கௌரவம் மற்றும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.அவர்து அன்பளிப்பு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

1.மாவட்ட வைத்தியசாலை வவுனியா 05
2. மாவட்ட வைத்தியசாலை மன்னார் 04
3. மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு 04
4. மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி 04
5. மாவட்ட வைத்தியசாலை யாழ்ப்பாணம் 05
6. மாவட்ட வைத்தியசாலை பருத்தித்துறை 04

ஏ.டீ.திர்பால செனவிரத்ன
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தொகுதி அமைப்பாளர் வட மாகாணசபை உறுப்பினர்
தொலைபேசி 0714293512

---

ஆய்வு உபகரண வழங்குனர்
**Hemsons International (Pte) Ltd.**

இரத்தம் பாய்ச்சும் இயந்திர வழங்குனர்.
Pyramid Agencies Development (Pvt) Ltd.





திரு.அமீர் யூசுப் அலி அவர்கள்.
முகாமைத்துவ பணிப்பாளர்

திரு.பீ.கே.ஜீ. ரஞ்சித்
பொது முகாமையாளர்,ஆய்வு கூட பிரிவு



எஸ்.முருகதாசன்
முகாமைத்துவ பணிப்பாளர்.



தேச பந்து லங்காபுத்ர **ரஞ்சித் டீ.அபேசேகர**
தலைவர் வைத்திசாலை நலன்புரிச சங்கம்
19/ பீ. கெரவலபிட்டிய வீதி, ஹெந்தளை, வத்தளை.
தொலைபேசி 0117221713/ 0777684689



# அழகு


பிரான்ஸின் அழகுமிகு நகரான பரிஸ், இளைஞர்கள் வாழ்வதற்கு ஏற்ற நகரங்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.
ரொறன்ரோவைச் சேர்ந்த அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வில், உலகளவில் இளைஞர்கள் வாழ்வதற்கு மிகச் சிறந்த நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
இதில் பரிஸ் முதலிடம் பிடித்துள்ளது. அடுத்ததாக பெர்ளின் (ஜேர்மனி), ரோம் (இத்தாலி) மற்றும் ரொறன்ரோ (கனடா) நகரங்கள் உள்ளன. வீட்டு வாடகை, குறைந்தபட்ச சம்பளம் மற்றும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் தயாராகியுள்ளது.
மேலும், இந்த ஆய்வின் முடிவில், இளைஞர்களை பொறுத்தவரை செலவுகள் முக்கிய இடம் பிடிப்பதாகவும், அந்த வகையில் இளைஞர்கள் வாழ்வதற்கு மிகச் சிறந்த நகரமாக பரிஸ் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஜினியால் தடம் மாறிய சோனாக்ஷி



ரஜினி அறிவுரையால் என் வாழ்க்கை மாறியது என்று சோனாக்சி சின்ஹா மனம் திறந்து தெரிவித்துள்ளார்.
ரஜினியுடன் லிங்கா படத்தில் நாயகியாக நடித்துவரும் சோனாக்சி சின்ஹா, ரஜினியுடன் நடித்த அனுபவங்களைப் பற்றி கூறும் போது, இதனைத் தெரிவித்தார்.
ஹிந்தியில் சல்மான்கான், அஜய்தேவ்கான், சாகித்கபூர் என்று முன்னணி கதாநாயகர்களுடன் நடித்து விட்டேன். ஆனாலும் எனக்கு ரோல் மாடலாக இருப்பது ரஜினிதான்.
அவருடன் லிங்கா படத்தில் நடித்ததை என்னால் மறக்கவே முடியாது. ஏனைய கதாநாயகர்களுடன் நடித்த போதெல்லாம் கிடைக்காத அனுபவம் லிங்காவில் ரஜினியுடன் நடித்தபோது கிடைத்தது.
ரஜினி நிறைய விடயங்கள் சொல்லிக் கொடுத்தார். உடலைக் கோயில் மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை சொன்னார். அவர் ஒரு பல்கலைக் கழகம் மாதிரி தெரிந்தார். எளிமையாகவும், அன்பாகவும் பழகினார். அவரிடம் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன.
படப்பிடிப்பில் கமரா முன்னால் இருக்கும் ரஜினி, கமரா பின்னால் இருக்கும் ரஜினி என இரு வேறு ரஜினியைப் பார்த்தேன். எனக்கு கமரா பின்னால் இருந்த ரஜினியைத்தான் ரொம்பவும் பிடித்தது - என்றார்.

# ரிலாக்ஸா வாசியுங்க



பக்கத்து வீட்டுப் பையன் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தான்.
'தம்பி, உனக்குப் பரீட்சை எப்படி எழுத வேண்டும் என்று தெரியுமா?' என்று கேட்டேன் நான்.
'சொல்லுங்க அங்கிள், தெரிந்துகொள்கின்றேன்' என்றான். 'தம்பி, பரீட்சைக்கு மொத்தம் 3 மணி நேரம் கொடுப்பாங்கள்.'
'முதல் ஒரு மணி நேரத்தில் 10 புள்ளிக்குரிய கேள்வியை எழுத வேண்டும். இரண்டாவது ஒருமணி நேரத்தில் 5 புள்ளிக்குரிய கேள்வியை எழுத வேண்டும். அதன் பின்னர் அரை மணி நேரத்துக்குள் 2 புள்ளிகளுக்குரிய கேள்வியை எழுத வேண்டும். கடைசி அரை மணி நேரத்தில் ஒருபுள்ளிக்குரிய கேள்வியை எழுத வேண்டும். இதில் ஏதாவது உனக்கு சந்தேகம் இருந்தா கேளு என்றேன். 'ஒரேயொரு சந்தேகம் தான் இருக்கு' என்ன? 'மூன்று மணி நேரமும் கேள்வியையே எழுதிக்கிட்டிருந்தா பதில் எப்போ எழுதுகிறது??'
–நமக்கு என்று எங்க இருந்துதான் வந்து சேருதுங்களோ?

# டப்பிங் தொடர்களுக்கு ஆப்பு



தமிழ் தொலைக்காட்சிகளில் தற்போது, வேற்று மொழிகளில் எடுக்கப்பட்ட சின்னத்திரைத் தொடர்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஒளிபரப்பட்டு வருகின்றன.
இதனை தடுத்து நிறுவதற்கு சின்னத்திரை நடிகர் சங்கம் மற்றும் தயாரிப்பாளர் சங்கம் என்பன முழுமூச்சாக களமிறங்கியுள்ளன.
சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராதிகா இது தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். இதேபோன்று கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த சின்னத்திரை நடிகர் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்த நளினியும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தார்.
இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையில் சின்னத்திரை நடிகர் சங்கத்தின் நிர்வாகக் குழுவாக இருக்கக் கூடியவர்களின் அறிமுக விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவி நளினி மற்றும் பூவிலங்கு மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
இதன்போது தமது சங்கத்தின் முதல் நடவடிக்கையாக, டப்பிங் தொடர்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

# இறந்தவர் மீண்டார்



போலந்தில், பெல்ஸ்க்கி என்ற இடத்தில் வசித்து வரும் ஜெனினா கோல்கிவ்ஸ் என்ற 91 வயது பாட்டி இறந்துவிட்டார் எனக் கருதி இறுதிச் சடங்கு செய்தவேளையில் உயிருடன் எழுந்தார். போலந்தில் இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
முதுமை காரணமாக கடந்த சில தினங்களாக சாப்பாடு எதுவும் சாப்பிடாமல் இருந்த பாட்டி உடல் அசைவற்று கிடந்தார். இதனால் அவர் இறந்து விட்டதாக உறவினர்கள் கருதி மருத்துவரை அழைத்து வந்து பரிசோதித்தனர். ஜனினா இறந்து விட்டார் என்று கூறிய மருத்துவர் அதற்கான சான்றிதழையும் வழங்கினார். இதனால், உறவினர்கள் இறுதிச் சடங்குக்கு ஏற்பாடு செய்தனர். அவரது உடலை, குளிர் சாதன பெட்டிக்குள் வைத்திருந்தனர்.
மயானத்தில் இறுதிச் சடங்குக்கான அனைத்து வேலைகளும் நடந்து கொண்டிருந்தபோது, உடல் அசைவு தென்பட்டுள்ளது. உடனே குளிர்சாதன பெட்டியை திறந்து பார்த்தபோது அவர் உயிருடன் இருந்தது தெரிந்தது. இறந்ததாக நினைத்த அவர் சுமார் 11 மணி நேரம் கழித்து உயிர் பிழைத்ததால் அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். பின்னர் அவரை வீட்டுக்கு கொண்டு சென்றனர்.
மேலும், உயிருடன் இருந்தவருக்கு இறப்பு சான்றிதழ் கொடுத்தது பற்றி மருத்துவரிடம் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எத்தகைய் முடிவை எடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம், அத்துடன் தமது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு ஆண்டு காலம் எஞ்சியிருக்கும் நிலையிலும் அந்தத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் இல்லை என்ற வகையில் உயர் நீதிமன்றம் தனது அபிப்பிராயத்தை அறிவித்துள்ளதையடுத்து ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரகடனத்தை அவர் நாளைய தினம் விடுப்பார் என்று சகலரும் எதிர்பார்க்கிறார்கள்.

முன்னைய ஊகங்களின் பிரகாரம் ஜனவரி 8 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் நடைபெறும் என்றும் கருதலாம். எதுவானாலும் கடந்த இரண்டு தடவைகளை விடவும், இந்தத் தடவை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ எதிர்த் தரப்பிலிருந்து கடும் சவாலை எதிர்கொள்ள விருக்கிறார் என்பது தெளிவு. அதன் காரணமாக அவரும் கூட பல வகையில் கலக்கமடைந்திருக்கிறார் என்பது அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் மஹிந்த அரசில் வெளியுறவு அமைச்சராக இருந்து கொள்கை முரண்பாடு காரணமாக வெளியேறிய -வெளியேற்றப்பட்டிருந்தவரும் இப்பொழுது ஐ.தே.கட்சியின் ஒரு பிரமுகராக விளங்குபவருமான மங்கள சமரவீரவை அவரது இல்லத்தில் தமது புதல்வர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் சென்று ஜனாதிபதி சந்தித்திருக்கிறார் என்பது இதற்கு ஒரு சான்று எனக் கொள்ளலாம். எதிர்த் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்கு நடைபெற்று வரும் எத்தனங்களுக்கு மேலும் உத்வேகம் அளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துவரும் முயற்சிகளைப் பின்னடையச் செய்யவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்படக்கூடிய பிளவுகள் மற் றும் விரிசல்களை தடுக்கவும் சந்திரிகாவின் நெருங்கிய சகா வான மங்கள சமரவீரவை எப்படியும் தமது பக்கம் ஈர்த் துக்கொள்ள அவர் திட்டமிட்டிருப்பது தெரிகின்றது. அது மட்டுமன்றி, எதிர்த்தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்கு மும்முரமாகச் செயற்பட்டு வரும் தேவை ஏற்படின் தாமே வேட்பாளராக நிற்கவும் முன் வந்திருந்தவருமான கோட்டை நாகவிகாரை பிரதம குருவான மாதுளுவாவே சோபித தேரரையும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இந்தச் சந்திப்புக்குப் பிறகு தேரர் தமது எதிர்ப் பரப்புரை வேகத்தைக் குறைத்துக் கொண்டு விட்டதாகவும் மௌனமாகி விட்டதாகவும் கூறப்படுகின்றது.

பொதுவில், எதிர்த்தரப்பில் உருவாகியுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு எதிரான கருத்து வலுப் பெற்றிருப்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அதனால் தான் அரசுத்தரப்பின் உயர்மட்டத்தில் கலக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் இந்த விடயத்திலாவது ஒருமைப்பாடு இன்னமும் உருவானதாகத் தெரியவில்லை. நிறைவேற்று அதிகாரத்தை கடுமையாக எதிர்த்து, அதனை ஒழிப்பதாகவும் சூளுரைத்து பதவிக்கு வந்தவர் அதனை வைத்தே இன்று ஆட்சி நடத்துகிறார். நாட்டின் நன்மைக்கு அந்த அதிகாரம் தேவை என்பதாகவும் பரப்புரை செய்யப்படுகின்றது.

அதனை அடிமட்ட சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல புலிப்பூச்சாண்டி கட்டவிழ்த்துவிடப்படுகின்றது. வெளிநாட்டில் புலிகள் ஒன்றுகூடுவதாகவும் பரப்புரை செய்யப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சில அமைச்சர்களும் அதற்கு முன்னிலையில் இருந்து செயற்படுகின்றார்கள்.

ராஜபக்ஷ அரசைக் கவிழ்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சதி செய்கிறது என்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ஸ, தனிநாட்டுக்கு அடிக்கல் நடுகிறார்கள் என்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்துகொண்டிருக்கிறது என்ற கேள்வி இயற்கையாகவே எழத்தான் செய்கின்றது.

தென்னிலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேரும் பட்சத்தில் (அது நடப்பது என்னவோ முயற்கொம்பு போல்தான் தெரிகின்றது) நிச்சயம் தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைப் பலம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அவர்களுக்கு இன்றியமையாத நிலை தோன்றலாம். அவ்வாறான நிலையில் எதிர்க்கட்சி வேட்பாளரை ஒரு கொள்கையின் அடிப்படையில் ஆதரிக்கும் முடிவை எடுத்தால் நிச்சயம் அது அரச தரப்பின் வீண்பழி சுமத்தும் பரப்புரைக்கு மேலும் இடம் அளிப்பதாக அமைந்து விடும். வேறொருவகையில் அரச தரப்பு வேட்பாளரை ஒரு நிபந்தனையின் பேரில் ஆதரிப்பதானாலும் கூட அது வெறும் ஏமாற்றாக முடிந்து விடும். ஏனென்றால் வாக்குறுதிகளைப் புறந்தள்ளிவிட்டு காரியம் பார்ப்பதில் அவர்கள் வல்லவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ள விடயம். இந்த நிலையில் தமிழ்ப்பேசும் மக்கள் தரப்பு ராஜதந்திரத்துடன் செயற்படுவதாக இருக்கவேண்டும்.

நாம் யாரையும் ஏமாற்றவும் வேண்டாம், அதே சமயம் எப்போதும்போல் ஏமாற்றப்படவும் வேண்டாம். தமிழ் - முஸ்லிம் மக்கள் தலைவர்கள் நன்றாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய கால கட்டம் இது. ஏனென்றால் அவர்கள் எடுக்கும் முடிவு தமிழ்பேசும் மக்களின் எதிர்கால வாழ்வியலுக்கு ஆதாரமாக அமைவதாய் இருக்கும் - இருக்க வேண்டும்.

# இந்தியாவே தீர்க்க வேண்டும்

இந்து நாளிதழுக்காக
கே. வெங்கட்ரமணன்.

இலங்கை இராணுவ நடவடிக்கையானது மே 2009இல் முற்றுப்பெற்றதன் பின்னரான ஈழத்தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவரால் சென்னையில் நிகழ்த்தப்பட்ட முதலாவது உரையாக வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் உரை அமைந்துள்ளது.

இந்தியாவால் இலங்கை அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட அழுத்தத்தின் விளைவாக நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் விக்னேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவுக்கான முதலாவது பயணமாக இது அமைந்துள்ளது.

போதியளவு அதிகாரத்தைக் கொண்டிராத மாகாண சபை நிர்வாகமானது இராணுவ ஆட்சிக்குள் அகப்பட்டிருந்த சூழலில் இலங்கை உச்ச நீதிமன்றின் முன்னாள் நீதிபதியான க.வி.விக்னேஸ்வரன் மக்கள் மன்றத்தால் வழங்கப்பட்ட ஆணையை ஏற்று வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். இவ்வாறான ஒரு சூழலில், தனக்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் மூலம் விக்னேஸ்வரன் மாகாண சபையை முன்னோக்கி வழிநடத்திச் செல்கிறார்.

பாதுகாப்பும் இறையாண்மையைப் பாதுகாத்தலும் என்கின்ற தலைப்பில் சென்னையிலுள்ள கே.ஜி.கண்ணபிரான் நினைவுச் சொற்பொழிவில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரை நிகழ்த்தியமையானது ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பில் ஏற்கனவே இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா எத்தகைய பங்களிப்பை வழங்குகிறது என்பதை வினவுகின்ற மிகமுக்கிய குறிப்பிடத்தக்க ஒரு சம்பவமாக அமைந்துள்ளது: பாதுகாப்பு மற்றும் இறையாண்மை என்கின்ற பெயரில் மக்களின் சுதந்திரம் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட முடியாது என்பது க.வி.விக்னேஸ்வரனின் உரையின் மிக முக்கிய கருத்தாகக் காணப்பட்டது. அரசு பாதுகாப்பு என்பதை விட மக்கள் பாதுகாப்பு என்கின்ற எண்ணக்கரு மூலம் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என விக்னேஸ்வரன் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எது எவ்வாறிருப்பினும், முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரையானது உரிமைகள் தொடர்பான விவாதமாகக் காணப்படவில்லை. இது இந்தியாவின் மனச்சாட்சிக்கு விடுக்கப்பட்ட ஒரு உணர்ச்சிகரமான முறையீடாகக் காணப்பட்டது. ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா ஒருபோதும் அசட்டை செய்துவிட முடியாது என்பதைக் கோருகின்ற ஒரு மனுவாக விக்னேஸ்வரனின் உரை அமைந்திருந்தமை தெளிவாகும். விரிவாக நோக்கில், விக்னேஸ்வரனின் உரையானது அனைத்துலக சமூகத்தின் முன்னால் மிதவாதத் தமிழ்த் தலைமையால் முன்வைக்கப்பட்ட ஒரு நம்பகமான முறைப்பாடாகக் காணப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கு இலங்கை அரசானது அனைத்துலக சமூகத்திடம் அதன் இராஜதந்திர, ஆயுத மற்றும் தார்மீக ஆதரவை வழங்குமாறு கோரியபோது அந்த அரசினால் அனைத்துலக சமூகத்திடம் வெளிப்படையாக முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் உத்தரவாதங்கள் போன்றவற்றை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது உரையின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே விக்னேஸ்வரன் இந்தியாவிடம் தமிழ் மக்களின் பிரச்சினையில் பங்கெடுக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் வரையப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் எனவும், அதன்மூலம் இலங்கையில் செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் சமரசப் பேச்சுக்களை மேற்கொள்வேன் என்பதையும் உறுதிப்படுத்தி-மே 2009இல் ஸ்ரீலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூனுடன் இணைந்து- கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டமையை விக்னேஸ்வரன் தனது உரையின் போது மீளவும் நினைவுபடுத்தினார்.

இந்தியாவின் சட்ட மற்றும் தார்மீகக் கடப்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணசபை முதலமைச்சர் குறிப்பிடும்போது, 1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் போரின் இறுதிக்கட்டத்தில் இந்திய அரசால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட இராணுவ, அரசியல் மற்றும் புலனாய்வு சார் உதவிகள் போன்றவை இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்துக்கு பயனுள்ள ஒரு அரசியற் தீர்வை அந்நாட்டு அரசும் வழங்கும் என்கின்ற உறுதிப்படுத்தலின் விளைவாகவே இந்தியாவால் வழங்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

இவை அனைத்தும் இலங்கை அரசால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டவை என்பது தெளிவானதாகும் எனவும் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ இத்தகைய வாக்குறுதிகளை வழங்காதிருந்திருந்தால் இந்தியா தனது தலையீட்டை அடக்கி வாசித்திருக்கலாம். ஆனால் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரானது வெறுமனே பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என ஜனாதிபதி ராஜபக்ஷ பொய்யுரைத்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற, இடம்பெறும் இராணுவ-அரசியல் மோதலை எந்தவொரு வெளியாரின் தலையீட்டால் தடுக்கமுடியாது. இதனை இந்தியாவும் இலங்கையும் இணைந்தே தடுக்க முடியும். இலங்கையில் நிலவும் அரசியல் பிரச்சினை போரின் மூலம் தீர்க்கப்பட முடியாது. இந்தநிலையில் எந்தவித அதிகாரமும் வழங்கப்படாது வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டமை, மாகாண சபைக்கு இணையாக இராணுவ நிர்வாகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டமை போன்ற சூழலில் இலங்கையின் வடக்கில் நீதி மற்றும் சமாதானம் போன்றவற்றை ஒருபோதும் நிலைநிறுத்த முடியாது. இந்திய அரசிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் விடுத்துள்ள கோரிக்கைகளில், தனது மாகாணத்தில் நிலவும் இராணுவமயமாக்கலைத் தடுப்பதற்கு இந்தியா உதவவேண்டும் என்பதே பிரதானமானதாகக் காணப்படுகிறது. வடக்கில் இராணுவமயமாக்கல் நிலவுகிறது என்பதை அனைத்துலக சமூகம் நன்கு புரிந்துகொண்டுள்ள போதிலும், இந்த விடயத்தை அனைத்துலக சமூகம் தனது கருத்திலெடுத்துச் செயற்படுத்தவில்லை. இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் செயற்படும் அரசின் உள்ளக அரசியல் சூழலானது முற்றிலும் மாற்றமடைந்துள்ளது. இலங்கையின் உள் அரசியல் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது.

சமாதான காலத்திலும், போரின் போதும் இலங்கையில் அமைதி நிலவுவதற்கு உத்தரவாதமளித்த அனைத்துலகச் சமூகமானது அங்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையெழுந்தபோது அப்போதைய அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பைக் கோரி நின்றது.

இலங்கையில் செயற்படும் இரு பெரும் பிரதான அரசியல் கட்சிகளான இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் பங்களிப்புடனேயே நாட்டில் நிலவும் இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றம் மூலம் தீர்வுகாண முடியும் என்பதையும் அனைத்துலக சமூகம் வலியுறுத்தியிருந்தது. எவ்வாறெனினும், இலங்கையின் தற்போதைய நாடாளுமன்றம் மற்றும் இலங்கைத் தீவு முழுமையிலும் நிலவும் அதிகார வலு போன்றவற்றுக்கு இடையிலான தற்போதைய உறவு நிலையானது, நாட்டில் நிலவும் எந்தவொரு பிரச்சினைக்கும் மஹிந்த ராஜபக்ஷ என்கின்ற தனிமனிதனின் விருப்பு வெறுப்புப் பிரதிபலிப்பதாக மாறியுள்ளது. நாட்டில் தொடரும் இராணுவமயமாக்கல், வடக்கின் மக்கள் வாழ்வுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள், வளர்ந்து வரும் சிங்கள ஏகாதிபத்தியவாதக் குழுக்கள், இவர்களால் நாட்டில் வாழும் முஸ்லிம்கள் உட்பட்ட சிறுபான்மைக் குழுக்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், ஜனநாயக ஆட்சிமுறைமையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், நீதியாட்சி குழிதோண்டிப் புதைக்கப்படுதல், அரசைஎதிர்ப்பவர்களுக்கு எதிராக விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், தலையீடுகள் போன்ற அனைத்துக்கும் ராஜபக்ஷவே காரணமாவார்.

இலங்கையில் மீண்டும் சட்ட ஆட்சி மற்றும் ஜனநாயகம் போன்றவை தழைப்பதற்கு இந்தியா தனது பங்களிப்பை நல்கவேண்டும் என விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். இதனை அவ்வளவு இலகுவாக அடைந்துவிட முடியாது. இந்தியாவானது ராஜபக்ஷவின் ஆட்சியில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கான அல்லது இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவருக்கு வெளிப்படையாகத் தனது ஆதரவை வழங்குவதை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே இது சாத்தியமாகும்.

ஜனாதிபதியாகச் செயற்படும் கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில், ராஜபக்ஷ குறிப்பிடத்தக்க இரண்டு வெற்றிகளை நிலைநாட்டியுள்ளார். அதாவது நர்ட்டின் அரசியலில் தனக்கென ஒரு ஏகபோக உரிமையை நிலைநாட்டியுள்ளமை மற்றும் மேற்குலக நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றால் தனக்கெதிராக மேற்கொள்ளப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் இராஜதந்திர ரீதியாக வெற்றி கொள்வதற்காக இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றுடன் இராஜீக உறவுகளைப் பலப்படுத்தியுள்ளமை போன்றனவே அந்த வெற்றிகளாகும்.

இவ்வாறான ஒரு பின்னணியில் தற்போது மூன்றாவது தடவையாகவும் இலங்கை ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளார். இவர் மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் வெற்றி பெறுவாரா என்பது நிச்சயமற்றது. கடந்த இரண்டு தேர்தல்களிலும் ராஜபக்ஷ சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். இந்தநிலையில் இவர் ஜனவரி மாதத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கடந்த காலத்தைப் போன்று சிங்கள மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றி பெறுவாரா என்பது எதிர்வுகூற முடியாததாகும்.

நன்றி- புதினப்பலகை

18 NOV 2014

# அறியாமை இருளைப் போக்கும் அறிவு

ம.துவாரகா

உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் அறிவுடன் வாழவே விரும்புகிறான். மனிதர்களுக்குள்ளே பல்வேறு ஆற்றல்கள் இருக்கின்றன. இவற்றைப் புரிந்து கொண்டு தமக்குள் இருக்கும் அறிவைத் தாமே வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது அறியாமை என்னும் இருளைப் போக்குவதற்கு உதவுவது அறிவாகும். அறிவு இயற்கை அறிவு, புலனறிவு, நூலறிவு, பொதுஅறிவு, தன்னறிவு, பட்டறிவு, கல்வியறிவு, பகுத்தறிவு, உலகறிவு, நுண்ணறிவு, செயலறிவு, இறையறிவு, கேள்வியறிவு, காட்சியறிவு, தொழிலறிவு, கலையறிவு, காலஅறிவு எனப் பலவகையாக விரிந்து செல்கின்றது.

இயற்கை அறிவென்பது எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறது. ஒரு மனிதனுக்கு இது பிறவியிலேயே தோன்றுகிறது. மனிதனின் இயற்கை அறிவானது சிறப்பானது. ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபட்ட அளவுகளிலேயே இது காணப்படும். முதன்முதலில் எந்த அளவில் இந்த அறிவு மனிதர்களிடத்தே தோன்றுகிறதோ, அதே அளவில் இந்த அறிவு இறுதிவரை காணப்படும். மனிதன் பிறந்தது முதல் சாகும்வரை இந்த அறிவு இருக்கும்.

மெய்,வாய்,கண்,மூக்கு,செவி என்கின்ற ஐம்புலன்களின் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் அறிவு புலனறிவாகும். ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய ஐம்புலன்களின் விருத்திக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு அவர்களின் புலனறிவு அமைகிறது.

அறிவிலே சிறந்த அறிவு நாம் பெற்றுக்கொள்ளும் கல்வியறிவாகும். வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல் என்பவற்றின் மூலம் பெறப்படும் அறிவே கல்வியறிவாகும். கல்வியறிவு என்பது ஒரு சாதாரண மனிதனையும் மாமனிதனாக மாற்றுகிறது. கல்வியறிவைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தப் பேதமும் இல்லை. இனம், மதம், மொழி, சாதி, வயது, பால் என்ற சகல வேறுபாடுகளையும் களைந்து அனைவராலும் பெறக்கூடியதாகவுள்ளது கல்வியறியாகும்.

கல்வியறிவு என்னும் அறிவை அடிப்படையாகக் கொண்டு நூல்களைத் தேடிப் படிப்பதால் நாம் நூலறிவைப் பெற்றுக்கொள்கிறோம். நண்பர்களுக்கெல்லாம் நல்ல நண்பன் நல்ல நூல்களாகும். பல அறிஞர்கள், விஞ்ஞானிகள் எனப் பலரும் நூல்களை நேசித்து அவற்றிலிருந்து பல பாடங்களைப் பெற்றுப் பல கண்டுபிடிப்புக்களையும் படைப்புக்களையும் எமக்கு விட்டுச்சென்றுள்ளார்கள். நூலறிவுள்ளவரிடம் பல்துறை சார்ந்த அறிவும் உருவாகின்றது.

நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அறிய உதவுவது உலகறிவாகும். மனிதன் சமுதாயத்தோடு ஒன்றி வாழ்பவனாகையால் அவனை ஒரு குறுகிய வட்டத்துக்குள் இல்லாமல் பரந்த வட்டத்துக்குள் கொண்டு செல்வது உலகறிவு ஆகும். இது உலக நடப்புக்களை அறிந்து அதன்படி செயலாற்ற உதவுகிறது.

தன்னறிவு என்பது பிறரின் உதவியின்றி சொந்தச் சிந்தனையால் ஏற்படும் அறிவாகும் இதுவே பலவிதமான புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் வழிகோலியது. தன்னறிவுடைய ஒருவர் ஏன்? எப்படி? எதற்கு? என்ற சிந்தனைகளைத் தூண்டி விடுகிறார். இந்த அறிவினாலேயே பல புதிய படைப்புக்கள் உருவாகி, இந்த உலகம் சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டது இந்தத் தன்னறிவேயாகும்.

பட்டறிவு என்பது ஒருவன் தான் பெற்ற அனுபவங்களால் பெற்றுக்கொள்ளும் அறிவாகும். ஒருவன் தான் பெற்றுக்கொண்ட கஷ்டங்கள், துன்பங்கள், சந்தோஷங்கள் என்பவற்றின் ஊடாகப் பெறுவது இந்தப் பட்டறிவாகும். பட்டறிவென்பது அழிந்துவிடாது. இதன் மூலமாக எவன் வெற்றி பெறுகின்றானோ, அவன் இந்த உலகத்தையும், மக்களையும், இயற்கையையும் வெற்றி பெற்றவனாகின்றான். ஏனெனில் அவன் தனது வாழ்க்கையோடு போராடியிருப்பான்.

அன்னம் பாலைப் பிரித்தெடுப்பது போன்று நல்லது தீயதைப் பிரித்தறியும் அறிவு பகுத்தறிவு ஆகும். பகுத்தறிவு, மனிதனுக்குச் சிறப்பாகவுள்ள கொடையாகும். ஒவ்வொரு மனிதனும் நல்லது எது கெட்டது எது என்று அறிந்து அதற்கேற்ப சிந்தித்து வாழ வழி காட்டும் அறிவே இதுவாகும்.

நாம் கற்றவற்றை எல்லாம் கற்றுவிட்டு, அறிந்து கொள்பவற்றை எல்லாம் அறிந்து விட்டு அதற்கு செயல் வடிவம் கொடுக்காது விடும்போது அதனால் எந்தவித பிரயோசனமும் கிடைக்காது. கற்றவற்றுக்கு செயல் வடிவம் கொடுத்து அதனை நடைமுறைப்படுத்தும்போது அது செயலறிவு எனப்படுகிறது. ஒருவருடைய பண்புகள் நடத்தைக் கோலங்கள் என்பவற்றை தீர்மானிப்பது செயலறிவே ஆகும்.

பொதுவிடயங்கள் பற்றி அறிந்து கொள்வதை பொது அறிவு என்றும்- நமது மூளைக்கு நற்பயிற்சி கொடுத்து சிந்தித்து கணித ரீதியாகவோ வாழ்வியல் ரீதியாகவோ சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொடுப்பது நுண்ணறிவு என்று கூறுகிறோம். சிக்கலான பிரச்சினைகளுக்கு எளிய வழியில் தீர்வைத் தருவது நுண்ணறிவாகும்.

ஒரு விடயத்தை காட்சிப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் அறிவு காட்சியறிவு எனப்படும். அதாவது ஓவியங்கள், சிற்பங்கள், படங்கள், திரைப்படங்கள், நாடகங்கள், நகைச்சுவைப் படங்கள், கேலிச்சித்திரங்கள், விளக்கப்படங்கள் என்பன மூலம் உணர்வுபூர்வமான செயற்பாடுகளை வெளிக்கொணர்வதற்கு உதவுகின்ற அறிவு காட்சியறிவு ஆகும்.

ஒருவர் தனது தொழிலின் மூலமாக பெற்றுக் கொள்ளும் அறிவு தொழிலறிவு ஆகும். ஒரு தொழிலை தொடர்ந்து செய்யும் போதும் அந்த தொழிலின் நுணுக்கங்களையும் தொழிலை விருத்தி செய்யும் செயற்பாடுகளையும் அவர் தொழிலின் மூலமாகவே கற்றுக் கொள்கிறார்.

எந்த வேலையைச் செய்யும் போது மிகவும் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செய்து முடிக்க வேண்டும். காலத்தை உணர்ந்து செயற்படுவதே காலஅறிவாகும். நேரத்தை முகாமைத்துவம் செய்து எவனொருவன் வேலை செய்கிறானோ, அவனுக்கு வெற்றி நிச்சயம். விவசாயிகள் பருவகாலத்தை நம்பிப் பயிர் செய்கிறார்கள். அந்தப் பருவ காலத்தில் பயிர் செய்யத் தவறினார்களாயின் பயிர்கள் அழிந்து நாசமாகிவிடும். அதேபோலத் தான் மனிதன் ஒவ்வொரு விடயத்தையும் காலத்தின் தேவையை அறிந்து செயற்படுத்த வேண்டும். ஆகவேதான் நேரம் பொன்னானது என்று குறிப்பிடுகிறோம்.

தீர்ப்பறிவு என்பது சமயோசித புத்தியாகும். எதனையும் ஆராய்ந்து பலதரப்பட்ட கோணங்களில் சிந்தித்து சிக்கலான விடயங்களுக்கும் நடுவுநிலை தவறாது முடிவெடுத்து தீர்ப்பு வழங்குதலாகும். நீதிபதிகள், சமூகவியலாளர்கள் போன்றவர்களிடத்தில் இந்தத் தீர்ப்பறிவு கூடுதலாகக் காணப்படும். எந்தப் பிரச்சினைகளுக்கும் சரியான முறையில் நன்றாக யோசித்து தீர்வை எடுக்கும்போது முரண்பாடுகள் ஏற்படாது. எமது வாழ்வில் சரியான தீர்ப்பறிவின் மூலம் பல விடயங்களுக்கு தீர்ப்பை நமக்கு நாமே கொடுக்கிறோம். இதனால் ஒரு சமத்துவத் தன்மையை ஏற்படுத்துகிறோம்.

கலைகளின் மூலமே ஒவ்வொருவரதும் பண்பாடு, கலாசார விழுமியங்கள் பாதுகாக்கப்படும். மனிதன் பிறந்ததிலிருந்தே அவனது அசைவுகள் கூத்தாகவும், கூச்சலிட்டது இசையாகவும் தொடங்கி, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாக அவை வளர்ச்சி பெற்றன. கலையறிவானது நடனம்,சிற்பம், செதுக்கல், ஓவியம், வாய்ப்பாட்டு என்பவற்றின் மூலமும் மிருதங்கம், வயலின், புல்லாங்குழல் என்பவற்றின் மூலம் இசையைக் கொண்டு வருவதன் மூலமும் வெளிக்காட்டப்படுகிறது. எழுத்தாற்றலினால் பல படைப்புக்களை உருவாக்குவதும் ஒரு கலையேயாகும். கலைகளினால் மனிதர்களது மனத்தில் நல் ஆற்றுப்படுத்துகை ஏற்படுகிறது.

இந்த அறிவுகளையெல்லாம் அறிந்து கொள்வதற்கும், அதற்கேற்றவாறு எம்மை செயற்படுத்துவதற்கும், எமக்கு மேல் இருக்கும் சக்தியை இறைவன் என்ற பெயரால் ஒவ்வொருவரும் அதற்கு ஒரு வடிவம் கொடுத்து வணங்குகிறார்கள். நற்போதனைகளைப் பெற்று பயபக்தியுடன் செயற்படுகிறார்கள். இதுவே இறையறிவு எனப்படும். இவ்வாறான பலவகை அறிவுகளையும் ஒருவன் பெற்று அதன்படி ஒழுகி மற்றவர்களுக்கும் அதனைக் கொடுத்தால் அவனே சிறந்த மேதையாவான். ஒருவர் இந்த அறிவுகளை பெறுவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.



இது மரநடுகை மாதம்

## சூழலுடன் நட்புறவு

செ.செல்வராஜா

கால நிலை மாற்றம் புவி வெப்பமயமாதல் போன்றவை எல்லா நாடுகளிலும், தற்காலத்தில் காற்றில் மிதந்து வரும் சொற்றொடர்களாகியுள்ளன. உண்ணுதல், உறங்குதல், பொழுது போக்குதல், ஆடை அணிதல், படித்தல் என அனைத்துடனும் காலநிலை மாற்றம் ஏதோவொரு விதத்தில் தொடர்பு பட்டுள்ளது. அவற்றில் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

தென்கொரியா நாட்டில் கால நிலை மாற்றம் தொடர்பான மத்திய நிலையம் ஒன்று, 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் இது நடத்தப்பட்டு வருகின்றது. மக்களின் மனதில் சுற்றாடல் தொடர்பான நல் மனப்பாங்கை ஏற்படுத்துவதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.

மனிதரின் இருப்பில், நிலைபேண்தன்மை என்பது அத்தியாவசியமானதொன்று. நிலைபேண்தன்மை என்பது விரும்பினால் ஏற்றுக்கொண்டு, விருப்பமில்லையாயின் தவிர்ப்பதற்குமான ஒரு விடயமல்ல. நிலை பேணுகை, மற்றும் காலநிலை மாற்றம் என்கின்ற சவால்களுக்கான ஒரே தீர்வு, ஒவ்வொருவரினதும் மனப்பாங்கில் ஏற்படுகின்ற மாற்றத்தினாலேயே தங்கியுள்ளது என்று காலநிலை மாற்றம் தொடர்பான மத்திய நிலையத்தின் தலைவர் தெரிவிக்கின்றார்.

கால நிலை மாற்றத்தின் தீங்கான பக்கங்களை, குறிப்பாக இளைஞர்கள் உணரச் செய்தல் அவசியம் ஆகும்.

ஒரு வருடத்துக்குப் பயன்தரப் பயிரிட வேண்டுமாயின் நெல்லைப் பயிரிடுங்கள். 10 வருடங்களுக்காயின் மரங்களை நடுங்கள். நூறு வருடங் களுக்காயின் பிள்ளைகளைப் பயிற்று வித்து கல்வி ஊட்டுங்கள் என்பது ஒரு உலகப் பொது முது மொழி.

அதற்கமைய வீடுகளில் தமது முன் மாதிரியான பழக்க வழக்கங்கள் ஊடாக வளர்ந்தவர்கள் இதனைச் சாதனையாக்க வேண்டும். சுழலைக் காக்கவும், பேணவும் எமக்கு உள்ள தெரிவு தற்போதைக்கு மிக எளிய வாழ்க்கையும். மரங்களை அழியாது காத்தலும், மரங்களை நடுவதும்தான்.



# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



மேற்கு மண்டலம், மும்பை அணி ஆகியவற்றுக்கு ஏற்கனவே அணித்தலைவராக இருந்தபடியால், சச்சினுக்கு அந்தப் பொறுப்பு என்பது ஒன்றும் புதிதல்ல என்றாலும், இந்திய அணியின் தலைமைப் பொறுப்பு வித்தியாசமானது. அணித் தலைவரின் ஒவ்வொரு நகர்வும் தலைப்புச்செய்தி ஆவது ஒருபுறம் என்றால், ஐந்து மண்டலங்களில் இருந்தும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் இருந்தபடியால் தான் விரும்பிய அணி கிடைக்காமல் சச்சின் திண்டாடிய தருணங்கள் சில உண்டு.

ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகளைத் தோற்கடித்து டைட்டன் கோப்பையைத் தூக்குவதில் சச்சினின் கணக்குத் தொடங்கியது. அதிலும் இறுதிப் போட்டியில் 220 ஓட்டங்களை எடுத்து தென் ஆப்பிரிக்க அணியைக் கட்டுப்படுத்த ராபின் சிங்கை ஐந்தாவது பந்து வீச்சாளராக ஆக்கி நேராகப் பந்தை வீசச்செய்து உதிரிகளைத் தடுத்து வெற்றிக்கனியைப் பறித்தார் சச்சின்.

முதல் டெஸ்ட் போட்டியில், 170 ஓட்டங்கள் தென் ஆப்பிரிக்க அணிக்கு அகமதாபாத்தில் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. சூழல் பந்து வீச்சாளர்களைக் கொண்டு தாக்குவார் என்கிற ஊகத்தைப் பொய்யாக்கி, சுனில் ஜோஷியை ஆட்டங்கள் எடுக்காத மாதிரி பந்து வீசச் செய்தார். இன்னொருபுறம் மற்றுமொரு மித வேகப்பந்து வீச்சாளரான ஜவகல் ஸ்ரீநாத் பந்தை துல்லியமாக வீசி இலக்குகளை வீழ்த்தினார். அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதுவே அவரின் தலைமையின் உச்சப்புள்ளி. அதற்குப் பின்னர் நடந்தவை எல்லாம் பெரும்பாலும் சறுக்கல்களே.

கங்குலி அடித்து ஆடுகிற பண்பு கொண்டவர் என்பதுடன் டிராவிட் எப்பொழுதும் நிதானமான ஆட்டத்தை ஆடுவதோடு, பெரும்பாலும் வெளியில் செல்லும் பந்துகளை ஆரம்பத்தில் விட்டு ஆடும் பாணி கொண்டவர் என்பதால் அவர்களை முறையே ஐந்து மற்றும் மூன்றாம் இடத்தில் ஆடவைக்கும் பாணியை முதன்முதலில் துவங்கி வைத்தவர் சச்சினே. அடுத்த டெஸ்ட்டைத் தோற்றாலும், இறுதி டெஸ்டில் அஸார் சிறப்பாக ஆட அணி

ø>V|ç«øk|Åm.

*(தொடரும்)*

## கட்டட நிர்மாணத்துறை வெற்றிடங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புதிய கட்டட வேலை ஸ்தலத்திற்கு கீழ்குறிப்பிடப்படும் வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிட வசதியுண்டு.

1. Technical officer:
   NDT (Civil) with minimum 04 years Experience
   or
   NCT (Civil) with minimum 08 years Experience
2. Building supervisor:
   NCT (Civil) with minimum 04 years Experience
   or Equivalent.

**தொடர்புகட்கு:**

முகாமையாளர்,
வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி பிறைவேட் லிமிட்டெட்,
பொதுவைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,வவுனியா.
E mail: vvrcopvt@sltnet.lk / vvrcopvt@gmail.com (54355) (12.3.6)

## கட்டட நிர்மாணத்துறை பணியாள்களுக்கான வெற்றிடம்

கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புதிய கட்டட வேலை ஸ்தலத்தில் கீழ்குறிப்பிடப்படும் பணியாள்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிட வசதியுடன் வார நடுப்பகுதியில் முற்பணமும் வார இறுதியில் ஊதியமும் வருட இறுதியில் சேவைக்காலத்திற்கான போனஸ் பணமும் வ்ழங்கப்படும்.

1. மேசன் உதவியாள்கள் (Labours)
2. மேசன் தொழிலாளர் (Masons)
3. தச்சுத்தொழிலாளர் (Carpenters)
4. வர்ணம் தீட்டுபவர் (Painters)
5. கம்பி (வலுவூட்டி) வளைப்பவர்கள் (Barbenders)
6. ஒட்டுநர் (Welders)

தொடர்புகட்கு: முகாமையாளர்,
இலங்கை மத்தியவங்கி மாகாண காரியாலய கட்டட வேலைஸ்தலம்
சிவபாதகலையக பாடசாலை வீதி,
அறிவியல்நகர், கிளிநொச்சி.

அல்லது

வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி பிறைவேட் லிமிட்டெட்,
பொதுவைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,வவுனியா. (54356) (12.3.6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அறிவித்தல்

இல.22, கலைமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம் நாளை 19.11.2014 இல் இருந்து காலை 7.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை சேவையில் ஈடுபடும் என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

முகவர்: சுசீலாவதி
செல்வநாதன் (54351) (4.6.3)

## RIFRAA INTERNATIONAL PVT. LTD.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நன்மதிப்பைப் பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி அதியுயர் விருதினைப் பெற்ற

**QATAR CLEANING COMPANY**

வேலைவாய்ப்புக்கள் - துரித பயணம் - ஒரு கிழமையில்

| Job | | QTY No's | Salary |
|---|---|---|---|
| Cleaning Labor | Male | 90 | 900QR +OT |
| | Female | 30 | 1000QR +OT |
| HEAVY VEHICLE DRIVER(GULF LICENSE) | | 03 | 1700+Trip |
| LIGHT VEHICLE DRIVER (GULF LICENSE) | | 04 | 1700+OT |
| MASON (MAINTENANCE) | | 07 | 1400+OT |
| PLUMBER (MAINTENANCE) | | 07 | 1400+OT |
| PAINTER (MAINTENANCE) | | 07 | 1400+OT |
| ELECTRICIAN (MAINTENANCE) | | 05 | 1500+OT |

இன்னும் ஏராளமான வேலைவாய்ப்புக்கள்
95, முஸ்லிம் கல்லூரி வீதி,யாழ்ப்பாணம்.
077 843 6475 (54360)(5.6.3)

## வீடு வாடகைக்குண்டு

352/6, இருபாலை வீதி, கோண்டாவிலில் 6 அறைகள், சமையலறை, ஹோல்ஸ் மற்றும் சகல நவீன வசதிகளுடைய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (54358)(5.6.3)
தொடர்பு: 077 189 1453

**விற்பனைக்கு** நல்லின 2 மாதம் நிரம்பிய அல்சேஷன் கொக்கஸ்பனில் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன. (54342) (4.6.3)
917, தட்டாதெருசந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 707 0711/075 991 0060

## டீசல் கார் MORRIS-OXFORD விற்பனை

நல்ல நிலையிலுள்ள 31 Sri 3006 MORRIS - OXFORD கார்.
தொடர்பு: T.சண்முகநாதன் (சுக்கிரிவீடு),
111, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.
(54294) (12.6) TP: 077 134 6424

## இடமாற்றம்

**டயானா பிளாஸ்ரிக்**

108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)

* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல். (C/17542) (7.6.3)
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்

தொடர்பு : 077 592 5088/021 222 8680

## தவறிவிட்டது

கரடிப்போக்கு சந்தியில் இருந்து திருநகர் ஊடாக உருத்திரபுரம் வரையான வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தேசிய அடையாள அட்டை, இன்சூரன்ஸ், வாகன லைசன்ஸ் என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசிஇலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். **0 77 284 8470** (47930)(7.6.3)

# மரண அறிவித்தல்



## சின்னையா இரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இரத்தினம் 15.11.2014 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நடராசா (அளவெட்டி), காலஞ்சென்றவர்களான பேரம்பலம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, இராசலட்சுமி (கனடா), திருநாவுக்கரசு, சுந்தரலிங்கம் மற்றும் செல்லமுத்து (கனடா), அன்னலட்சுமி (கனடா), தனபாலசிங்கம் (மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும், இரவீந்திரன் (திருநெல்வேலி), இராஜேஸ்வரன் (திருநெல்வேலி), இந்திராவதி (திருவையாறு), இரகுநாதன் (கனடா), இராமநாதன் (கனடா), இரஞ்சனாதேவி (திருநெல்வேலி), இராசேந்திரன் (கனடா), இராசமலர் (கனடா), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரி, சரஸ்வதி, சண்முகநாதன் (திருவையாறு), காலஞ்சென்ற ஜெயநாயகி மற்றும் ரதி (கனடா), சிவசாந்தி (கனடா), தவயோகன் (கனடா), அகிலன் (கனடா) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் ராஜ்குமார், சுகந்தினி, கேதீஸ்குமார், கவிதா, பார்த்தீபன், காலஞ்சென்றவர்களான சஞ்சீவன், சுஜீவன் மற்றும் தனுசன், ரஜீவன், கிருஷியன், றஜிதா, ரபிஷன், கஜீவன், பிரியாந், சதுர்ஜா, சுஜித்தா, நிஜித்தா, மயூரன், அஸ்வினி, அபினாஷ், ஜெயமாலா, மகேஸ்வரன், தர்சிகா, சங்கீதா ஆகியோரின் பேரனும், தட்சாயினி, ஷாதுர்யா, கவிச்சரன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(54348) (12.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# அமெ. பணயக் கைதி ஐ.எஸ்ஸால் சிரச்சேதம்

## மீண்டும் அட்டூழியம் புரிந்தனர் தீவிரவாதிகள்



பெய்ரூட், நவ.18

ஐ.எஸ். தீவிரவாதிகள் மீண்டும் ஒரு அமெரிக்க பணயக் கைதியின் தலையைத் துண்டித்து படுகொலை செய்துள்ளனர். மேலும், 18 சிரியா நாட்டு ராணுவ அதிகாரிகளின் தலைகளைத் துண்டித்துக் கொலை செய்த பயங்கர காணொலியையும் வெளியிட்டுள்ளனர்.

ஈராக்மற்றும்சிரியாவில்ஐ.எஸ். தீவிரவாதிகள் அரசுக்கு எதிராகப் போரிட்டு பல் வேறு பகுதிகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். அங்கு ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா தலைமையில் சர்வதேச நாடுகள் படை களமிறங்கி உள்ளது. ஈராக், சிரியாவில் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமெரிக்காவைச் சேர்ந்த பணயக் கைதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்து, அதன் காணொலியை வெளியிட்டு வருகின்றனர். இதற்கு முன்னர் அமெரிக்க பத்திரிகையாளரொருவரையும், பிரிட்டனைச் சேர்ந்த தொண்டு நிறுவன ஊழியரையும் அவர்கள் கொன்றனர்.

இந்த நிலையில், மேலும் ஒரு அமெரிக்கப் பணயக் கைதியை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரமாக கொன்றுள்ளனர். சிரியப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி மற்றும் மருத்துவ் உதவி செய்வதற்காக அமெரிக்க தொண்டு நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ஊழியர் பீட்டர் காசிக் லெபனானின் பெய்ரூட் நகரில் தங்கியிருந்தார். அவரைக் கடந்தாண்டு கடத்திய தீவிரவாதிகள், சிறையில் அடைத்து சித்திரவதை செய்து வந்தனர்.

இதற்கிடையே, 26 வயதான அப்துல் ரஹ்மான் காசிக்கின் தலையைத் துண்டித்து அதன் காணொலியைத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் வெளியிட்டனர். அதேபோல, மற்றொரு காணொலியில் சிரிய ராணுவ அதிகாரிகள் என்று கூறப்பட்ட 18 பேரை அடுத்தடுத்து தலைகளை வெட்டி கொல்லும் காட்சி படமாக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து ஐ.எஸ். தீவிரவாதிகள் விடுத்துள்ள அறிக்கையில்,

"சிரிய ராணுவத்தினருக்கு இன்று நேர்ந்த இந்தக் கதி நாளை உங்கள் (அமெரிக்கா) ராணுவ அதிகாரிகளுக்கு ஏற்படும். உங்கள் மக்களை உங்கள் தெருவிலேயே கழுத்தறுத்துக் கொலை செய்வோம்" என்று அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### ஒபாமா கண்டனம்

அமெரிக்க உதவிப் பணியாளர் அப்துல் ரஹ்மான் காசிக், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டமைக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

காசிக் கொலை செய்யப்பட்டமை முற்றாக பேயின் செயற்பாடு என்றும் ஒபாமா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

காசிக் உடையது என்று தெரிவிக்கப்படும் தூண்டிக்கப்பட்ட தலை ஒன்றுடன் ஆயுததாரி ஒருவர் தோன்றும் காட்சி நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. துண்டிக்கப்பட்ட தலை காசிக் உடையது என்பதை அமெரிக்க வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது. (வ)

# அமெரிக்காவை கண்டுபிடித்தது கொலம்பஸ் இல்லையாம்

## துருக்கி ஜனாதிபதி கூறுகிறார்

அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்ததாக வரலாறுகள் சொன்னாலும், அவருக்கு முன்னதாக முஸ்லிம்கள் தான் முதன்முதலாக அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாக துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் துருக்கி ஜனாதிபதி ரீசெப் தயிப் எர்டோகன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அமெரிக்காவை கண்டுபிடித்தது கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்று கூறுகின்றனர். உண்மை அதுவல்ல. அமெரிக்காவை 1178 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் கண்டுபிடித்துள்ளனர். அதாவது கொலம்பஸ் அமெரிக்காவில் காலடி பதிப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பதாக 12 ஆம் நூற்றாண்டிலேயே முஸ்லிம்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்கா குறித்து கொலம்பஸ் வெளியிட்டுள்ள செய்தியில், கியூபன் கடற்கரையில் உள்ள மலையில் ஒரு மசூதி இருந்ததாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# 86 தீவிரவாத அமைப்புகளுக்கு ஐக்கிய அரபு எமிரேட் தடை

டுபாய், நவ.18

பாகிஸ்தானின் 5 குழுக்கள் உட்பட 86 தீவிரவாத இயக்கங்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட் தடை விதித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டின் ஜனாதிபதி ஷேக் காலிபா பின் சயீத் அண்மையில் தீவிரவாத தடுப்பு சட்டத்தை நடைமுறைப் படுத்தும்படி உத்தரவிட்டார். அதையடுத்து, ஐக்கிய அரபு எமிரேட்டின் அமைச்சரவை சனிக்கிழமை கூடி 86 தீவிரவாத இயக்கங்களை தங்களது நாட்டில் தடை செய்வதாக அறிவித்தது.

இதில், அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதல் நடத்திய அல்குவைதா, சிரியாவில் அந்நாட்டு ஜனாதிபதி பசார் அல் ஆசாத்துக்கு எதிராக சண்டையில் ஈடுபட்டுள்ள நுஸ்ரா முன்னணி, ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் ஆகியவையும் அடங்கும். (வ)

# இரசாயன தொழிற்சாலையில் விஷவாயு கசிந்து 4 பேர் சாவு

வொஷிங்டன், நவ.18

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள இரசாயனத் தொழிற்சாலையொன்றில் விஷவாயு கசிந்து 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஹவுஸ்டன் நகரையொட்டிய லா-போர்ட்டில் 600 ஏக்கர் பரப்பளவில் டுபான்ட் என்ற இரசாயனத் தொழிற்சாலை செயற்பட்டு வருகிறது. அங்கு 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஓட்டோ பாதுகாப்பு கண்ணாடிக்கான பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் அங்கு தயாரிக்கப்பட்டு வருகின்றன. (வ)

# சுவிஸில் கடும் மழை நிலச்சரிவு: 4 பேர் மாயம்



சுவிஸின் வடக்கு டிக்கினோ பகுதியில் கடும் மழையால் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மேலும் லுகனோ நதியின் அணை உடைந்து விட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கடும்மழை காரணமாக சனிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில், மலையிலிருந்து கற்கள் உருண்டு விழுந்ததில் 3 மாடிக்கட்டடமொன்று சேதமடைந்துள்ளது. இதில் சிக்கி, 4 பேர் காணாமற்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போனவர்கள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் 3 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலச்சரிவு காரணமாகப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. சுவிஸில் இதுவரை 50 மி.மி முதல் 70 மி.மீ. வரை மழை பெய்துள்ளது. மழை தொடர்ந்தும் பெய்து வருகிறது. (வ)

# மாலியில் எபோலாவால் மூவர் சாவு

மாலி, நவ.18

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், மாலி யில் நேற்று முன்தினம் எபோலா வைரஸ் தாக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதையடுத்து எபோலா நோய் வைரஸ் பரவாமல் தடுக்க அந்நாட்டு அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் 250 பேர் எபோலா வைரஸ் தாக்கத்துக்கு ஆளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்களைத் தேடி வருவதாக மாலி அரசு தெரிவித்துள்ளது. (வ)

# எம்.எச்.17 மலேசிய விமானம் எரியும் புதிய காணொலி வெளியீடு

ஹிராபோவ், நவ.18

ஏவுகணை மூலம் 4 மாதங்களுக்கு முன்னர் தாக்கித் தகர்க்கப்பட்ட மலேசியாவின் எம்.எச்.17 பயணிகள் விமானத்தின் புதிய காணொலி ஒன்று தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் விமானத்தின் பாகங்கள் மற்றும் மனித உயிர்கள் எரிவது தெளிவாகப் பதிவாகி உள்ளது.



முதலில் அந்தப்பகுதி மக்கள் உக்ரைன் ராணுவ விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வெடித்துச் சிதறியதாகக் கருதியுள்ளனர். பின்னர் அதில் அலாரம் ஒலிக்கவும் அதனைக் கண்டு ஒருவர் காணொலி எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூர் நோக்கி கடந்த ஜூலை மாதம் 298 பயணிகளுடன் மலேசியன் ஏர்லைன்ஸ் எம்எச்17 விமானம் புறப்பட்டது. ரஷ்யா-உக்ரைன் எல்லையில் இந்த விமானம் வெடித்துச் சிதறியது. இதில், பயணம் செய்த அனைவரும் உயிரிழந்தனர். பெரும்பாலானோர் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ரஷ்ய தீவிரவாதிகள்தான் ஏவுகணையைப் பயன்படுத்தி விமானத்தை தகர்த்ததாக உக்ரைன் அரசு குற்றம் சாட்டியது. இதில், விமானம் தரையில் விழும்வரை அதில் தொழில்நுட்பக் கோளாறோ, அவசர நிலைமையோ ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ரஷ்யாவின் உளவுப் படை அதிகாரிகளே காரணம் என்றும், அவர்கள் கொடுத்த திட்டத்தின்படிதான் விமானம் வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் உக்ரைன் பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார். (வ)

# நியூசிலாந்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

நியூசிலாந்தின் கிழக்கு கடற்கரையில் கிஸ்போர்ன் பகுதியில் நேற்று திங்கட்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 6.7 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கம் கிழக்கு மற்றும் வட தீவு நகரின் சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கு அடியில் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த தாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும் இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து உடனடி தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.



# குடை உருவம் இல்லாத குடையா? சீனாவின் கண்டுபிடிப்பு இது




சீனாவிலுள்ள நான்ஜீன்பங் பல்கலைக்கழகத்தில் ஏரோ நாட்டிக்ஸ் மற்றும் ஆஸ்ட்ரோநாட்டிக்ஸ் பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற குழுவினர் புரட்சிகரமான ஒரு குடையை உருவாக்கியுள்ளார்கள். குடையின் முக்கியபாகம் என்ன? அரை வட்டத்தில் ஒரு விரிப்பு போன்ற வடிவம் தானே? அவர்கள் கண்டுபிடித்திருக்கும் குடைக்கு விரிப்பே கிடையாது.

அட,குடையே இல்லாத குடையா? எப்படி? இது காற்றுக் குடை. அதி வேகமாக வீசும் காற்றின் மூலம் மழைத்துளிகள் எமது உடல் மீது விழாமல் சிதறியடிக்க வைக்கும் நவீனத் தொழில்நுட்பம் கொண்ட குடை இது. மைக் போன்ற காற்றுக் குடை. பிளாஸ்ரிக் மைக் போல் காட்சியளிக்கிறது இந்தக் காற்றுக் குடை. இதன் உட்புறத்தில் ஒரு மோட்டர் மற்றும் லித்தியம் பற்றரி பொருத்தப்பட்டிருக்கிறது.

வெளிப்புறத்தில் ஒரு பட்டன் இணைக்கப்பட்டுள்ளது. பட்டனை அழுத்தியதும், மோட்டார் சுற்றுப்புறக் காற்றை உள்ளிழுத்து. பின்பு அதி வேகமாக அதே காற்றை உந்தித் தள்ளும். அப்போது வெளியே வரும் காற்று சுமார் ஒரு மீற்றர் நீளம்வரை மழை நீரைச் சிதறியடிக்கும்.

இதை நீங்கள் கையில் பிடித்துக்கொண்டு சென்றால் ஏதோ மாயாஜால வித்தை புரிவதுபோல பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஒரு சமயத்தில் இருவர் இந்தக் குடையைப் பிடித்தபடி நனையாமல் பயணிக்கலாம். எல்லா இடங்களிலும் இருப்பது காற்று. காற்றின் வேகம் கூடக் கூட அதிக ஆற்றல் உருவாகும். பொருள்களின் பாதையைக் கூடக் காற்றால் மாற்ற முடியும். நாங்கள் காற்று வீசும் விதத்தைப் பயன்படுத்திக்கொண்டோம்; அவ்வளவுதான் என்கின்றனர் இந்தக் காற்றுக் குடையை உருவாக்கிய இளம் பொறியியலாளர்கள். ஆனால், இந்தக் காற்றுக் குடையில் ஒரு சிக்கல் இருக்கிறதாம். காற்றுக் குடையில் 30 நிமிடங்கள்தான் பற்றரியின் சார்ஜ் நிற்கும்.

இளைஞர் படையினர் காற்றுக் குடையின் தோற்ற அழகு, பயன்பாட்டுத் திறன், பற்றரி வாழ் நாள் உள்ளிட்டவற்றை மேம்படுத்த தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்போது ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் இவர்களுடைய ஆராய்ச்சி 2015 ஆம் ஆண்டில் முடியுமாம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | | | 1 |
| 2 | | 7 | | | 6 | 3 | 4 | |
| | | 1 | | | | | 9 | 8 |
| 1 | 9 | 4 | | 6 | 2 | 5 | | |
| 6 | | | | | | | | 9 |
| | | 2 | 7 | 9 | | 1 | 6 | 4 |
| 7 | 4 | | | | | 9 | | |
| | 1 | 3 | 5 | | | 4 | | 6 |
| 5 | | | 6 | 7 | | | | |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி'9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 9 | 8 | 3 | 6 | 1 | 7 |
| 7 | 9 | 8 | 6 | 4 | 1 | 3 | 2 | 5 |
| 6 | 1 | 3 | 5 | 2 | 7 | 8 | 9 | 4 |
| 5 | 6 | 9 | 1 | 3 | 4 | 2 | 7 | 8 |
| 8 | 4 | 1 | 2 | 7 | 5 | 9 | 3 | 6 |
| 3 | 7 | 2 | 8 | 9 | 6 | 5 | 4 | 1 |
| 1 | 2 | 7 | 3 | 5 | 8 | 4 | 6 | 9 |
| 4 | 3 | 5 | 7 | 6 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 8 | 6 | 4 | 1 | 2 | 7 | 5 | 3 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வாழ்க்கையில் இலட்சியம் அவசியமானது

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஏதோவொரு குறிக்கோள் இருக்கிறது. அது அவனுடைய கணக்கில்லாத கடந்த காலக் கர்மங்களால் தோன்றுகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறந்த பாரம்பரியத்துடன் பிறந்திருக்கிறீர்கள். உங்கள் பெருமைக்குரிய நாட்டின் முடிவில்லாத முழுமையான கடந்த கால வாழ்க்கையாக அது இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் எந்த இலட்சியத்தோடுபிறக்கிறது.பிராமணன் சமயமாகிய புதையலைக் காப்பதற்கே பிறக்கிறான். அதேபோல் ஒவ்வொரு குழந்தைக்கும் சமயமாகிய புதையலை காக்க வேண்டும் என்ற லட்சியம் இருக்க வேண்டும். வாழ்க்கையில் உள்ள மற்றப் பிரச்சினைகள் எல்லாம் அந்த ஓர் இலட்சியத்துக்குத் துணை செய்வதாகவே அமைய வேண்டும். சங்கீத நிகழ்ச்சியில் வாய்ப்பாட்டுக்கு துணையாக மற்ற இசைக் கருவிகளின் ஓசைபோல் அவை அமைய வேண்டும். எவனுக்கு தேசியக் கொள்கை உள்ளதோ அவன் உயர்நிலையை அடைவான். எவனுக்கு தேசியக் கொள்கை இல்லையோ அவன் அழிந்து போவான்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பயன்தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.



**இடபம்**: எச்சரிக்கையர்க இருப்பதன் மூலம் சிக்கல்களைத் தடுக்கலாம். வீண் விவகாரங்களில் தலை யிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தாராளமாக பணம் செலவு செய்து. தேவையானவற்றை வாங்குவீர்கள்.



**மிதுனம்**: மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் ஏற்படும்.



**கடகம்**: திடீர்க் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பயன் கிடைக்கும்.



**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைச்சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் நீங்கும். குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.



**கன்னி**: உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. முயற்சிகள் தாமதப்படும். விளையாட்டுக்களில் கவனம் தேவை.



**துலாம்**: துன்பங்கள் நீங்கி, வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். எதிர்பாராத செலவும் ஏற்படும். உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.



**விருச்சிகம்**: மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உங்களுக்குப் பின்னால் உங்களைப் பற்றி புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை.



**தனுசு**: எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். உங்களுக்கு வரும் முன்கோபத்தைத் தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மகரம்**: எதிர்ப்புக்கள் நீங்கும். தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும், வருமானம் குறையாத நிலை இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.



**கும்பம்**: சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும். பெண்களுக்கு, மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மீனம்**: கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புக்கள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்யத் தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும்.

### நாளை

**கார்த்திகை-03 புதன்கிழமை | 19.11.2014**

திதி: துவாதசி மா.05.34 வரை
நட்சத்திரம்: அத்தம்
மு.ப.11.06 வரை

சுபநேரம்:04.39-06.09 வரை
இராகுகாலம்:12.09-01.39 வரை

18 NOV 2014

# டொனால்ட் கிண்ணம் சென்றலைட்ஸ் வசம்




யாழ்ப்பாணம், நவ.18

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய டொனால்ட் கணேஸ் குமார் கிண்ணத்திற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்ககழக அணி ஓர் இலக்கினால் வெற்றி பெற்று சம்பியன் ஆனாது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. 37.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றது. வல்லவக்குமாரன் 29 ஓட்டங்களையும் ராகுலன் 24 ஓட்டங்களையும்பெற்றனர். டார்வின் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்றலைட்ஸ் 41.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. டார்வின் ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களையும் கோகுலன் 27 ஓட்டங்களையும்பெற்றனர். சிலோசன் 4 இலக்குகளையும், சாம்பவன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். சிறந்த பந்து வீச்சாளர், தொடர் ஆட்ட நாயகன், சகலதுறை ஆட்டக்காரர், ஆட்ட நாயகன் விருதுகளை சென்றலைட்ஸின் டார்வின் பெற்றார். (உ-23)

## அடுத்த ஆண்டு முதல் கடும் நடைமுறைகள்

*உதைபந்தாட்ட சம்மேளத் தலைவர் அறிவிப்பு*

வலி.வடக்கு, நவ.18

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ வட மாகாணத்திலுள்ள உதைபந்தாட்ட லீக்குகளின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் கழகங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

2015ஆம்ஆண்டு . நடைமுறைகள், செயற்பாடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. எதிர்காலத்தில் கழகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாக அங்கு றொட்றிக்கோ அறிவித்தார்.

அனைத்து கழகங்களும் இலங்கை உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். லீக்குகளில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் வீரர்கள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அடையாள அட்டையைக் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும் எனவும் அடையாள அட்டைகள் இன்றி இருப்பவர்கள் யாரும் லீக் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி லீக்குகளின் பிரதிநிதிகள், கழகங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (உ-86)

## நெஸ்லே ஆட்டங்கள் இன்றும் நாளையும்

கரணவாய், நவ. 18

நெஸ்லே லங்கா பிறைவேட் லிமிட்டற் நிறுவனம் நடத்தும் மைலோ வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலுள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்றும் நாளையும் காலை 7 மணி முதல் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு;

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம்.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம்.

கம்பர்மலை யாங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

உடுத்துறை உதய சூரியன் விளையாட்டுக்கழகம் எதிர் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம்.

வல்லை விளையாட்டுக்கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளை யாட்டுக்கழகம்.

சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம்.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்.

வரணி இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் பலாலி விண்மீன்விளையாட்டுக்கழகம்.(சு-108)

## ஒவ்வொரு மாணவனும் விளையாடுவது அடுத்த வருடத்திலிருந்து கட்டாயமாகும்

*அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு*

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு விளையாட்டில் பங்குபற்றுவது இனிவரும் காலங்களில் கட்டாயம் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். அடுத்த ஆண்டு முதல் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் விளையாட்டுக்களுக்கென நியமிக்கப்பட்ட இணைப்பாளர்களுக்கான இரு நாள் செயலமர்வில் உரையாற்றும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கொழும்பு டொறிங்ரன் பிளேசில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைக் கல்வியைத் தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் ஏதாவது ஒரு விளையாட்டுத் தெரிந்திருக்க வேண்டும். வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளுடன் மைதானத்தில் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கும் விசேட புள்ளிகள் வழங்கப்படும். மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

வடக்கு மாகாணம் தற்போது விளையாட்டுத்துறையில் பெரு வளர்ச்சி பெற்று வருகின்றது. மேல் மா[illegible]ணத்தில் விளையாட்டுத்து[illegible]றயின் வளர்ச்சிக்கு பல்வே[illegible]று வசதி வாய்ப்புகள் செய்து [illegible]டுக்கப்பட்டுள்ளன. அத[illegible]தான் அவர்களால் தொட[illegible] முதலிடத்தைப் பெற முடி[illegible]றது. வடமாகாணத்தில் வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்த போதும் படிப்படியாக முன்னேறி வருகின்றது.

வடமாகாணத்தில் போதிய மைதானங்கள் இல்லை, பயிற்சியாளர்களும் போதியளவில் இல்லை. இந்தக் குறைபாடுகளைத் தீர்க்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பயிற்சியாளர் களைத் தரப்படுத்துவதுடன் அவர்களுக்கு மேலதிகப் பயிற்சியையும் வழங்கவுள்ளோம். வடக்கில் உள்ள திறமையான வீரர்கள், வீராங்கனைகளை இனங்கண்டு சரியான பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கம். வருங்காலத்தில் வடக்கு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று நாட்டுக்கு பெருமை சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வடக்கில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு வேண்டிய நிதியை வழங்க எனது அமைச்சுத் தயாராக இருக்கின்றது. உங்களுடைய பிரதேசங்களில் செயற்படுத்த வேண்டிய திட்டங்களைத் தயாரித்து வழங்கினால் அவற்றைச் செயற்படுத்த நாம் தயாராகவே உள்ளோம் - என்றார்.(உ-108)

## சென். அன்ரனிஸ், பிறைற் ஸ்ரார் வெற்றி

யாழப்பாணம், நவ. 18

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆளுநர் கிண்ணப் போட்டி ஆட்டங்கள் நேற்று திங்கள்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

சென். அன்ரனீஸ் எதிர் அராலி திருமகள் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. பிறைற் ஸ்ரார் எதிர் ஆதவன் ஆட்டத்திற்கு ஆதவன் வரத் தவறியமையால் பிறைற் ஸ்ரார் வெற்றிபெற்றது.(உ-23)

## தொடர்ச்சி

### ஐ.தே.கட்சியிலிருந்து

எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜெயசூரியா ஆகியோருடன் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் நேற்றுப் பேச்சு நடத்தினார். அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

பொது எதிரணி மற்றும் பொது வேட்பாளர் தொடர்பான முன்னெடுப்புகள் இறுதி கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. இந்த வேளையில் ஏற்பட்டுள்ள சிற்சில முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறேன். பொது வேட்பாளர் தொடர்பான முடிவை ஐக்கிய தேசிய கட்சி அறிவிக்க வேண்டும்.

அதேவேளை பொது வேட்பாளர் மற்றும் பொது எதிரணி என்பவைகளை அடையாளப்படுத்த பொதுச் சின்னத்தில் பொது வேட்பாளர் களமிறங்க வேண்டும் என்ற எமது கட்சி நிலைப்பாட்டை நான் இருவருக்கும் தெரியபடுத்தினேன். தனது கட்சியும், எதிர்கட்சிகளும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் விரும்பும் பட்சத்தில், ஐ.தே.க உறுப்புரிமையிலிருந்து விலகி எந்த ஒரு கட்சி அங்கத்துவமும் அற்ற அனைவரினதும் பொது வேட்பாளராக போட்டியிடத் தயார் என்று கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொது வேட்பாளர் தொடர்பான பிரதான எதிரணிக் கட்சிகளின் நிலைப்பாடுகளை தாம் இப்போது கலந்து பேசி அறிந்து கொண்டு வருவதாகத் தெரிவித்தார். இந்த அரசியல் கட்சிகளது பொதுவான பெருவாரி நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே பொது வேட்பாளர் தொடர்பாக நாம் முடிவு எடுப்போம். அந்த முடிவு 19 ஆம் திகதிக்குப் பிறகு ஏனைய எதிரணி கட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டு ஆதரவு கோரப்படும். என்று அவர் குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ற-5)

## ஆளுநர் கிண்ண காலிறுதியில் வெற்றி பெற்ற தீவக அணிகள்

யாழ்ப்பாணம், நவ 18

தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுத் திங்கள்கிழமை இடம் பெற்ற காலிறுதியாட்டங்களில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ், வேலனை துறையூர் ஐயனார், தம்பாட்டி காந்திஜீ ,நாரந்தனை அண்ணா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழக அணிக்கும் ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும்வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வேலனை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணிக்கும் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெறவிருந்த ஆட்டத்துக்கு நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழக அணி வருகை தராமையால் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.(த-23)

## வலுவான நிலையில் நியூசிலாந்து

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது டுபாயில் இடம் பெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி நியூசிலாந்தின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய லாதம் மற்றும் மக்கலம் நிதான ஆட்டத்தின் மூலம் அணிக்குச் சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர். அணியின் ஓட்டம் 77 ஆக இருந்தபோது நியூசிலாந்தின் முதல் விக்கட்டாக மக்கலம் 43 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வில்லியம்சன் 32 ஓட்டங்களுடனும் ரெய்லர் 23 ஓட்டங்களுடனும் வெளியேற நேற்றய ஆட்ட நேர நிறைவில் நியூசிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 243 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சதத்தைக் கடந்து இறுதிவரை ஆட்டமிழக்காத லாதம் 137 ஓட்டங்களுடனும் அண்டர்சன் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் அடில் பாபர் சாஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (த-ரி)

## அண்ணா - காந்திஜீ இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 18

தீவக உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ண போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணி, நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணி ஆகியன வெற்றி பெற்றன.

நேற்று மாலை இடம்பெற்ற வேலனை துறையூர் ஜயனார் விளையாட்டுக்கழக அணிக்கும் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டி வென்றது. இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. சமநிலை தகர்ப்பு உதைகளில்தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அண்ணா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)



## கழன்றது காலணி தப்பினார் ஸ்டெய்ன்

பேர்த் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் விசித்திரமான முறையில் ஹிட் விக்கெட் ஆவதிலிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினார். ஆஸ்திரேலியா எடுத்த 300 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடிய தென்னாபிரிக்கா அணி 7 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்திருந்த போது டேல் ஸ்டெய்ன் களத்திற்கு வந்து விளையாடினார்.

அவர் எதிர்கொண்ட முதல் பந்திலேயே கிரிக்கெட் ஆட்டத்தில் இதுவரை நடந்திராத விசித்திர முறையில் ஹிட் விக்கெட் ஆகத் தெரிந்தார்.

அதாவது அவர் அணிந்திருந்த காலணியே அவருக்கு எதிரியாகியிருக்கும். முதல் பந்தை முன்னால் வந்து தடுத்தாடிய டேல் ஸ்டெய்ன், ஒரு ஓட்டங்கள் எடுக்கலாமா என்பதற்காக ஓட முயற்சி செய்தார். ஆனால் அவரது வலது கால் காலணி கழன்றதோடு அவரது பின்னாங்கால் உந்துதலினால், அது ஸ்டம்பின் மேல் போய் விழுந்திருக்கும்.

காலணி ஸ்டம்ப் வரை செல்லாமல் முன்னால் நின்றது. இதைத் தொடர்ந்து அருகில் இருந்த டேவிட் வோர்னர் சில வார்த்தைகளை ஸ்டெய்னுடன் பகிர்ந்து கொண்டார்.

காலணி ஸ்பான்சர்கள் மூலம் ஸ்டெய்னுக்கு கூடுதல் டொலர்கள் கிடைத்திருக்கும் என்ற தொனியில் வோர்னர், ஸ்டெய்னிடம் கூறியதாக ஆஸ்திரேலிய விளையாட்டுச் செய்தி ஊடகம் இதை பதிவு செய்துள்ளது.

டேல் ஸ்டெய்னின் காலணி ஸ்டம்பில் பட்டு ஆட்டமிழந்திருந்தால் கிரிக்கெட் ஆட்டத்தின் மிக விசித்திரமான விக்கெட்டாக அது அமைந்திருக்கும்.

சமீபத்தில் நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பாக்கிஸ்தான் துடுப்பாட்டக்காரர் அகமத் ஷேஜாத் (176 ஓட்டங்கள்), கோரி அண்டர்சன் வீசிய 'பவுன்சரை' ஆட முயலும்போது அது ஹெல்மெட்டினுள் புகுந்து அவரைப் பதம் பார்த்தது. அதனால் அடிபட்டவுடன் அவர் மட்டையைத் தவறவிட அது ஸ்டம்பைத் தாக்கியது. ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மத்தியூஸ் புதிய சாதனை



இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஒருநாள் கிரிக்கெட்டில் புதிய சாதனையை படைத்துள்ளார்.

இந்தாண்டில் ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையை மத்தியூஸ் பெற்றுள்ளார். 25 போட்டிகளில் விளையாடி ஒரு சதம், 8 அரைச் சதத்துடன் 1.062 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் 139 ஓட்டங்களை விளாசிய மத்தியூஸ், இந்திய மண்ணில் அதிக ஓட்டங்கள் எடுத்த வெளிநாட்டு அணித் தலைவர் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளார். முதல் இரு இடங்களில் இங்கிலாந்தின் ஸ்ரொஸ் 158 ஓட்டங்கள் (பெங்களூரில் இந்தியாவுக்கு எதிராக 2011ஆம் ஆண்டு), ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி-156 ஓட்டங்கள் (நாக்பூரில் இந்தியாவுக்கு எதிராக 2013) ஆகியோர் உள்ளனர். இந்தப் போட்டியில் 10 சிக்சர்கள் விளாசிய மத்தியூஸ், ஜெயசூர்யாவுக்கு (1996ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக 11 சிக்சருடன் 134 ஓட்டங்கள்) அடுத்து ஒரு இன்னிங்ஸில் அதிக சிக்சர் அடித்த இலங்கை வீரர் என்ற சிறப்பை பெற்றுள்ளார். (த)

## வாய்ப்பு கிடைத்தால் வெளுத்து வாங்குவேன்



உலகக்கிண்ண இந்திய அணியில் இடம் கிடைத்தால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என்று அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ் கூறியுள்ளார்.

இந்திய அணியின் மூத்த வீரர்களான ஷேவாக், கம்பீர், யுவராஜ் ஆகியோர் மோசமான துடுப்பாட்டத்தால் அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டனர். இவர்கள் மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிப்பது கேள்விக்குறியாகிவிட்டது. இந்நிலையில் இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிக்க வாய்ப்பு இருப்பதாக யுவராஜ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், அடுத்த 2 மாதம் எனக்கு கடினமான காலமாக இருக்கும். உலகக்கிண்ண அணியில் இடம்பிடிப்பது பற்றி தற்போது என்னால் ஏதும் கூறமுடியவில்லை. ஆனால் வாய்ப்பு கிடைத்தால் சிறப்பாகச் செயற்படுவேன். உள்ளூர் போட்டிகளில் தற்போது விளையாடி வருகிறேன். இது எனக்கு மீண்டும் அணியில் இடம்பெற வழிவகுக்கும். உலகக்கிண்ண அணியில் இடம்பெறவே மாட்டேன் என்று நான் கூற மாட்டேன். கண்டிப்பாக உலகக்கிண்ண அணியில் இடம்பெறுவேன் ஏன்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (த)

## ரோஹித்தின் சாதனை முறியடிப்பது கஷ்டம்



ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை எடுத்த ரோஹித் சர்மாவின் சாதனையை முறியடிப்பது கடினம் என முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார். ரோஹித் சர்மா ஒருநாள் போட்டியில் 264 ஓட்டங்கள் குவித்தது மிகவும் அபாரமான ஒன்றாகும். கற்பனையில் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு உண்மையிலேயே இது நம்ப முடியாத ஒன்றாகும். ரோஹித் சர்மாவின் 264 ஓட்டங்கள் சாதனையை முறியடிப்பது கடினமானது. எந்த நேரத்திலும் இந்த சாதனையை முறியடிக்க இயலாது என்று கங்குலி கூறியுள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் ரோஹித் சர்மா 264 ஓட்டங்கள் குவித்து புதிய வரலாற்றுச் சாதனை படைத்தார். ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் மற்றும் இருமுறை இரட்டை சதம் அடித்தவர் என்ற சாதனையை ரோஹித் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வென்றது கேரளா

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து தொடரின் லீக் ஆட்டத்தில் டில்லியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது கேரளா. இரு அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதல் பாதி முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. ஆனால், இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. டில்லி அணியின் முன்னணி வீரர் டெல் பியரோ தலையால் முட்டிய பந்தை, அந்த அணி வீரரே தடுத்ததால், கோல் வாய்ப்பு நழுவியது. கேரளா அணியின் ஹியூம் தலையால் முட்டிய பந்து கோல் கம்பத்தைத் தாண்டிச் சென்றது. இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில், கேரளா வீரர் ஹியும் கொடுத்த பாஸ் நொடியும் தாமதிக்காது கோல் அடித்தார். இதற்குக் கடைசி வரை டில்லி அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில் கேரளா அணி வெற்றி பெற்றது. புள்ளிகள் பட்டியலில் கேரளா 12 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், டில்லி கடைசி இடத்திலும் உள்ளன. (த)



## தொடர்ச்சிகள்

### மின்

லாகம், மல்லாகம் நீதிமன் றப் பகுதி போன்ற இடங்களில் உள்ள கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளது. அதனால் அந்த நீரைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் பாதுகாப்பற்ற முறையில் ஊற்றப்பட்ட கழிவு ஒயிலே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் சுன்னாகத்தை அண்மித்து வசிக்கும் 11 பேரும் சுன்னாகம் மின்சார சபையினருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த இரண்டு வழக்குகளும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் வழக்கு நேற்று நீதிமன்றில் சுமார் ஒரு மணி நேரமாக விவாதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் மின்சார சபையினர் சார்பாக சட்டத் தரணி வி.திருக்குமரனும் சுற்றுச் சூழல் அதிகார சபையினர் சார்பாக மோகன் மற்றும் தென்பகுதி சட் டத்தரணிகளும் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனம் சார்பாக சட்டத் தரணி திருமதி சிவபாதமும் முன்னிலையாகியிருந்தனர். அதன்போது மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளை தாம் நிறைவேற்றுவதாக மின்சார சபையினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். அவை என்ன கோரிக்கைகள் என்று கூறப்பட வில்லை.

அத்துடன் இதுவரை காலமும் நிலத்தின்கீழ் சிமெந்திடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்த கழிவு ஒயில் தாங்கியை நிலத்தின்மேல் இரும்புத் தாங்கி அமைத்து அதில் கழிவு ஒயில் சேமித்து வைக்க நடவடிக்கை எடுப்பதாக நீதிமன்றில் தெரிவித்தனர்.

தவிர சுன்னாகத்தில் மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணெய் எரிவு ஊடாகச் செயற்படும் மின் பிறப் பாக்கிகளை இயக்குவதனை உடனடியா கத் தடை செய்யுமாறு கோரி 11 பேர் தாக்கல் செய்த வழக்கில், அவற்றை ஏன் மூடக் கூடாது என்பதற்குக் காரணம் கூறுமாறு மின்சார சபையினருக்கு நீதிமன்று பணித்துள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சட்டத்தரணிகளான ஜெ.ஜெயரூபன், பா.பார்த்தீபன், கு.குருபரன், வி.மணி வண்ணன், சோ.வேராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன் னிலையாகியிருந்தனர். (ற-4)

### வடக்கு

கப்பட்டு வருகின்றது. ஆனால். வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்த நிதி வழங்கப்படவில்லை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் உள்ள மன்றங்களுக்கு இந்த நிதி கிடைக்கவே இல்லை என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே வட பகுதியில் கடந்த ஒகஸ்ட் மாதத்திலிருந்து இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான மன்றங்களுக்கும் இந்த நிதி இன்னமும் வழங்கப்படவே யில்லை.

உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துவதற்காக மாதாந் தம் தலா ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படும் என்று 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி கடந்த ஜனவரி மாதம் முதல் வடக்கு தவிர்ந்த மாகாணங்களுக்கு நிதி ஒழுங்காக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இந்த நிதி வழங்கப்படுகிறது. அந்த மன்றங்களுக்கும்கூட ஜனவரி முதல் ஜுலை வரையான நிதி வழங்கப்படவில்லை. இதேபோன்றே வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து நிதி வழங்கப்படுகிறது. ஆனால் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இதுவரையில் எந்த நிதியும் வழங்கப்பட வில்லை.

இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையே வடக்குக்கு வழங்காமல் புறக்கணித்துள்ள கொழும்பு அரசு, அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீட்டு நிதி அளவை மாதம் ஒன்றுக்கு இரண்டு மில்லியன்களாக அதிகரித்துள்ளது. (உ-5)

### ஐ.நா.

பாளரான சபினே நண்டியை சந்தித்தார் என்றும் தெரிவித்துள்ளது.

குறித்த விசாரணைக்கான சாட்சியங்களைச் சமர்ப்பிக்கும் இறுதி திகதி ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி என்று முன்னர் தீர்மானிக்கப்பட்ட நிலையில், ஏற்றுக்கொள்ள முடியாத வகையிலும், அதிகாரபூர்வமற்ற வகையிலும் அது மாற்றப்பட்டது. மீண்டும் திருத்தப்பட்டது ஆகியன குறித்து அமைச்சர் ஐ.நா. இணைப்பாளரிடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார் என்றும் இலங்கை அரசு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது. (ற-5)

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் தேவநிரோச்



பூம்புகாரைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை கணக்கர் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் தேவநிரோச் 16.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டாரி துரைசிங்கம் மற்றும் மேரி கொறிற்ரா தம்பதியரின் செல்வப் புதல்வனும், ரெனோச் (பிரான்ஸ்), ஜறின்ருபின்சி, அலெக்சாண்டர், பிரதாப், மைக்கலோன், டினோ ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அடக்கம் இன்று (18.11.2014) மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தாவடி சவக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (54376) (10.6)

கணக்கர் வளவு, கந்தரோடை, சுன்னாகம். — துரைசிங்கம் மேரிகொறிற்ரா மற்றும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி குவலயம் செல்லத்துரை



கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குவலயம் செல்லத்துரை நேற்று (17.11.2014) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரபத்திரர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் புஸ்பரத்தி னம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற திரு நாவுக்கரசு, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், ஞானசுந்தரி, மாணிக்கவாசகர் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சயந்தினி, மற்றும் திருமதி ஞானச்சந்திரன், சுகந்தினி (யாழ். மேல் நீதிமன்றம், கமநல சேவை நிலையம், தொல்புரம்), சியாமினி (ஆசிரியர், மு/பாலிநகர் மகா வித்தியாலயம்-வவுனிக்குளம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரதுமிதன், கதிர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து-மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (54375)(10.6) — குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் குணரெத்தினம் கனகம்மா

தோற்றம் 20.04.1944

மறைவு 28.11.2013



திதி: ஏகாதசி (18.11.2014)

அம்மா! என அழைத்தவுடன்
அன்புடனே அரவணைத்து
ஆற்றி வைத்த தெய்வமம்மா! நீங்கள்
இன்று எமை ஆற்றிவைக்க யாருமின்றி
ஈன்றெடுத்த உங்களை நினைத்து
உள்ளம் உருகி அழுகின்றோம் அம்மா!
ஆனாலும் மாண்டார் மீண்டும்
வருவாரோ?
மீண்டும் ஒரு ஜென்மம் இருந்தால்
நீங்களே எம் தாயாக வேண்டுமம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்
இல.12, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.
(54369)(5.6)



## FASHION FANCY & BEAUTY CORNER

(Center of modern woman)



எமது நிலையத்தினால் நடத்தப்படும் மொடலிங்குக்கு ஆர்வம் உடைய இருபாலாரும் (ஆண்/பெண்) எமது நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தேர்வுகள் 23.11.2014 அன்று நடைபெறவுள்ளது.**

நேரம் : மு.ப. 10.30 தொடக்கம் 2.00 வரை

வயது : 18 தொடக்கம் 25 வரை உள்ளவர்கள்

முற்பதிவுகளை மேற்கொள்ளவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகொள்ளும் நேரம்: 8 a.m - 6 pm வரை

தொடர்பு: 075 546 2614 — நிர்வாகி Mrs J. செந்தூரன்


## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை இராமசந்திரன்

(முன்னாள் கணக்கு பதிவாளர்-சர்வோதயம், கொழும்பு)

பறாளாய் றோட், சுழிபுரத்தை சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராமசந்திரன் நேற்று (17.11.2014) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், கோவிந்தம்மாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற விக்னேஷா மற்றும் வினோதினி, வாலாம்பிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மார்கண்டு (அதிபர்), சுப்பிரமணியம், பொன்னம்மா (மலேசியா), கமலாதேவி, முருகவேல் (கிழக்கு இலங்கை கடதாசி கூட்டுத்தாபனம்) மற்றும் அருணாசலம் (ப.நோ.கூ.சங்கம், சங்கானை), இராபட்சம், மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பறாளாய் றோட், சுழிபுரம். (54377)(10.6) — சி. அருணாசலம் (தம்பி)

## மரண அறிவித்தல்



### தம்பு குணநாயகம்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, முரசுமோட்டை ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் தற்போது நல்லூரில் வசித்து வந்தவருமான தம்பு குணநாயகம் நேற்று (17.11. 2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை-பராசக்தி தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற இராசநாயகம் மற்றும் இராசலட்சுமி (கொழும்பு), சிவபாக்கியம்(அமெரிக்கா), சிவலிங்கம் (ஜேர்மனி), சந் தானலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற தயாளன் (கனடா), அகிலன்(கனடா), சாந்தினி(கல்வி அமைச்சு வடமாகாணம்), சசிதரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வக்சலா, சசிகலா, K.T.கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), சுபாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மெலோனி, அபினாத், ஷரோன், ஷாரங்கி, அஸ்வினா, அஹானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் மதியாபரணம், திலகவதி, விஜயரட்ணம், காலஞ்சென்றவர்ளான சரோஜினிதேவி, நடராசா, சிங்கராசா, தியாகராசா, சேனாதிராசா மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தொ.பே: 021 222 4073 — K.T.கணேசலிங்கம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 17.10.2014 நடைபெற்ற 11 ஆவது பட்டமளிப்பு விழாவில் கணக்கியல் உயர்தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றமைக்காகவும் இன்று (18.11.2014) தனது 32ஆவது அகவையை கொண்டாடும்

**கிரிஷ்ணவாசன் நவாசன்**
(HNDA)

அவர்களை மேன்மேலும் பல உயர் பட்டங்கள் பெற்று சிறப்புற்று வாழ மனதார வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

Congratulations — Best Wishes!

நண்பர்கள்,
தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத் தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள்புரிப வரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத் திற்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவை கள் எவ்வளவு முக்கியமாக விருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றென்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன். (உங்கள் தேவை எவ்வளவு கடினமாயிருப்பினும் இச் செபத்தை 3 நாள்கள் தேவையை கேளாமல் தொடர்ந்து சொல்லிவர தேவை நிறைவேறும்)

அடியாள்

(54360) (5.6.3)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.10.2013** வரையும் அடகுவைத்து மீட்கப் படாத நகைகள் **09.12.2014** தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(க/17730)(5.3.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 18 . 10 . 1979



விண்ணில்: 19 . 10 . 2014

**செல்வி மணிமாலா செல்லத்துரை**

18.11.2014 செவ்வாய்க்கிழமை

சாகாமல் இருப்பது சாத்தியமில்லைதான் ஆனால்- நீ
வாழாது பாதியிலே நெருப்போடு போனதேனோ
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
மண்ணைவிட்டு மறைந்து விண்நோக்கி சென்றாலும்
எம் நெஞ்சம் விட்டு
நீங்காது உன் நினைவலைகள்
உன் நினைவுகளை மறக்க முடியாமல்
ஈர விழிகளுடன் துயருறுகின்றோம்.

தியேட்டர் லேன்
இணுவில் கிழக்கு, இணுவில். — தகப்பன், சகோதரர்கள்.

(54353)(10.6)

## மழலை மகிழ்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

திருநெல்வேலி 'சிமாட்கிட்ஸ்' முன்பள்ளியின் குழந்தைகளுக்கு மழலை மொழியில் 'கதை சொல்லல்' மற்றும் 'பொம்மையுடன் பேசல்' போன்ற மழலை மகிழ்வு நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வனிதாமணி சோமசுந்தரம்
அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா அருளம்பலம்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ் இந்து
ஆரம்ப பாடசாலை சமூகம்.

(சி17736)(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேசசெயலக கிராம அபிவிருத்திப் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் போதனாசிரியராகக் கடமையாற்றும்
திருமதி வேல்வரராணி நந்தகுமார்
அவர்களின் அன்புத் தந்தை

**இ.மாணிக்கம்**

16.11.2014 இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும் பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலக
ஊழியர் நலன்புரி சங்கம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(5354)(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர்
திருமதி சிவமதி மோகனதாஸ்
அவர்களின் அன்புத் தந்தை

**வேலாயுதர் நாகமுத்து**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் மறைவினால் எமது பாடசாலைச் சமூகம் துயருறுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்.

(54361)(6.6.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஸ்ரீகிர்தராணி ஜெனீஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை

**இளையவர் மாணிக்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

(54359)(5.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமதுகல்லூரியின்
அபிவிருத்திச் சங்க
உறுப்பினர்செல்வன்
அபிராமனின்
அன்புத் தந்தை

**மாணிக்கம் யோகேஸ்வரன்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(54364)(5.6)

## துயர் பகிர்வு



15.11.2014 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த
**அருந்தவம் பிரட்ன்**
அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள்
க.ராகுலன்
077 926 2946

மனாற்பகுதி,
ஆவரங்கால் கிழக்கு,புத்தூர்.

(54387)(5.6)

## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் ராசேந்திரம்



வட்டுக்கோட்டை வடக்கு ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட நாகரத்தினம் ராசேந்திரம் (15.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம்-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுணதேவியின் அன்புக் கணவரும், முத்தமிழ்ச்செல்வி, கமலராணி, ரேணுகா, சர்மிளா, சஞ்சிகா, யசோதரன், தனுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னமணி, சிவசுப்பிரமணியம், உருத்திரன், பழனியாண்டி, பப்பாதியம்மா, இராசபூபதி மற்றும் சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளன், உதயகுமாரன், கமலநாதன், தவராஜா, சிவதாஜ், பானுஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு வடக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(54352)(10.6)

## மரண அறிவித்தல்

### இராசையா மயில்வாகனம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மயில்வாகனம் (15.11.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமணியின் அன்புக் கணவரும், கந்தராசா (லண்டன்), பரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கேஸ்வரியின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிவநாயகம் மற்றும் நவரத்தினம் (தலைவர் உரும்பிராய் முருகன் கோயில்.), காலஞ்சென்ற சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயரத்தினத்தின் சகலனும், யதீஷனன், யதுநந்தன், அதிஷ்டன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C17737)(10.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தையா அருளம்பலம்



எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அருளம்பலம் நேற்று (17.11.2014) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா- நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லக்கண்டுவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தவமணி மற்றும் வனிதாமணி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), விக்கினேஸ்வரராசா, செல்வராசா (பிரதி விவசாயப் பணிப்பாளர்-கிளிநொச்சி), அரியராசா (கனடா), குபேந்திரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம் (அதிபர், யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை), சிவஞானசோதி, சாந்தி, ராகினி (கனடா), புஸ்பா (கனடா) ஆகியோரின் மாமனும், துவாரஹா, துவாரஹன், கீர்த்திஹா, ஜயந்திகா, ஜசோகா, சாகித்தியா, சுபோஷியா, விஹுஷாந், சிந்துஜன், தனுஜன், அபினாஸ், அகிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் படித்த மகளிர் திட்ட இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(54363)(10.6.3)

## மரண அறிவித்தல்

### பொன்னர் பாலசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கந்தசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் பாலசிங்கம் நேற்று (17.11.2014) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - தங்கம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், ரஞ்சிதாதேவியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், கெங்காதரன், சுகிர்தன் (ஈசன்), சஜீபன், றஜனி, ராதிகா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர் களான பஞ்சலிங்கம், துரைராசா, செல்வராசா (துரை) மற்றும் பாக்கியம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் கமலாதேவி, செல்வம் ஆகியோரின் மைத்துனரும், சிவநாதன், பேதிரிஸ், குணா, அனுஜா, வதனி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமிகோயிலடி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(54366)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிளிநொச்சியில் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை
தொடர்பு: 071 297 2065

## வீட்டுப் பணிப்பெண் தேவை.

கிளிநொச்சி நகரில் உள்ள வீட்டுக்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 8910 793

## உடனடி வேலைவாய்ப்பு

செரண்டிப் என்ரப்பிறைசஸ் நிறுவனத்திற்கு உடனடியாக ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை. விரும்புபவர்கள் உடனடியாக
**செரண்டிப் என்ரப்பிறைசஸ்**
**இல.179, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.**
தொடர்புகளுக்கு: 071 664 7692

## பதவி விலகினார் ரத்ன தேரர்

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தவிசாளர் அத்துரலிய ரத்ன தேரர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். அத்துடன் அவருக்கு வழங்கப்பட்டிருந்த அரச வாகனத்தையும் மீளவும் ஒப்படைத்துள்ளார். இலங்கை அரசிலிருந்து ஹெல உறுமய வெளியேறுவதற்கான ஆரம்பிக்கட்ட எச்சரிக்கையாகவே இதனை அவர் மேற்கொண்டுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்று. இலங்கை அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தி வருகின்றது. இதற்காக அந்தக் கட்சியின் தவிசாளர் 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தையும் முன்வைத்துள்ளார். அதனை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனாலும் அரசு அது தொடர்பில் அக்கறை காட்டவில்லை. தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருக்கும் என்றே தெரிவித்து வருகின்றது.

இந்தநிலையில், ஹெல உறுமயவின் தவிசாளர் அத்துரலிய ரத்ன தேரர், திம்பிலிப்பிட்டிய பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். அத்துடன் வழங்கப்பட்ட அரச வாகனத்தையும் மீள ஒப்படைத்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில்ஹெலஉறுமயவின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது. அதில் அரசிலிருந்து விலகுவது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று உத்தியோகபூர்மாகத் தெரிவித்துள்ளனர். ஆனாலும் அரசிலிருந்து விலகுவதற்கான எச்சரிக்கையாகவே அத்துரலிய ரத்ன தேரர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (மல்லாகம்)
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2015

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 01.12.2014 திங்கட்கிழமை பி.ப 3 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 02.12.2014 செவ்வாய்க்கிழமை ந.ப 12 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 02.12.2014 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 50,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | மல்லாகம் பொதுச்சந்தை | - | 150,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 250.00 |
| 04 | மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 155,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 225,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் சந்தை கோழிக்கடை | 1,050.00 | 680,000.00 | 25,000.00 | 1,000.00 |
| 08 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 650.00 | - 24,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 650.00 | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | - | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை கோழிக்கடை | 1,050.00 | 55,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | - | 60,000.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 275,000.00 | 25,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 56,000.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு :

- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தை, இறால் மடம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழிஇறைச்சி,கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
18.11.2014

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி கமலதாஸன் சிவமதி**
அவர்களின் அன்பு மாமனார்
**வைரமுத்து கணபதிப்பிள்ளை**
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/17746)
(10)

**பிரதேச செயலக உத்தியோகத்தர்,**
**நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி**

## வீடு விற்பனைக்கு/வாடகைக்கு

சுதுமலையில் நன்னீர் (முற்றிலும் Pipeline செய்யப்பட்ட) சுற்றுமதிலுடன் கூடிய, 3 அறை, 2 ஹோல், தனியான மேல் மாடி கொண்ட புது பொலிவுடனான வீடு உடன் விற்பனைக் குண்டு. கேள்விகள் கோரப்படுகின்றன.

T.P: 077 291 2656, 001 647 607 9624, 077 438 9802.

(Campus, JaffnaTown க்கு குறுகிய பயண தூரம்) வாடகைக்கு தேவைப்படுபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

17.11.2014 அன்று பி.ப 2 மணியளவில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்திருக்கும் ஒறியன் ஹொட்டேலில் மதிய உணவு உண்ணும்போது பெறுமதியான தங்கக் கைச்சங்கிலி தவறி வீழ்ந்து விட்டது. ஒறியன் ஹொட்டலின் ஊழியர்களையும், சங்கிலியை கண்டெடுத்து தந்த சுன்னாகம் பிரிவைச் சேர்ந்த J/196 கிராம சேவையாளரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

(C/17750)
(10.6)

**அளவெட்டி ரமேஸ்**

## POST OF NIGHT MANAGER

**பிள்ளையார் இன் ஹொட்டலுக்கு** மேற்குறிப்பிட்ட பதவிக்கு உடனடியாக அனுபவ முள்ள ஆள் தேவை. சகல விதமான வேலைகளும் தெரிந்தவர்கள் உங்களின் சுயவிவரக்கோவை (CV) யுடன் 19ஆம் திகதி முற்பகல் 10 மணியிலிருந்து நேரில் வரவும்.

**Tel : 021 222 2829**
**Fax : 021 222 4449**
**Email : pillaiyar.in@gmail.com**

(54373)
(10)

**நிர்வாகம்.**

## கண்ணீர் அஞ்சலி

வேலணைமேற்கைப் பிறப்பிடமாகவும், 118/4, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்டவரும், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் **விகிர்தன்** அவர்களின் அன்புத் தாயாருமான

**அமரர் பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்**

அவர்கள் 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்

"வையத்துள் வாழ்வாங்குவாழ்வான் -வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற தெய்வீகப் புலவர் திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க எம் மண்ணுலகில் வாழ்ந்த அமரர் பத்மாசினிஅம்மா சிவபாதசுந்தரம் அவர்களின் திடீர்மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. பத்மாசினிஅம்மா அவர்களும் அவர் மகன் விகிர்தன் அவர்களும் எம் ஆதரவற்ற இல்லக் குழந்தைகளுக்கு பல்வேறு வழிகளிலும் உதவியமையை நாம் என்றும் நினைவில் நிறுத்திக் கொள்ளத்தக்கதொன்றாகும். எனினும் "பிறப்புண்டேல் யாவர்க்கும் இறப்புஉண்டு" என்ற உலக நியதிக்கு இணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆண்டாண்டுகாலம் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்-வேண்டா!
நமக்கும் அதுவழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்

அதனால் அவர்தம் பிரிவுக்காக எம் இரங்கலைதெரிவித்துக் கொள்வதுடன் இவரது ஆத்மா இறைவனின்திருவடியில் சங்கமமாகி நிலைத்து நிற்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/17747)
(10.6)

**தி.இராசநாயகம்**
**முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்,**
**மகாதேவாஆச்சிரம சிறுவர் இல்லத் தலைவர்மற்றும் பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள், இல்லக்குழந்தைகள் ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

# தொடர்ச்சிகள்

## ஆடைத்

யாலயத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-14)

## நலன்புரி

என்பதால் அவற்றை அளவீடு செய்து, விலை மதிப்பீடு செய்து காணி உரிமையாளருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். அதற்காகவே அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று குறிப்பிட்டார். (த-5)

## மாதகலில்

ஆனாலும் பொதுமக்களினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகளினதும் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் மீளவும், குறித்த காணியை அளவிடுவதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.
நேற்றுக் காலை குறித்த இடத்துக்குச் சென்று நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்ய முயன்றபோது, அங்கு சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன் மற்றும் வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், உபதவிசாளர் ஆகியோர் நில அளவை நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன்போது காணி உரிமையாளர், காணி உறுதியைக் காட்டி இது தனது காணி என்றும், இதனை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார்.
இதனையடுத்து நில அளவையாளர்கள், குறித்த காணியைக் கடற்படையினருக்கு வழங்க முடியாது என்பதை எழுத்து மூலம் வழங்குமாறு காணி உரிமையாளரிடம் கோரினார். அதற்குச் சம்மதித்து, கடற்படையினருக்குக் காணியை வழங்க முடியாது என்று எழுத்து மூலம் கடிதம் வழங்கியுள்ளார். இதனையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றுள்ளனர். (த-5)

## வேலையற்ற

லிங்கம் நமணியும் தெரிவு செய்யப்பட்டனர். இணைப்பாளர்களாக செல்லத்துரை சிவகுமார், ஆனந்தராசா ரஞ்சிதா, தியாகராசா ராகவன், மகாலிங்கம் உசாந்தினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
கடந்த காலங்களில் பட்டதாரிகளுக்கு ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப் போன்று ஒன்றியத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் அரச அதிபருடன் இது குறித்துப் பேசி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படவுள்ளன. இந்தக் கலந் துரையாடலுக்குச் சமுகமளிக்கத் தவறிய வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைத் தமது பிரதேசத்துக்கான இணைப்பாளர்களூடாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## கவனம்

வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இப்படி ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மானிப்பாய் பகுதியில் இடம்பெறுகின்றது.
மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன்பாகச் செல்லும் முத்துத்தம்பி வீதியில் குறிப்பிட்ட இடத்தில் சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன.
மேற்படி வீதியில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைந்துள்ள காணிப் பகுதியிலுள்ள இரு பக்க வேலிகளும் பற்றை வளர்ந்து சுமார் பத்து மீற்றர் நீளம்வரை மறைவிடம் போல் காட்சியளிப்பதனால் இப்பகுதியில் ஏற்கனவே திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.
இதையடுத்து கவனம் தாலிக் கொடி, சங்கிலி, அறுக்கும் இடம்" என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. (த-115)

## அந்தோனியார்

நீதிமன்றால் சொரூபத்தை அகற்ற உத்தரவு வழங்கப்பட்டது. இதனையடுத்து மீனவர்கள் மேன்முறையீடு செய்தனர். குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மாந்தை உப்புக்கூட்டுத்தாபனம் வழக்கை மீளப் பெற்றுள்ளமையால் மீனவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (த-14)

## அரசின்

புலம்பெயர் தமிழர்கள் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் பங்கேற்பதற் காகவே இவர்கள் அங்கு சென்றனர்.
அந்த நிகழ்வில் பங்கேற்ற இவர்கள் இருவரும் புலம்பெயர் தமிழர்கள், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் அதிகாரிகள் மட்டத்திலான தூதுக் குழுவினர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றனர்.
குறிப்பாக, ஐ.நா. விசாரணை, வடக்கு, கிழக்கில் அரசும் அதன் படைகளும் முன்னெடுத்து வரும் அராஜக செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது அமெரிக்க அதிகாரிகளுக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தி வருகின்றார்கள்.
அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் புலம் பெயர் தமிழர்களின் அபிப்பிராயத்தையும் இவர்கள் கேட்டு வருகின்றனர். இவர்கள் இருவரும் எதிர்வரும் 22ஆம் திகதி நாடு திரும்புவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

## புனிதமான

நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:
கார்த்திகை மாதம் விசேடத்துக்குரிய புனிதமான மாதமாகும். ஏனெனில் இம்மாதம் 26ஆம் திக எமது தேசியத் தலைவர் பிறந்துள்ளார். இதேபோல் எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் நினைவுநாள் கார்த்திகை 27ஆகும். இதனால் இந்த மாதம் புனிதமடைகிறது. ஆனால் அரசுடன் இணைந்து இணக்க அரசியல் பேசி எம் இனத்தை நசுக்க நினைக்கும் புல்லுருவியும் பிறந்தது இம் மாதம் 10ஆம் திகதி என்பதை அண்மையில் பத்திரிகை வாயிலாக அறிந்தேன்.
தற்போது நான் பங்குபற்றும் நிகழ்வுகளில் இளைஞர் கூட்டமே அதிகமாகக் காணப்படுகின்றது. அதற்கு விளையாட்டுத் தான் காரணமாகவுள்ளது. அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தின் இறுதிநாள் நிகழ்விலும் இன்றைய இறுதிநாள் நிகழ்விலும் இளைஞர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.
இந்த நிகழ்வை திக்கம் இளைஞர்கள் மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்தியுள்ளனர். இங்கு பல இளைஞர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் யோசிக்க வேண்டும். தற்போது மாவீரர் நாள் வரப்போகின்றது என்பதால் இராணுவத்தையும், புலனாய்வுப் பிரிவினரையும் வீதிகளில் கொட்டி விட்டுள்ளார்கள். அவர்கள் எங்கும் ஊடுருவலாம். ஆனால் எம் மனதை ஊடுருவ முடியாது. அதேபோல் இவர்கள் எத்தனை பேரைக் கொன்று குவித்தாலும் எங்களுக்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூருவோம். இங்கு நான் மாவீரர் எனக் குறிப்பிடுவது விடுதலைப் புலிகளையே சாரும்.
தற்போது ஏதாவது சூழ்ச்சி செய்து பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்து பல்கலைக்கழகத்தை மூடிவிட வேண்டும் என எண்ணு கிறார்கள். இதேபோல் விடுவிக்கப்பட்ட போராளிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எமக்காக உயிர்நீத்தவர்களை மறந்துவிடக்கூடாது. எந்த இடர்களிலும் நாம் இதனை நிச்சயமாகச் செய்ய வேண்டும். இத்துடன் எமது போராட்டம் முடியவில்லை. அரசியலில் எந்த வழிகளில் எந்த வகையில் போராட முடியுமோ அந்த வகையில் போராடுவோம் - என்றார். (த-422)

## மீனவர்

கச் சந்திக்க முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஸ்ணன் தலைமையில் 15 மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று டில்லிக்குச் சென்றுள்ளனர்.
மீனவர் சங்கப் பிரதிநிதி கள் இன்று வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து மீன வர்களை விடுவிக்குமாறும், ஏற்கனவே இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள படகுகளை விடுவிக்குமாறும் கோரவுள்ளனர்.
இதேவேளை, தமிழகத்தில் மீனவர்கள் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தையும், மீனவர்களின் குடும்பங்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தையும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-14)

## ஏழைகளுக்கான

எழுச்சி, திவிநெகும வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசின் பங்காளிக் கட்சி ஒன்றே இந்த உதவிகள் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்று நெறிப்படுத்துகின்றது. தமது கட்சி ஆதரவாளர்கள் அல்லாதவர்களுக்கு உதவிகள் கிடைப்பதை அந்தக் கட்சி தடுத்து வருகின்றது என்று கிராம மக்களில் ஒரு சாரார் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் குறித்த அரசியல் கட்சியின் காலடிகளுக்குச் செல்ல விரும்பாத வறிய குடும்பங்கள் பல பாதிக்கப்படுகின்றன.
இது குறித்து பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளும் அமைதி காத்து வருகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (உ-426)

## புலிகளுடன்

வேயும், தானும் நிதியுதவி வழங்கியதாக மஹிந்த ராஜபக்ஷ சுமத்தியிருந்த குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார்.
குருநாகல் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வேயின் முன்னைய அரசு விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதை உறுதி செய்யக்கூடிய ஆதாரங்கள் உள்ளன என்றும், இது தொடர்பில் விசாரணை தேவை என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தார் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.
இது தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது 'ருவிட்டரில்' பதில் வழங்கியிருந்த நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக், தேர்தலுக்காக ஜனாதிபதி மஹிந்த பொய்யுரைக்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இது தொடர்பில் முழுமையான அறிக்கை வெளியிடப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில், எரிக் சொல்ஹெய்ம் வெளியிடவுள்ளதாகச் சொல்லப்பட்ட அறிக்கை தமக்கு கிடைத்துள்ளது என்றுதெரிவித்த, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் ஊடகம் அதிலுள்ள சில விடயங்களை பிரசுரித்துள்ளது.
மஹிந்தவுக்கு எல்லாம் தெரியும் அமைதி முயற்சிகளில் முழுமையாக ஈடுபடுவதற்காக, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துக்குத் தேவையான பொருளாதார வளங்களை நோர்வே வழங்கியது. அதில், ஒரு வானொலித் தொடர்பு கருவியும் உள்ளது. அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசின் வெவ்வேறு தலைவர்களும் இதுபற்றிய முழுமையான தகவல்களையும் அறிந்தேயிருந்தனர்.
இலங்கையின் சகல அமைதி முயற்சிகள் தொடர்பாகவும், கொழும்புடன் வெளிப்படைத் தன்மையை நோர்வே கடைப்பிடித்தது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு முன்னரே டசின் கணக்கான தடவைகள் அவரைச் சந்தித்துப் பேசியுள்ளேன். அமைதி முயற்சியின் எல்லா விடயங்கள் குறித்தும் அவருக்கு முழுமையாகத் தெரியப்படுத்தியிருந்தேன்.
**புலிகளுடன் பேசச் சொன்னார்**
மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக இருந்த போதும், பிரதமராக இருந்த போதும், எமது அமைதி நோக்கங்களுக்கு முழுமையான ஆதரவை தெரிவித்திருந்துடன், நோர்வேயின் அமைதி முயற்சிகள் தொடர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார். 2005 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பகிரங்கமாகவும், தனிப்பட்ட முறையிலும், இலங்கைக்கு வருமாறு அவர் என்னை அழைத்திருந்தார்.
தனது சார்பில் ஒரு தொகையான அரசியல் கோரிக்கைகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் முன்வைக்குமாறு ராஜபக்ஷ என்னிடம் கேட்டுக்கொண்டார். எல்லாத் தகவல்களும் முறைப்படி விடுதலைப் புலிகளின் தலைமைக்கு பரிமாறப்பட்டன. ஒரு காலப்பகுதியில் கொலைகள் நிறுத்தப்பட்டிருந்தன.
சாட்சியமளிப்பது கடமை
அமைதி முயற்சிகளில் ஆற்றிய பங்களிப்புக்காக ராஜபக்ஷ எனக்குத் தனிப்பட்ட முறையிலும், நோர்வேக்கும் நன்றியை கூறியிருந்தார். கடைசியாக அவரை 2010 ஆம் ஆண்டு சந்தித்த போது, நோர்வேயின் அமைதி முயற்சிகளை அங்கீகரித்து, இலங்கைக்கு வருமாறும், அவர் அழைத்திருந்தார்.
விடுதலைப் புலிகள், இலங்கை அரசு என்று இரண்டு தரப்பினராலும், இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களையும், நேர்மையாக வழங்குவது எனது கடமை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தரம் 5

வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
கூடிய வெட்டுப் புள்ளி தமிழ் மொழி மூலத்தில் 152 புள்ளிகளாகவும், சிங்கள மொழிமூலத்தில் 157 புள்ளிகளாகவும் காணப்படுகிறது. தமிழ் மொழி மூலத்தில் கொழும்பு, ஹம்பகா, களுத்துறை, கண்டி, மாத்தளை, மாத்தறை, காலி, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்களில் வெட்டுப்புள்ளி 152 புள்ளிகளாகவும், வடமாகாணத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மொனறாகலை மாவட்டங்களில் 150 புள்ளிகளாகவும், வடக்குடன் நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் 149 புள்ளிகளாகவும், புத்தளம், அநுராதபுரம், இரத்தினபுரி மாவட்டங்களில் 148 புள்ளிகளாகவும் வெட்டுப் புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (ற-4)

## இலங்கை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் பட்டம் பெற்றதுடன், 1982 - 83 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழக கணித பீடத்தில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.
மதிப்புமிக்க சர்வதேச பொறியியலாளர் அமைப்பால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும், ஆர்ச்ரி கொல்வெல் ஒத்துழைப்பு பொறியியல் பதக்கம் இவருக்கு வழங்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள அந்த அமைப்பின் நிகழ்வில் இந்த விருது வழங்கப்படும்.
இந்த உலகளாவிய விருதை வழங்கும், அமைப்பு உலகெங்கும் உள்ள 138 ஆயிரம் பொறியியல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக்கொண்டது. (ற-5)

## பொது

யும் காணப்படுகின்றது.
இந்தநிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது என்று அறியமுடிந்தது. எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், உயர்பீடத்தைக் கூட்டி அதனூடாக இந்த முடிவை அறி விப்பதற்கு மு.கா. திட்டம் வகுத்துள்ளது.
அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனைகள் சில வற்றை முன் வைத்துவிட்டு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டிலேயே மு.கா. உள்ளது என்றும், அந்த உறுதிமொழிகளுக்கு உரிய பதில்கள் கிடைக்காவிட்டால், நாடாளுமன்றத் தேர்தலின்போதே மு.கா. தீர்க்கமான முடிவை எடுக்கும் என அக்கட்சிவட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.
ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் கொழும்பில் மு.கா. வின் உயர்பீடக் கூட்டம் நடைபெறவுள்ளது. அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என எழுப்படும் குரலுக்கு அரசுக்குள் இருந்து கொண்டே ஆதரவு வழங்கவும் மு.கா. உத்தேசித்துள்ளது. (ற-சி)

## தீவிர

துப்பாக்கியால் சுட்டு கொலையைச் செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரிடமும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் துருவித் துருவி விசாரணை' நடத்தி வருகின்றனர். எனினும் இது தொடர்பிலான உத்தியோகபூர்வ தகவல் எதனையும் பொலிஸ் பேச்சாளர் தரவில்லை. அவருடன் பல தடவைகள் தொடர்பு கொண்டபோதும் நேற்றிரவு வரை தகவல்களைப்பெற முடியவில்லை.
சம்பவ இடங்களில் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்களை பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
முன்னாள் போராளியான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது 40) கடந்த புதன்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது சடலம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியை அருகிலிருந்த வீட்டு வேலியோரம் இருந்து தாம் மீட்டனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (உ-4)

## நேரில்

சுன்னாகம் பிரதேசத்துக் கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பிலும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பிலும் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவையால் 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு வழங்கும் அறிக்கையின் அடிப்படையிலேயே, இந்தப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
கடந்த 13 ஆம் திகதி, மத்திய சுற்றாடல் அமைச்சின் கொள்கைத் திட்டப் பணிப்பாளர் அஜித் சிறேவா தலைமையில் குறித்த குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள, பாதிக்கப்பட்ட கிணறுகளை நேரடியாகச்சென்று பார்வையிட்டனர்.
இது தொடர்பிலான அறிக்கை, அமைச்சரவைக்கு விரைவில் சமர்பிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின்னரே, மேற்படி பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பது தொடர்பிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## பிசுபிசுத்த

திட்டங்களுக்கு மாத்திரமே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்ட பொதுநலவாய மாநாட்டின் வர்த்தக மன்றக் கூட்டத்தில், 10 பில்லியன் டொலர் முதலீட்டை எதிர்பார்த்து 50 முதலீட்டுத் திட்டங்கள் இலங்கையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மாநாடு முடிந்து ஓராண்டு நிறைவடைந்துள்ள போதும் அவற்றில் இரண்டு திட்டங்களில் மாத்திரமே முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம், மூன்று பிரதான சீன நிறுவனங்கள் முதலீட்டுச் சபையுடன் உடன்பாட்டில் கையெழுத்திட்டன. அவற்றில், இரண்டு பொது நலவாய மாநாட்டில் முன்வைக்கப்பட்ட 50 திட்டங்களில் உள்ளடக்கப்பட்டவையாகும்.
இந்த ஆண்டு தொடக்கத்தில் 12 முதலீட்டாளர்களுடன் பேசி வருவதாக, இலங்கை முதலீட்டுச் சபை கூறியிருந்த போதிலும், எஞ்சிய 48 திட்டங்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரத் தவறியுள்ளன.
இது குறித்து தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்று இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ற-5)

குற்றங்களும் கைதுகளும்

ஹற்றன்

## பஸ்ஸில் போதைப்பொருள் கடத்திய நடத்துநர் சிக்கினார்

ஹற்றன் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப்பொருள் பக்கெற்றுக்களை பயணச்சீட்டு புத்தகத்தினுள் மறைத்து வைத்திருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான ஹற்றன் டிப்போ பஸ் நடத்துநர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்த குறித்த பஸ்ஸில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலை அடுத்தே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்படவுள்ளதுடன், பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

கொழும்பு

## மாலக்க சில்வாவின் நண்பர்கள் நால்வர் கைது



பம்பலப்பிட்டி இரவு களியாட்ட விடுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வாவினது நண்பர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலக்க சில்வாவின் கோடீஸ்வர வியாபார நண்பர், சமையல்காரர், சிகை அலங்காரக் கலைஞர் மற்றும் தனி பாதுகாவலர் ஆகியோரே இவ்விதம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் களனி, பன்னிபிட்டி, குளியாப்பிட்டி மற்றும் ராஜகிரிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை புதுக்கடை நீதிமன்றில் முன்னிலை செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ)

மட்டக்களப்பு

## மட்டக்களப்பில் இந்தியப் பிரசை கைது

விசா இல்லாமல் கடந்த இரண்டு வருடங்களாக மட்டக்களப்பில் வசித்து வந்த இந்தியப் பிரசை ஒருவரை, மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, வவுணதீவு கன்னங்குடா இலுப்பட்டிச்சேனையிலுள்ள வீடொன்றில் வைத்து, குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தில்லியன்பழ சமதோஸ (வயது 22) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர், கடந்த இரண்டு வருடங்களாக நுழைவு விசைவு இல்லாமல் வசித்து வந்துள்ளதாக, ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் மேலும் கூறினர். (வ)

# மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம அலுவலர்கள் பணிப்புறக்கணிப்பு




மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 48 பிரிவுகளிலும் கடமையாற்றும் கிராம அலுவலர்கள், அந்தப் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்தவாரம் கூழாவடி மதுபானச்சாலையின் உரிமையாளர் ஒருவரால் கிராம அலுவலர் ஒருவர் தாக்கப்பட்டதுடன், அவரது ஒளிப்படக் கருவி மற்றும் கையடக்கத் தொலைபேசியும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், அவருக்காக நியாயம் வேண்டியும் மேற்படி கிராம அலுவலர்கள் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், தங்களின் பிரிவுகளுக்கு சென்று கடமையாற்ற அச்சமாக உள்ளது என்று மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவித்துவிட்டு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக மேற்படி கிராம அலுவலர்கள் கூறினர்.

இருப்பினும், அத்தியாவசிய தேவை கருதி வருவோருக்கு மட்டும் அவர்களது தேவையைப் பூர்த்திசெய்து கொடுப்பதாக அவர்கள் கூறினர்.

மேற்படி கிராம அலுவலர்களின் பணிப்புறக்கணிப்புக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்தி உத்தி யோகத்தர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். (வ)

# மட்டு. மாவட்டத்தில் 12 பேருக்கு டெங்கு



மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுமார் 12 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பொதுச்சுகாதார பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பிரதேசத்தில் டெங்குத் தாக்கத்துக்குள்ளானோரில் பெரும்பாலானவர்கள் செட்டிபாளையம் மற்றும் களுதாவளையில் இனங் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

டெங்குத் தாக்கத்துக்கு உள்ளான ஒருவர் செட்டிபாளையத்தில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது.

இதன்படி செட்டிபாளையம் பகுதியில் இதுவரையில் 8 பேர் டெங்கு தாக்கத்துக்குள்ளாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் களுதாவளைப் பகுதியில் 4 பேர் டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் களுவாஞ்சிக்குடி பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரி மருத்துவர்கிருஷ்ண குமாரிடம் கேட்டபோது,

"செட்டிபாளையம் பகுதியில் 7 பேரும் களுதாவளை பகுதியில் ஒருவரும் டெங்கு தாக்கத்துக்கு உள்ளானதாக மருத்துவமனை அறிக்கைகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

செட்டிபாளையத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவருக்கு டெங்கு தாக்கம் உள்ள போதிலும் அவரின் இரண்டு சிறுநீரகங்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்ததாகவும் டெங்கு தாக்கமும் ஏற்பட்ட நிலையில் அவர் உயிரிழந்ததாகவும் தெரிவித்தார்.

டெங்குத் தாக்கம் உள்ள பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கை மற்றும் நுளம்பு பெருக்கம் உள்ள பகுதிகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான வகையில் காணிகளை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (வ)

## அஞ்சலி நிகழ்வும் குருதிக் கொடையும்

யாழ்ப்பாணம், நவ.18

இலங்கை விவசாயக் கல்லூரி, வவுனியா வளாகத்தில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவேளை படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 8ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் அதையொட்டிய குருதிக் கொடை நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு கல்லூரி வளாகத்திலுள்ள அச்சுதன் மண்டபத்தில் அதிபர் எஸ்.கைலேஸ்வரன் தலைமையில் மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்படவுள்ளது. (வ-ரி)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ .18

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் 2015ஆம் கல்வி ஆண்டுக்கான அனைத்து கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறும் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து விண்ணப்பங்களை அனுப்புமாறும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

# பாவனைக்கு உதவாத கருவாடுகள் மீட்பு



அம்பாறை, நவ.18

அம்பாறை, அக்கரைப்பற்று பிரதேசத்தில் பாவனைக்கு உதவாத சுமார் 450 கிலோகிராம் நிறை கொண்ட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கருவாடுகள் நேற்று திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொது சுகாதார பரிசோதகர் ஏ.எச்.பௌமி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

"அக்கரைப்பற்று பிரதேசத்தில் முறையாகப் பதப்படுத்தப்படாமல் பழுதடைந்த கருவாடுகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே கருவாடுகள் கைப்பற்றப்பட்டன.

முறையாக பதப்படுத்தப்படாமலும், சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக் கூடிய இடத்திலும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் கருவாடுகளில் புழுக்கள் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கைப்பற்றப்பட்ட கருவாடுகளை அழிப்பதற்கான நடவடிக்கையையும், குறித்த உரிமையாளருக்கு எதிரான சட்ட நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## மட்டக்களப்பு மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை கிளினிக்



மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைக்கான விசேட கிளினிக் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளதாக குறித்த மருத்துவமனையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு மருத்துவ அதிகாரி கே.ஜெயசுதன் தெரிவித்தார்.

இந்தநிலையில், எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுகாதார அமைச்சின் அழைப்புக்கு இணங்க, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த மருத்துவக் குழுவினர் இந்தச் சிகிச்சையை நடத்தவுள்ளனர்.

உடம்பில் ஏற்பட்ட எரிகாயங்கள், உளத்தாக்கத்தால் உடலில் ஏற்பட்ட காயங்கள், பிளவுபட்ட உதடுகள், விகாரமடைந்த முகங்களை உடையவர்கள் இந்தச் சிகிச்சையைப் பெறமுடியும்.

இதுதொடர்பான மேலதிக விவரங்களுக்கு மட்டக்களப்பு போதனா மருத்துவமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (வ)

## சத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வு திருநெல்வேலி பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். திருவிளக்குப் பூசை செய்ய விரும்புவோரை அதற்கான ஆயத்தங்களுடன் வருமாறு சத்திய சாயி சேவா நிலையம் [illegible] டுள்ளது.



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றி தற் போது யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் புதிதாக நியமனம் பெற்ற கனகாம்பிகைமலர் சிவபாதசுந்தரம் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஏ.ஆனந் தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பணிகளை ஆரம்பித்தார். (த-21)

# விக்கியின் நடவடிக்கைக்காக காத்திருக்கிறது வல்வை நகர்

## சிறப்பு விசாரணைக் குழுவின்அறிக்கை மீது

யாழ்ப்பாணம், நவ. 18
வல்வெட்டித்துறை நகரசபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக விசாரித்த சிறப்புக் குழு தனது அறிக்கையைசமர்ப்பித்துள்ளது.
அதன் அடிப்படையில் வடமாகாண முதலமைச்சரின் நடவடிக்கைக்காக அனைவரும் காத்திருக்கின்றனர்.
குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சபையை இடை நிறுத்தி வைக்க பிறப்பிக்கப் பட்டிருந்த உத்தரவும் கடந்த மாதம் 28ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளது. மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்காக அதிகாரிகள் காத்திருக்கின்றனர். முதலமைச்சரின் உத்தரவுகளுக்காகத் தாம் காத்திருக்கின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
வல்வெட்டித்துறை நகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம் உள்ளது. அனந்தராஜ் தலைவராக இருக்கின்றார். எனினும் கூட்டமைப்புக்குள்ளேயே அவருக்கு ஒத்துழைக்காத அணி ஒன்று உள்ளது. இதனால், செய்யவேண்டிய கொடுப்பனவுகளை அனுமதிப்பதற்கு சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் மறுத்து விட்டனர். இதனால் சபை முடங்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது.
இதனையடுத்து, ஜுலை மாதம் 28ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி வரையில்சபையைஇடைநிறுத்தி வைக்க வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் உத்தரவிட்டார். அந்தக் காலப்பகுதிக்குரிய நடவடிக்கைப் பொறுப்பை உதவி உள்ளூராட்சி ஆணை யாளரிடம் பாரப்படுத்தியிருந்தார்.
அத்துடன், பிரச்சினைக்குக் காரணமாகச் சொல்லப்படும் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதிபதியின் விசாரணைக்கும் உத்தரவிட்டிருந்தார். இந்த விசாரணையின் அறிக்கை கடந்த மாதம் 23ஆம் திகதி முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டு விட்டது.
அறிக்கையின் அடிப்படையில் சபையைக் கலைப்பதற்கோ, தலைவரைப் பதவி நீக்குவதற்கோ, உறுப்பினர்களில் ஒரு தொகுதியினரைப் பதவி நீக்கம் செய்வதற்கோ முதலமைச்சருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்காக அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். (உ-5)

## மூத்தோர் கௌரவிப்பு

அரச சேவையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களை ஒன்றிணைத்து செயற்பட்டுவரும் மூத்த பிரஜைகள் அமைப்பின் மூத்தோருக்கான கௌரவிப்பு நிகழ்வொன்று இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் இருந்து 300 பேரும், தெல்லிப்பழை மூத்தோர் பிரஜைகள் அமைப்பிலிருந்து 300 பேருமாக மொத்தம் 600 பேர் குறித்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.
இந்த நிகழ்வில் விழிப்புணர்வு நாடகங்களும், ஆன்மீகச் சொற்பொழிவுகளும் இடம் பறவுள்ளன. நிகழ்வின் இறுதியில் குறித்த 600 மூத்தோருக்குமான இல வச தொற்றா நோய் தடுப்பு வைத்திய முகாம் இடம் பெறவுள்ளதுடன் அவர்களுக்கான தீர்வுகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (த-ரி)

# வடக்கில் 80 கிராமங்களுக்கே இன்னும் மின்சாரம் இல்லை

## வடக்கின் வசந்தம் மின் விநியோக திட்டப் பணிப்பாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், நவ.18
வடக்கில் இன்னும் 80 கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்படவில்லை. எனினும் இந்த வருட இறுதிக்குள் வடக்கு முழுவதும் மின்சாரம் வழங்கப்படும் என்று வடக்கின் வசந்த மின்விநியோகத் திட்டப் பணிப்பாளர் எஸ்.குணசீலன் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடக்கு முழுவதும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மீள் குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் மின்னிணைப்புப் பணிகள் தாமதித்துள்ளன. எனினும் தீவகம் உட்பட மீள் குடிமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் மின்சார இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதனடிப்படையில்நேற்று முன்தினம் கச்சார்வெளி மற்றும் இத்தாவில் கிராமங்களுக்கு 400 குடும்பங்கள் பயனடையக்கூடிய விதத்தில் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.
இதேவேளை, பன்னங்கண்டி கிராமத்தில் 182 குடும் பங்கள் பயன்பெறும் வகையில் 18 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வாரம் மின்சாரம் வழங்கப்படவுள் ளது. இதனைப் போன்று கேரதீவுப் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.
வடக்கில் இன்னும் 80 கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்படவில்லை. தீவுப் பகுதிகளிலும் மின்சார இணைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. நெடுந்தீவுக்கும் வெகுவிரையில் மின்சாரம் வழங்கப் படும்-என்றார். (த-14)

# 3 லட்சம் பெறுமதியான றேடியேற்றர்கள் திருட்டு

## சுன்னாகத்தில் கடை உடைத்து

வலி.வடக்கு, நவ. 18
பலத்த பாதுகாப்பு நிறைந்த சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள றேடியேற்றர் கடையின் முன் கதவை உடைத்து சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான றேடியேற்றர்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் சுன்னாகம் நகர வர்த்தகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த சனிக்கிழமை இரவு 11.00 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கும் இடையில் இந்தத் துணிகரத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு அருகில் உள்ள றேடியேற்றர் கடையின் கதவுகளை உடைத்து அங்கு விற் பனைக்காக வைக் கப்பட்டிருந்த புதிய றேடியேற்றர்கள் உட்பட திருத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பதினைந்து றேடி யேற்றர்கள் திருடப் பட்டுள்ளன. குறித்த றேடியேற்றர்கள் வாகனத்தில் ஏற்றிச்செல் லப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின் றது.
சுன்னாகம் பகுதியில் இரவு நேரத்தில் பொலிஸ், இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகமாகவுள்ள நிலையில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளமை சுன்னாகம் வர்த்தகர்களை பெரும் அதிர்ச் சிக்கு உள்ளாக்கியுள்ளது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது. (த-86)

## பரிசளிப்பு விழா

சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையில் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகின்றது.
பாடசாலை அதிபர் ஏ.பிரான்சிஸ் சேவியர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசாவும், சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர், செல்வி அ.சா.மரியாம்பிள்ளை மற்றும் பாடசாலை முன்னாள் அதிபர் வே.சிவசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (த-29)

# சட்டவிரோதமாக வேப்பமரம் ஏற்றிச் சென்ற இருவர் கைது

வடமராட்சி, நவ 18
உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக வேப்பங் குற்றிகளை ஏற்றி சென்ற குற்றச்சாட்டில் ராஜ கிராமம் பகுதியை சேர்ந்த இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்திருக்கின்றனர் இவர்கள் பயணித்த உழவு இயந்திரமும் ஒரு தொகை வேப்பங்குற்றிகளும் நெல்லியடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்
நேற்றுக் காலை 9 மணியளவில் ராஜ கிராமத்தில் இருந்து கரவெட்டி நோக்கி வேப்பங் குற்றிகளுடன் உழவு இயந்திரம் ஒன்று பயணிப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கரவெட்டி சாமியன் அரசடி சந்தியில் வாகனத்தை வழி மறித்த பொலிஸார் அதனைச் சோதனை யிட்டு விசாரணை நடத் திய போது அது சட்டவிரோதமாக அனுமதி இன்றி ஏற்றி வரப்பட்டது எனத் தெரியவந்ததாக நெல்லியடி பொலிஸார் கூறினர்.
குறித்த உழவு இயந்திரமும் அதில் பயணித்த இரு சந்தேக நபர்களும் நேற்று மதியம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன்அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நெல்லியடி பொலி ஸார் தெரிவித்தனர். (த-109)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
After A/L What Next???
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது
Spoken English With Grammar - Quick Learning Course
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.
Diploma In English Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.
B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)
IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.
We gurantee success rate 6.5 band and above
A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)
(C/17537/7.6.3)
19.11.2014@3.00pm 22.11.2014@8.00am 23.11.2014@11.00am 24.11.2014@9.00am
No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

பதவிக்கான தேடல்
Optimo international
30 ஆண்டுகாலமாக சர்வதேச ரீதியில் இயங்கி வரும் எமது Canadµn நிறுவனத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் அக் கிளைகளுக்கு பணியாற்றுவதற்கு 5 பதவி வெற்றிடங்கள் உள்ளன.
★ O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
★ அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
077 077 1377, 077 190 8997, 077 188 2507

வேலையாள்கள் தேவை
★ பள்ளிவாசல் கட்டடம் கட்டுவதற்கு, தச்சு தொழிலாளிகள் (Shuttering) / கம்பி வேலை செய்பவர்கள் (Bar benders) / மேசன்மார் தேவை.
விவரங்களுக்கு:
021 320 2726, 077 375 1803
★ கொடிகாமம் வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு மேசன்மார் / மார்பிள் பதிக்க கூடிய மேசன்மார் / கார்பெண்டர்ஸ் / பார்பெண்டர்ஸ் உடனடியாகத் தேவை.
விவரங்களுக்கு:
(C/17738) (10.6)
071 328 6711, 077 458 0461, 0773751803

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 22.11.2014 சனி
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00
வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் - 18.11.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
SAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.